பக்கங்கள்: 24 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 11, ஞாயிற்றுக்கிழமை 25.06.2017 கதிர் 231

கண்கவர் ஆடைத் தெரிவுகளுக்கு
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

## பிரிந்தவர் கூடினால்...



## அனந்திக்கு அமைச்சர் பதவி வழங்க முதல்வர் விருப்பம்; மாவை எதிர்ப்பு!

கொழும்பு, ஜூன் 25

வடக்கு மாகாண சபையில் ஏற்பட்டுள்ள அமைச்சர் பதவி வெற்றிடம் குறித்து நேற்றைய சந்திப்பின்போது முதல்வர் விக்னேஸ்வரனும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் உரையாடினர் என்று நம்பகரமாகத் தெரியவந்தது.

அந்தப் பதவிகளில் ஒன்றைச் சபையின் ஒரேயொரு பெண் பிரதிநிதியான அனந்தி சசிதரனுக்கு வழங்குவது குறித்த ஆலோசனை ஒன்றை முதல்வர் பிரேரித்தார். எனினும், அதற்கு மாவை

பக்கம் 22 »

## காரைநகர் – நயினாதீவு படகுச் சேவை ஆரம்பம்

நயினை நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், பக்தர்களின்

பக்கம் 22 »

* அமைச்சுப் பதவிகள் குறித்து 3 நாள்களுக்குள் முடிவு
* அடிக்கடி சந்தித்துப் பேசுவதற்கு இருவரும் இணக்கம்
* கலந்துரையாடி, ஒன்றுபட்டுச் செயற்படுவதற்குத் தீர்மானம்

# மாவை - விக்கி திடீர் சந்திப்பு!

## ரமழான் நாளைதான்!

நேற்றிரவு இலங்கையில் தலைபிறை தென்படாததால் ரமழான் நோன்புப் பெருநாள் நாளையே கொண்டாடப்படும் என கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

## ஆரம்பித்த இடத்துக்கே மீண்டு(ம்) வந்தார் முதல்வர்

யாழ்பாணம், ஜூன் 25

**வடமாகாண சபைத் தேர்தலுக்கு தாம் வேட்பாளர் பட்டியலில் ஒப்பமிட்டு, தமது அரசியலை ஆரம்பித்த இடத்துக்கே - யாழ்ப்பாணம், மார்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்துக்கே - தமது அரசியல் வாழ்க்கையின் நான்கு ஆண்டுகளின் பின்னர் நேற்று மாலை மீண்டு(ம்) வந்தார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.**

**அங்கு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை சுமார் 30 நிமிட நேரம் சந்தித்து அவர் உரையாடினார்.**

கடந்த சில வாரங்களில் வடக்கு மாகாண சபையின் ஆளும் தரப்புக்குள் ஏற்பட்ட அரசியல் பதற்றம், கடந்த வாரம் திடீரெனத் தணிந்து, இணக்க நிலை ஏற்பட்ட சூழலில், மேலும் சுமுக நிலைமை உருவாகும் விதத்தில் மேற்படி சந்திப்பு நேற்று மாலை திடீரென நடந்தது.

மாவை. சேனாதிராசாவைச் சந்திப்பதற்குத் தாம் நேரில் வருகிறார் என்ற தகவலைத் தெரிவித்த நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் நேரடியாகத் தமிழரசுக் கட்சி அலுவல

பக்கம் 22 »

## வடக்கு மாகாண சபை தன் அதிகாரங்களைப் பயன்படுத்தாமல் வேறு தேவையற்ற நடவடிக்கையிலாம்!

### அரசமைப்பு விற்பன்னர் ஐயம்பதி எம்.பி. கண்டனம்



கொழும்பு, ஜூன் 25

முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையிலான வடமாகாணசபை, தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தாமல் தேவையற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதாக நவ சமசமாஜக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், ஐ.தே.க. சார் பான தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும், புதிய அரசமைப்புத்தயாரிப்பில் முன்னிற்பவருமான ஜயம்பதி விக்ரம ரட்ண தெரிவித்துள்ளார்.

பக்கம் 22 »

## மலேரியா பரப்பும் புதுவித நுளம்பு மன்னார் கரையோரப் பகுதியில்!

மன்னார், ஜூன் 25

மன்னார் கரையோரப் பகுதியில் மலேரியா நோயைப் பரப்பும் புதுவித நுளம்பு இனம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக மலேரியாத் தடை இயக்கத்தின் மன்னார் மாவட்ட பிராந்திய வைத்திய அதிகாரி கே.அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

இந்த நுளம்பு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பரவியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

'மலேரியா இல்லாத இலங்கை' என்ற சான்

பக்கம் 22 »

## அரச மருத்துவர்களின் வேலை நிறுத்தம் முடிவு

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்து வந்த பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கை நேற்று ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்து முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

'சைட்டம்' மருத்துவக் கல்லூரிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்செய்த பல்கலைக்கழக மாணவர்களை கடந்த புதன்கிழமை

பக்கம் 22 »




## சிறிய பௌத்த, சிங்களக் குழுவே இன, மத முறுகலைத் தூண்டுகிறது!

### சந்திரிகா அம்மையார் விவரிப்பு

சிறிய அடிப்படைவாத சிங்கள பௌத்த குழுவொன்று இந்த நாட்டில் இன மற்றும் மதங்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்த முயற்சித்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்

பக்கம் 22 »

## 10 இணையங்களுக்கு எதிராக சிறி எம்.பி. பொலிஸில் புகார்!

கிளிநொச்சி, ஜூன் 25

தமது நாடாளுமன்றக் கடிதத் தலைப்பு, பதவி முத்திரை மற்றும் ஒப்பத்தின் பிரதி ஆகியவற்றைப் பயன்படுத்தித் தாம் எழுதியமை போன்று போலிக் கடிதம் ஒன்றை உலவ விட்ட 16 இற்கும் மேற்பட்ட முகநூல் கணக்குகள் மற்றும் பத்து வரையான இணையத்தளங்களுக்கு எதிராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நேற்று கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு

பக்கம் 22 »



முறைப்பாடு செய்து விட்டு பொலிஸ் நிலையத்திலிருந்து வரும் போது....

## காணாமல்போனோர் பணியகத்தை உடன் அமைக்க கூட்டமைப்பு வற்புறுத்து

கொழும்பு, ஜூன் 25

காணாமல் போனோரைக் கண்டறிவதற்கான பணியகத்தை அமைக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு நீண்ட நாள்களாகியும் பணியகம் அமைக்கப்படாமையி

பக்கம் 22 »

# மௌனம் காப்பது பயங்கரமான விடயம்; அரசை எச்சரிக்கின்றது பௌத்த பீடம்!

கொழும்பு, ஜூன் 25

நாட்டில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் இன மோதல் வெடிக்கும் தறுவாயில் உள்ளது என்பதை வெளிப்படுத்தி வருகின்றன. ஏற்படவுள்ள மோதலை உடனடியாகத் தடுக்கவேண்டும்.

எனினும், இந்த விடயத்தில் அரசு மௌனம் காப்பது மிகவும் பயங்கரமான விடயமாகும் என்று நான்கு பிரதான பௌத்த பீடங்களில் ஒன்றாகிய ராமஞ்ஞ நிகாய பீடம் எச்சரித்துள்ளது.

அரசு சரியாகச் செயற்படாவிடின் பிரதான நான்கு பீடங்களும் இணைந்து நேரடியாகத் தலையிடவேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் அரசை அந்த பீடம் வலியுறுத்தி உள்ளது.

ராமஞ்ஞ நிகாய பௌத்த தேரர்களின் விசேட ஊடக வியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பு ஸ்ரீ போதிராஜ தர்ம நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் ராமஞ்ஞ நிகாய தலைவர் அக்கமஹா பண்டித வினயவிசாரத பூஜாபாத நாபான பேமஸ்ரீ மகாநாயக்க தேரர் தலைமையில் கலந்துகொண்ட உயர்நிலை பௌத்த தேரர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் இன்று இடம்பெற்று வரும் நிகழ்வுகள் மிகவும் மோசமான வகையில் அமைந்துள்ளன. பௌத்தம் மற்றும் சிங்களகொள்கைகளை அழித்து வரும் நிலைமையில் இன்று அரசின் செயற்பாடுகள் காணப்படுகின்றன.

இந்த நாடு அந்நிய ஆக்கிரமிப்பில் இருந்து விடுபட்ட காலத்தில் தனி சிங்கள பௌத்த கொள்கையில் கொண்டு செல்லப்பட்ட போதிலும் அதன் பின்னரான அரசியல் சூழ்நிலை இந்த நாட்டின் பௌத்த சிங்கள கொள்கையைப் படிப்படியாக அழித்துக் கொண்டுவருகின்றமையே உண்மையாகும்.

இன்று அரசு தனது ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள ஒவ்வோர் அமைப்புகளை வைத்துக் கொண்டு நாட்டில் இனவாதத்தைப் பரப்பி வருகின்றது.

கடந்த அரசும் இந்த அரசும் தமது தேவைக்காக சில மத அமைப்புகளை இயக்கி அதன் மூலம் இனவாத அரசியலை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நாட்டில் சட்டம் நீதித்துறை சரியாக செயற்படும் என்றால் இந்த நாட்டில் இனவாதம் ஒருபோதும் தலைதூக்கப் போவதில்லை. எனினும் அரசியல் காரணிகளுக்காக இன்று இனவாதம் பரப்பப்பட்டு வருகின்றது.

கடந்த முப்பது ஆண்டுகளில் இந்த நாட்டில் ஆயுத யுத்தம் ஒன்று இடம்பெற்ற காலத்திலும் கூட இந்த நாட்டில் கிராமங்களில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர்.

பயங்கரவாதிகள் ஒருபுறம் மோதல்களை மேற்கொண்ட போதிலும் மக்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டனர்.

எனினும் யுத்தம் முடிவுக்கு வந்த குறிப்பிட்ட சில காலத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனவாதம் தலைதூக்கி நாட்டில் வன்முறைகள் கட்டவிழ்ந்துள்ளன.

இப்போது நாட்டில் இடம் பெற்றுவரும் சம்பவங்கள் நாட்டில் இன மோதல் ஒன்று வெடிக்கும் தறுவாயில் உள்ளது என்பதை வெளிப்படுத்தி வருகின்றன.

இந்த மோதலை உடனடியாக தடுக்க வேண்டும். நாட்டில் எந்த மதமும் பாதிக்கப்படும் வகையில் எந்த சம்பவங்களும் இடம்பெறக் கூடாது.

இந்த நாட்டில் பௌத்தம் பிரதான மதமாக இருந்த போதிலும் நாட்டில் வாழும் சகல மக்களையும் பௌத்தர்கள் ஆகிய நாம் பாதுகாக்க வேண்டும்.

இந்த நாட்டில் இன ஐக்கியத்தை உறுதிப்படுத்தி, அதன் மூலம் ஒற்றுமையை பலப்படுத்த வேண்டும். உலகில் எந்த நாட்டிலும் இல்லாத ஓர் இன ஒற்றுமை எம்மத்தியில் உள்ளது.

இந்த நாடு சகல மக்களையும் பிரதிபலிக்கும் நாடாகும். ஆகவே, இங்கு சமாதானத்தை உறுதிப்படுத்த வேண்டும். எனினும் இந்த அரசு மிகவும் மோசமான வகையில் மத விடயங்களில் செயற்பட்டு வருகின்றது.

சட்டம் சரியாகச் செயற்பட்டால் எந்த மதத்தவரும் குழப்பமடைய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், அரசு மௌனம் காப்பது மிகவும் பயங்கரமான விடயமாகும்.- என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## கொட்டதெனிய தாக்குதலில் சிறுமி பலி!

கொழும்பு, ஜூன் 25

கொட்டதெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் சிறுமி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. நபர்ஒருவர்கூரிய ஆயுதமொன்றால் இந்த தாக்குதலை நடத்தியுள்ளார்.

கள்ளக் காதலன் ஒருவனே காதலியையும் அவரது இரண்டு பிள்ளைகளையும் கொடூரமாகத் தாக்கியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் 6 வயதான சிறுமி உயிரிழந்துள்ளார். தாயும் 9 வயதான மகளும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த இருவரும் மீரிகம வைத்தியசாலையிலிருந்து வத்துபிட்டிவல வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்க்கும், அந்த நபருக்கும் இடையிலான தவறான உறவே இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சம்பவம் தொடர்பில் கொட்டதெனிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(க)

## மத நல்லிணக்கத்தை சீர்குலைப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை என்கிறார் விஜேதாச ராஜபக்ஷ!



கொழும்பு, ஜூன் 25

நாட்டில் மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் பல்வேறு சக்திகள் செயற்படுவகின்றன எனவும் டொலர்களை நம்பி வாழும் இவர்கள் நல்லிணக்கத்தை இல்லாமல் செய்து வருகின்றனர் எனவும் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்து மாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விகாரைகளைப் பாதுகாப்பது மற்றும் புத்தசாசனத்தின் முன்னேற்றம் குறித்து மாநாயக்க தேரர்களுடன் கலந்துரையாடினேன். பல்வேறு சக்திகள் உருவாகி மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கத் தேவையற்ற பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன.

இவற்றால் நல்லிணக்கத்துக்கு தடையேற்படும். அத்துடன், தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் குறித்து கலந்துரையாடினோம்.

மேலும், தேசிய நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் வகையில் எவராவது பேசுவார்களாயின், நாங்கள் அந்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அழுத்தங்களாலேயே ஆர்ப்பாட்டங்களில் பங்குகொள்கின்றனர் அப்பாவி மாணவர்கள்!



அமைச்சர் ராஜித தெரிவிக்கிறார்

கொழும்பு, ஜூன் 25

ஆர்ப்பாட்டங்களில் அப்பாவி மாணவர்கள் அழுத்தங்களுக்கு மத்தியிலேயே பங்கு கொள்கின்றனர் என சுகாதார போஷாக்கு மற்றும் சுதேசிய மருத்துவத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்துக்கு பதில் அளித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டுக்குத் தேவை திரிபுபடுத்தப்பட்ட சமூகம் அல்ல. மனித நேயத்தைக் கொண்ட சமூகமே ஆகும்.

மருத்துவக் கல்வியை முன்னெடுக்கும்பொழுது இலவசக் கல்விக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. தற்பொழுது மருத்துவ சபை அரசியல் மயப்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 2009 ஆம் ஆண்டில் இருந்து வைத்திய கல்வி தொடர்பில் தரம் ஒன்று இருக்கவில்லை. இதற்காக தரத்தை அறிமுகப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்.

வைத்தியத் துறைக் கல்விக்காக தரத்தை ஏற்படுத்துவதால் பிரச்சினைகள் ஏற்படாது என்று அன்றைய அரசில் வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்திருந்தது.

மஹிந்த ராஜபக்ஷ நிர்வாக காலப்பகுதியில் வைத்திய சபையின் தலைவரை நீக்கி, பேராசிரியர் காலோ பொன்சேகா நியமிக்கப்பட்டமை சைட்டம் நிறுவனத்தை அங்கீகரிப்பதற்கேயாகும். சைட்டம் வைத்தியசாலையை அரசு சுவீகரித்து, உயர்தரத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வைத்திய கல்லூரிக்காக முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்படும்.

அரச பல்கலைக்கழகங்களில் புதிய வைத்திய பீடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது நாட்டில் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது.

வளர்ச்சி கண்ட சுகாதார சேவைக்காக வைத்தியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

## மத்திய மலை நாட்டில் அடைமழை; மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 25

மத்திய மலை நாட்டு பிரதேசங்களில் நேற்று முன்தினம் இரவு முதல் அடைமழை பெய்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மழையுடன் ஓரளவு கடும் காற்று வீசுகிறது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இதன் காரணமாக மத்திய மலை நாட்டு பகுதிகளில் இடைக்கிடையே மின்சாரம் தடைப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை ஹட்டன் - நுவரெலியா வீதி மற்றும் ஹட்டன் - கொழும்பு பிரதான வீதிகளின் பல இடங்களில் பனி மூட்டம் காணப்படுவதால் போக்குவரத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக காலை நேரங்களில் இந்த வீதிகளின் ஊடான பயண நடவடிக்கைகளுக்குத் தடை ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் வவுனியா வீட்டில் இருந்து சடலமாக மீட்பு!

## குருமன்காட்டில் சம்பவம்

வவுனியா, ஜுன் 25

வவுனியா குருமன்காடு முதலாம் ஒழுங்கையில் பூட்டியிருந்த வீட்டில் இருந்து நேற்று மதியம் 1.30 மணியளவில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அந்த வீட்டில் வசித்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரான நல்லையா சிவராசா (வயது 73) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருபவை வருமாறு:-

கடந்த 21 ஆம் திகதி புதன் கிழமை இவரது மனைவி தனது சொந்த ஊரான வட்டக்கச்சிக்கு சென்றிருந்தார். அப்போது மேற்படி நபர் மட்டும் அந்த வீட்டில் தனிமையில் இருந்தார். தனிமையில் இருந்துபோது அவர் அதிகளவு மதுபானம் அருந்தினார் எனவும் அதனாலேயே இறந்திருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அந்த வீட்டில் மேற்றளத்தில் குடியிருப்பவர், குறித்த நபரின் நடமாட்டங்களைக் காணாத நிலையில், யன்னல் வழியாக எட்டிப் பார்த்தார் எனவும் அப்போதே அவர் சடலமாகக் காணப்பட்டார்எனவும்கூறப்படுகின்றது.

அது தொடர்பாக உடனடியாக கிராம சேவையாளருக்கும், பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்தவவுனியாப்பொலிஸார், குற்றவியல் பொலிஸ் அதிகாரிகளின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-100)

# போர்க்குற்றவாளியான பொன்சேகா வடக்கு முதல்வரை விமர்சிப்பதா?

## சிவாஜிலிங்கம் சீற்றம்



யாழ்ப்பாணம், ஜுன் 25

தமிழினப்படுகொலைசெய்து, போர்க்குற்றங்களை இழைத்த பின்னர் தற்போது அமைச்சராகியுள்ள முன்னாள் இராணுவத்தளபதி பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுப் படுதோல்வியடைந்தவர்.

இவ்வாறானவர், வடக்கு மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று, தமிழ்மக்களின்உரிமைக்காக சர்வதேச ரீதியாகவும் குரல் கொடுத்துவரும் வடக்கு முதல்வருக்கு எதிராக எப்படிக் கருத்துக்களைக்கூற முடியும் என, வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இனவாதக் கருத்துக்களைப் பரப்பி, மக்களைத் தூண்டி விட்ட வடமாகாண முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையையும்தாண்டி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் - என முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத்பொன்சேகா கடந்த புதன்கிழமை கருத்துத் தெரிவித்திருந்தார்.

அது தொடர்பாக கருத்துக் கூறுகையிலேயே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில் -

அமைச்சர் பதவியைப் பெற்ற பின்னரும் சீருடையை அணிந்து கொண்டு இரட்டை வேடம் போடுகின்ற ஒருவராகவே சரத்பொன்சேகா காணப்படுகிறார். அவர் தற்போது வகித்து வரும் அமைச்சர் பதவியையும் குறுக்கு வழியில் தான் பெற்றார்.

ஆகவே, தொடர்ந்தும் வடமாகாண முதலமைச்சருக்கு எதிராக சரத் பொன்சேகா செயற்பட்டு வருகின்றமை அவரது இனவாத சிந்தனையை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. - என்றார். (ம)

# டெங்கு நுளம்புகளை அழிப்பதற்கு இரு புதிய நுளம்புகள் உருவாக்கம்

## அரச மருத்துவ பரிசோதனை நிலையம் சாதனை

கொழும்பு, ஜுன் 25

டெங்கு காய்ச்சலை பரப்புகின்ற நுளம்புகளை அழிப்பதற்கு இரண்டு புதிய வகை நுளம்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என இலங்கை அரசு மருத்துவ பரிசோதனை நிலையம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள இந்த நிலையத்தின் சிறப்பு வைத்திய நிபுணர் சாகரிகா சமரசிங்க, இந்த இரு நுளம்பு வகைகளை தனது நிலையத்திலுள்ள பரிசோதனை கூடத்தில் உருவாக்கியுள்ளார் எனக் கூறினார்.

இந்த புதிய இரு வகை நுளம்புக்களை, பொதுவாக நுளம்புக்கள் பரவுகின்ற இடங்களில் பரப்பி விடுவதன் மூலம் டெங்கு காய்ச்சல் பரப்புகின்ற நுளம்புக்களை ஆரம்பக் கட்டத்திலேயே அழித்துவிடலாம்.

இந்த புதிய இரு நுளம்பு வகைகளை தற்போது மீரிகம, கண்டலம, குண்டசாலை, பேராதெனிய ஆகிய பிரதேசங்களில் பரப்பப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை வெற்றிகரமாக அமைந்துள்ளது.

இந்த நுளம்புக்களை டெங்கு காய்ச்சல் அதிகமாகக் காணப்படும் நகர்ப் பகுதிகளில் பரப்புவதற்கான திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், இதன் மூலம் மட்டுமே டெங்கு காய்ச்சலை முழுமையாகக் கட்டுப்படுத்திவிட முடியாது. மக்களின் ஒத்துழைப்பு இதற்கு மிகவும் அவசியம். - எனவும் அவர் தெரிவித்தார். (ம)

# 3 நாடுகளில் இருந்து இலங்கைக்கு அரிசி இறக்குமதிசெய்ய நடவடிக்கை

## தாய்லாந்து, பாக்., இந்தோனேஷிய அதிகாரிகளுடன் பேச்சு

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் உள்நாட்டு அரிசி உற்பத்தியில் பெரும் தாக்கம் செலுத்தியுள்ள நிலையில், வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய தாய்லாந்து, பாகிஸ்தான் மற்றும் இந்தோனேசியா முதலான நாடுகளிடமிருந்து அரிசியைக்கொள்வனவு செய்யவுள்ளதாக கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்நாட்டுச்சந்தையைப்பலப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவின்பேரில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிசாத் பதியுதீன், அமைச்சின் செயலாளர் சிந்தன லொக்குஹெட்டி மற்றும் நிதி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி. அத்தபத்து ஆகியோர் தாய்லாந்து, பாகிஸ்தான் மற்றும் இந்தோனேசிய ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுடன் கடந்த 22 ஆம் திகதி பேச்சு நடத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த கொழும்பில் விசேட நடவடிக்கை

## முப்படையினர், பொலிஸார் இணைவு

கொழும்பு, ஜுன் 25

கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு நேற்று விசேட வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 557 கிராம அலுவலர் பிரிவுகளில், 2600 தொகுதிகளில் இந்த வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேசிய டெங்கு நுளம்பு ஒழிப்பு வேலைத் திட்டத்திற்கு அமைவாக இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. முப்படையினரும் பொலிஸாரும் உள்ளடங்கலாக ஆயிரத்துக்கும்மேற்பட்ட உறுப்பினர்கள் மேற்படி பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வேலைத்திட்டங்களுக்கு அமைய ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் அரச மற்றும் தனியார் அலுவலகங்களின் சுற்றாடல்களை சுத்திகரித்தல் பணி இடம்பெறும்.

சனிக்கிழமைகளில் வீடுகள் தோறும் சுத்திகரிக்கும் பணிகளை மேற்கொள்ளவதற்கு பொதுமக்களை வழிப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. (ம)



சித்தன்கேணி, ஸ்ரீகணேச வித்தியாலய பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் தின விழாவும் நேற்றுமுன்தினம் பாடசாலை மண்டபத்தில் அதிபர் எஸ்.பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன் மற்றும் பா.கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். இங்கு மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. மாணவர்களுக்கு விருந்தினர்களால் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ம)

# 9 வருடங்கள் பல்கலைக்கழக மாணவனாக இருக்கிறார் லகிரு

## உயர்கல்வி அமைச்சர் கிரியெல்ல தகவல்

கொழும்பு, ஜுன் 25

பல்கலைக்கழகங்களில் வகுப்புகளை பகிஷ்கரித்து வரும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் மீண்டும் கல்வியைத் தொடர விருப்பத்துடன் இருக்கின்றனர் என உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் லஹிரு வீரசேகர கடந்த 9 ஆண்டுகளாக பல்கலைக் கழகத்தில் இருந்து வருகிறார் அவர் திருமணம் முடித்தவர். எனவும் அமைச்சர் கிரியெல்ல கூறினார். (ம)

# கண்டியில் உள்ள படை முகாமை அகற்ற அரசு தயாராகி வருகிறதாம்

## பாதுகாப்பு ஆபத்து என்கிறார் திலும் அமுனுகம எம்.பி.

கண்டி நகரின் மத்திய பகுதியில் உள்ள படை முகாமை அங்கிருந்து அகற்ற அரசு தயாராகி வருகின்றது எனத் தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம, அதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துக் கூறுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசின் திட்டத்தின்படி அந்த முகாமை அங்கிருந்து அகற்றினால் கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் உண்மையான நோக்கம் நகர அபிவிருத்தியாயின் அதற்காக அதனை மாற்று இடமொன்றுக்கு நகர்த்துவதே சிறந்தது. வெறுமையாக்கப்பட்டுள்ள போகம்பரச் சிறைச்சாலை இருந்த இடத்தையும் இதற்காகப் பயன்படுத்த முடியும். - எனவும் திலும் அமுனுகம எம்.பி கூறினார். (ம)

# இரத்தினபுரி காவத்தையில் நேற்றிரவு பதற்றம்;

இரத்தினபுரி - காவத்தைப் பகுதியில் இருவருக்கு இடையில் இடம்பெற்ற மோதலைத்தொடர்ந்து அப்பிரசேத்தில் நேற்றிரவு பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

காவத்தை, எந்தான தோட்டத்தில், கப்பெல பிரிவிலேயே இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், பணப் பரிமாற்றமே இந்த மோதலுக்குக் காரணம் எனவும் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்தார். 3 வீடுகளுக்கு தீ மூட்டப்பட்டமையினால் அங்கு பதற்றநிலை ஏற்பட்டதாகவும் தெரியவந்தது. (ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இறையச்சம் போதிக்கும் நோன்பு

புனித நோன்பிருந்த நம் முஸ்லிம் சகோதரர்கள் றமழானைக் கொண்டாடத் தயாராகி வரும் வேளை இது.

புனித ஸவ்வால் மாதத்துக்கான தலைப்பிறை தென்பட்டதும் புனித நோன்பு பூர்த்தியாகி, றமழான் பண்டிகையைக் கொண்டாடுவது குறித்து கொழும்புப் பெரிய பள்ளிவாசல் அறிவிக்கும்.

றமழான் நோன்பை நோற்றல் இஸ்லாமியரின் மதக் கடமைகளில் முதன்மையானது; தலையாயது.

மனித அறநெறி வாழ்வுக்கு - பண்பு தவறாத நெறிமுறைக்கு - நீதி தவறாத நேர்மைக்கு - மிக அவசியமானது இறையச்சம். அதனையே இஸ்லாமியர்கள் 'தக்வா' என்கின்றனர்.

அல்லாஹ்விற்குப் பயந்து நேர்மையுடன் வாழ்தல் ஒப்புயர்வற்ற உயரிய சமுதாயத்தைப் படைக்கும் வல்லமையைத் தரக் கூடியது.

கடவுளுக்குப் பயந்து அவன் காட்டிய வழியில் நடப்பதும், அவன் துறக்க வலியுறுத்தியவற்றை நீக்கி நடப்பதுவும் இந்தப் பூவுலகில் அமைதியான - சமாதானமான - சௌஜன்யமான - இணக்கமான - புரிந்துணர்வுமிக்க - சமுதாயத்தைப் படைக்கும் வழி என்பது நிச்சயம்.

வெறும் சட்டங்களாலும், தண்டனைகளினாலும், விதிமுறைகளினாலும் மனிதன் மீது அழுத்தங்களை ஏவிவிட்டு, அவனை சமூகப் பிராணியாக - சமூகப் பிரக்ஞையின்றி அழுத்தங்களுக்குப் பயந்து வாழ்பவனாக - மாற்றுவதன் மூலம் இந்த உலகில் அமைதியான வாழ்க்கை முறையை உருவாக்கிவிட முடியாது. நீதி முறைமையை முழுமையாக நிலைநாட்டி விட முடியாது.

முதலில் ஒழுக்கம், கட்டுப்பாடு, உயர் பண்பியல்பு, நற்குணங்கள் என்பன மனிதனின் மனதில் விதைக்கப்பட்டு, அவை அவனது ஆழ்ந்த மன எண்ணத்திலிருந்து விளைந்து, பரிமளிப்பனவாக இருக்க வேண்டும்.

அப்போதுதான் ஒழுக்க சீலமுள்ள, உண்மையில் நற்பண்பியல்புள்ள சமூகத்தை நாம் கட்டியெழுப்ப முடியும். அதுதான் யதார்த்தமும் உண்மையும் கூட.

மதங்கள் காட்டிய நன்மார்க்கங்களைக் கடைப்பிடிக்கத் தவறியமையாலேயே நமது நாட்டின் செல்நெறி இவ்வாறு சீர்கெட்டு, சீரழிந்து, நெறி தவறிப் போய் நிற்கின்றது.

இந்த வகையில் இப்போது றமழானைக் கொண்டாடும் நமது இஸ்லாமிய சகோதரர்கள், 'இறையச்சம்' மிக்கவர்களாகத் திகழ்கின்றார்கள்.

அல்லாஹ்விற்குப் பயந்து, அவன் ஏவியவைகளைச் செய்வதும், அவன் தடை செய்தவைகளைத் தவிர்த்து நடப்பதும் தமது தலையாய நெறியாகக் கொண்டு அவர்கள் இயங்குகின்றனர்.

அந்த வகையில், மக்களை நெறிப்படுத்தும் ஒரு கடமையாக நோன்பு நோற்பதை முன்வைக்கிறார் எல்லாம் வல்ல வல்லாளனான அல்லாஹ்.

இதுவரை இஸ்லாமியர் நோற்ற நோன்பு அவர்களுக்கு இறையச்சத்தைக் கற்றுக் கொடுக்கின்றது. இறைவன் காட்டிய நெறியின்பால் வாழ்வதைப் போதித்து அதன் வழி வழிப்படுத்துகின்றது.

நோன்பு நோற்பவன் யாருக்கும் தெரியாத இடத்தில் தனிமையில் இருந்த போதும் - பசியுள்ளவனாக இருந்தும் - தன்னிடம் உள்ள உணவை அருந்துவதில்லை. தாகமுள்ளவனாக இருந்தும் எதையும் குடிப்பதில்லை. இச்சைகள் இருந்தும் அவற்றின் வழி இசைந்து, அவற்றைச் செய்ய எத்தனிப்பதில்லை. இதுதான் இறையச்சத்தின் உண்மையான அர்த்தம் என்கின்றார்கள் இஸ்லாமிய வழிகாட்டிகள்.

கடவுள் மீதான பற்று, அவன் சதா எக்கணமும் எங்களை நோக்கிக் கொண்டிருக்கின்றான், நமது ஒவ்வொரு செயலுக்காகவும், நமது ஒவ்வொரு செயலின்மைக்காகவும் அவனுக்கு நாம் கணக்குக் கொடுக்கவேண்டும் என்ற இறையச்சம் - எப்போதும் எம்மை நேர்வழி செல்லவும் தவறான மார்க்கத்தை நாடாமல் இருக்கவும் வழிப்படுத்தும் என்பது உறுதி.

இன்று நமது நாட்டைப் பீடித்திருக்கும் இன முரண்பாடுகள், காழ்ப்புணர்வுகள், மதக்குரோதங்கள், மனமாச்சரியங்கள் போன்றவற்றிலிருந்து நாம் விடுபட வேண்டுமானால் - நமது சமூகம் நீதி, நியாயத்துடனும், நல்லுறவுடனும், நல்லொழுக்கம், நற்பண்பு ஆகியவற்றுடனும் வாழ வேண்டுமானால் - அதற்கு மதம் சார்ந்த மக்கள் வாழ்வு நெறிப்படுத்தப்பட வேண்டும்; ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

அதற்குப் பிரதானமானது இறை நம்பிக்கை அல்லது இறை அச்சம்.

மக்கள் மனதில் அது ஊன்றப்படுமானால் மட்டுமே மதசார் வாழ்வும் அதன் மூலம் அறநெறிப் பண்பியல்புகளும் சாத்தியமாகும்.

அந்த மத வாழ்வுக்கு வழிகோலும் இறையச்சத்தின் - தக்வாவின் - பிரதிபலிப்பாக அமைந்ததே நமது இஸ்லாமிய சகோதரர்கள் இதுவரை கடந்து வந்த நோன்புக் காலமாகும்.

நெறிமுறைப்படி நோன்பைப் பின்பற்றி, தமது இச்சைகளை, ஆசைகளை, பசி வேட்கைகளைத் துறந்து, சத்திய விரதம் அனுஷ்டித்து, அதன் முடிவில் புனித றமழானைக் கொண்டாடும் நமது இஸ்லாமியச் சகோதரர்களுடன் அந்த மகிழ்வில் நாமும் இணைந்து கொள்வோம். எல்லாம் வல்ல வல்லாளன் காட்டிய வழியில் ஒன்றுபட்டு சுபீட்சத்தை எட்டுவோம்.

இனங்களின் ஐக்கியத்தைப் புனித கடமையாக்கி, ஆண்டவன் வழியில் ஒன்றிணைவோமாக!

# இரு மாணவர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் இருவர் படுகாயம்!

## வவுனியாவில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 25

வவுனியாவில் பிரபல்யமான பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் க.பொ.த. உயர்தர மாணவர்களும் க.பொ.த. சாதாரண தர மாணவர்களும் தனியார் கல்வி நிலையம் ஒன்றில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு மோதிக் கொண்டதில் இரு மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:-

கடந்த இரண்டு தினங்களாக இந்தப்பாடசாலையின் மாணவர்கள் குழுவினராகப் பிரிந்து வகுப்பறையில் மோதிக்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து நேற்றுமுன் தினம் இரவு 7.30 மணியளவில் வைரவப்புளியங்குளம் பகுதியில் தனியார் கல்வி நிலையங்கள் அதிகமாகக் காணப்படும் இடத்தில் ஒன்றிணைந்த மாணவர் குழுவினர் அதே பாடசாலையில் கல்வி கற்கும் க.பொ.த. சாதாரணதரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த இரு மாணவர்களும் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைரவப்புளியங்குளம் பகுதியில் தனியார் கல்வி நிலையங்கள் அதிகம் காணப்படுவதனால் மாணவர்கள் குழுவினராக மோதிக்கொள்வது அடிக்கடி இடம்பெற்று வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்காரணமாக இந்தப் பகுதியில் பொலிஸாரைக் கடமையில் நிறுத்துவதற்கு வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் அதிகம் காணப்படும் கல்வி நிலையங்களும் மாணவர்களின் குழு மோதலுக்கு வழிசமைத்துள்ளது என அப்பகுதி மக்களும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க - 100)

# யாழ். கம்பன் விழாவில் நாளை

### காலை நிகழ்ச்சிகள்

அகில இலங்கைக் கம்பன் கழகம் வெள்ளி முதல் தொடர்ந்து நான்கு நாள்களுக்கு நடத்திவரும் 'யாழ். கம்பன் விழா'வின் கடைசி நாளான இன்று காலை நிகழ்ச்சிகள், காலை 9.30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் கிழவன்காடு கலாமன்றப் போசகர் கி.சிவஞானம் தம் பதியரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும். கடவுள் வாழ்த்தை திருமதி ந.விக்னேஸ்வரி இசைப்பார்.

தொடக்கவுரையை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆற்றுவார்.

புலவர் இரெ.சண்முகவடிவேல் 'வெள்ளத்தின் பள்ளம்' என்ற தலைப்பில் தனியுரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் 'செவி நுகர் கனிகள்' என்ற தலைப்பில் சிந்தனை அரங்கு நடைபெறும்.

'கூற்றையும் ஆடல் கொண்டோன்' என்ற தலைப்பில் அகளங்கனும், 'ஆறு கடந்திவர் போவாரோ' என்ற தலைப்பில் த.ரெங்கராஜனும், 'கால் வண்ணம் இங்கு கண்டேன்' என்ற தலைப்பில் ஆறு.திருமுருகனும், 'மாறிப்புக்கு இதயமெய்தினர்' என்ற தலைப்பில் ஸ்ரீ.பிரசாந்தனும், 'காதலுற்றிலன் இகழ்ந்திலன்' என்ற தலைப்பில் இ.ஜெயராஜும் உரையாற்றுவர்.

### மாலை நிகழ்ச்சிகள்

நாளை மாலை நிகழ்ச்சிகள் நல்லூர் ஸ்ரீதுர்க்கா மணிமண்டபத்தில் 4.30 மணிக்கு இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தலைமையில் பி.ரஜீந்திரன் குழுவினரின் மங்கல இசையுடன் ஆரம்பமாகும்.

யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் தம்பதியர் மங்கல விளக்கேற்ற, திருமதி அ.சுகன்யா கடவுள் வாழ்த்து இசைப்பார்.

தொடக்கவுரையை வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே ஆற்ற, வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம் நிறைவுரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து 'அமைச்சனாய்த் தவறிழைத்த அனுமன் குற்றக்கூண்டில்...' என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் இடம்பெறும். பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கம்பவாரிதி இ.ஜெயராஜ், கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் நீதி ஆயத்தை அலங்கரிப்பர்.

வி.அசோக்குமாரன், தி.திருநந்தகுமார் ஆகியோர் வழக்கைத் தொடுக்க, இரெ.சண்முகவடிவேல், இரா.செல்வவடிவேல் மறுத்து வாதாடுவர்.


அதிவண. கலாநிதி எஸ்.ஜெபநேசன்


இரா.செல்வவடிவேல்


கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்


பேராசிரியர் அ.சண்முகதாஸ்


கலாநிதி ஆறு.திருமுருகன்


கம்பவாரிதி இ.ஜெயராஜ்


ஸ்ரீ.பிரசாந்தன்


பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா


இரெ.சண்முகவடிவேல்


தமிழ்மணி அகளங்கன்


த.ரெங்கநாதன்


நா.வேதநாயகன்


சி.வீ.கே.சிவஞானம்


ரெஜினோல்ட் குரே


தி.திருநந்தகுமார்


பேராசிரியர் வி.அசோக்குமாரன்


பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா


ஆ.நடராஜன்

## இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு!

எதிர்வரும் 30 ஆம் திகதியில் இருந்து இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த விண்ணப்பத்துக்கு 18 வயதில் இருந்து 26 வயதுக்கு இடைப்பட்ட திருமணமாகாதவர்கள் விண்ணப்பிக்க முடியும். இராணுவ ஆட்சேர்ப்பு பணிப்பகத்தால் இராணுவத்துக்கு இவர்கள் இணைக்கப்பட்டு இவர்களுக்கான மாதாந்த சம்பளங்கொடுப்பனவாக 61 ஆயிரத்து 530 ரூபா வழங்கப்படும் எனவும் இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

## நாளை

26.06.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம்: பூசம் பி.இ. 2.03 வரை
திதி: திருதியை பி.இ. 6.57 வரை
சுபநேரம்: 11.55 – 1.25 வரை
இராகுகாலம்: 7.25 – 8.55 வரை

# வருட இறுதியில் 5 சதவீத பொருளாதார வளர்ச்சி!

## இலங்கை மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 25

இந்த வருடத்தின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் 3.8 சதவீத பொருளாதார வளர்ச்சி வேகம் இடம்பெற்றுள்ளது. இதனால், இந்த வருட இறுதியில் ஐந்து சதவீத பொருளாதார வளர்ச்சியை நாட்டில் ஏற்படுத்த முடியும் என்று இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாதாந்த நிதி மதிப்பீடு தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மத்திய வங்கி ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஜனவரி மாதத்திலிருந்து மே மாதம் வரையிலான காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்த போதிலும், மே மாதத்தில் இது 2.5 சத வீதத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளது.

வெளிநாடுகளில் பணியாற்றுவோரின் மூலமான வருமானம் அதிகரித்திருந்த போதிலும், கட்டார் நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைமை காரணமாக இந்த வருமானத்தில் தாக்கம் ஏற்படக்கூடும்.



பணவீக்கம் 6.2 சதவீதத்திலிருந்து 5.2 சதவீதமாக குறைவடைந்துள்ளது. இதற்குக் காரணம் கொள்கை ரீதியிலான அபிவிருத்தியுடன் வங்கிவட்டி வீதத்தை தொடர்ந்தும் அதே அளவில் முன்னெடுக்கப்பட்டமையே காரணமாகும்.

நாட்டின் பொருளாதாரம் தற்போது வலுவுடன் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. வறட்சி, வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பின்னடைவு ஏற்பட்ட போதிலும் பொருளாதார வளர்ச்சி வேகம் படிப்படியாக அதிகரித்து வருகிறது.

அரசின் தாராள பொருளாதார கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் இந்த முன்னேற்றகரமான நிலை ஏற்பட்டுள்ளது.

சேவை துறையில் 3.5 சத வீத பங்களிப்பு பொருளாதாரத்தில் இடம்பெற்றுள்ளது. கைத்தொழில் துறையின் வளர்ச்சி 6.3 சத வீதமாகும்.

விவசாயத்துறையில் 3.2 சதவீத வளர்ச்சி இடம்பெற்றுள்ளது. வெளிநாட்டு நாணய கையிருப்பு திருப்தி கொள்ளக் கூடிய வகையில் அமைந்துள்ளது.

ஏற்றுமதி மூலமான வருமானம் 11.9 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது 79 கோடி 50 லட்சம் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. இருப்பினும் இறக்குமதி செலவு 9.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## அரச சொத்துக்களை சேதப்படுத்துவோருக்கு

# அரச தொழில் இல்லை!

கொழும்பு, ஜூன் 25

அரச சொத்துக்களை சேதப்படுத்துவோருக்கு அரச தொழில்கள் வழங்காமல் இருக்கின்றமை தொடர்பில் அரசு கவனம் செலுத்தி வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச சொத்துக்களை சேதப்படுத்தினர் என பொலிஸ் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட எவருக்கும் இனி வரும் காலங்களில் அரச தொழில்களை வழங்குவதில்லை என்ற ஒரு சட்டத்தை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது.

பொறியியலாளர், மருத்துவர், நிர்வாக சேவை பதவிகள் மற்றும் அரச பணிகளுக்கான பரீட்சையில் உயர் சித்தி பெற்றுக்கொண்டாலும் அரச சொத்துக்களை சேதப்படுத்தினால் அவ்வாறானவர்களுக்கு அரச தொழில் வாய்ப்பு வழங்கப்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் போராட்டங்களை அண்மைக் காலமாக நடத்தி வருகின்றனர்.

இவ்வாறான போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களால் அரச சொத்துக்களுக்கு பெரும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதால் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதில்லை என்ற தீர்மானத்தை அரசு எடுத்துள்ளது.

நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்திபெறுவோர் தொடர்பில் இந்த நியதி முன்னர் அமுல்படுத்தப்பட்ட போதிலும் கடந்த பத்து ஆண்டுகளாக இந்த நியதி பின்பற்றப்படவில்லை.

மேலும், இந்த நியதியை மீளவும் அமுல்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது எனக் குறிப்பிடப்படுகின்றது.

# மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது

## அரச வைத்திய அதிகாரி சங்கத்தின் போராட்டம்!

போராட்டம் நடத்திய பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆரம்பித்த நாடளாவிய ரீதியிலான போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது.

சுகாதார அமைச்சுக்குள் பலவந்தமாக நுழைய முற்பட்ட மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்தும், ஐந்து கோரிக்கைகளை முன்வைத்தும் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் இந்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இருப்பினும், தீவிர சிகிச்சைப் பிரிவுகள் வழமை போன்று இயங்கின.

# ஜனாதிபதியின் கோரிக்கையை நிராகரித்த இராணுவ தளபதி!

கொழும்பு, ஜூன் 25

சிரேஷ்ட இராணுவ தளபதி கிரிஷாந்த டி சில்வாவிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த யோசனையை அவர் நிராகரித்துள்ளார் என பாதுகாப்பு அமைச்சின் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னாள் பாதுகாப்பு சபை பிரதானியான வீஃப் மார்ஷல் கோலித குணதிலக்க ஜூன் மாதம் 15 ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார்.

இந்த நிலையில், வெற்றிடமாகவுள்ள பாதுகாப்பு சபை பிரதானி பதவியை ஏற்றுக் கொள்ளவேண்டும் என அவரிடம் ஜனாதிபதி கோரியுள்ளார். அந்தப் பதவி இன்னும் வெற்றிடமாக உள்ளமைக்கு இராணுவத் தளபதியின் நிராகரிப்பே காரணம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதனால், பாதுகாப்பு சபை பிரதானி அலுவலகத்தை மூடிவிடுவதற்கு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி வழங்கிய சேவை நீடிப்பால் இராணுவத் தளபதி இன்னமும் சேவையில் உள்ளார். இந்தப் பதவியை நிராகரித்த இராணுவத் தளபதி, தனக்கு மீண்டும் சேவை நீடிப்பை வழங்கவேண்டும் என ஜனாதிபதியிடம் கோரியுள்ளார் எனதகவல் வெளியாகியுள்ளது.

# தமிழக மீனவர்கள் 8 பேர் கைது!

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடு பட்ட தமிழக மீனவர்கள் 8 பேர் கடற்படையினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு கடற்பகுதியின் தென்கிழக்குதிசையில் 17 கடல் மைல்கள் தொலைவில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தமிழக மீனவர்கள் 17 பேர் நாகர்கோவில் கடலில் கடந்த வியாழக்கிழமையும் இரவு கைது செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பித்தக்கது.

# அனர்த்தங்கள் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 215 ஆக உயர்வு!

கொழும்பு, ஜூன் 25

அனர்த்தங்கள் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 215 ஆக உயர்வடைந்துள்ளது என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரிய தர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அண்மையில் நாட்டின் 15 மாவட்டங்களில் மழை வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்கள் ஏற்பட்டிருந்தன. இந்த அனர்த்தங்களினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 215 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன், அனர்த்தங்களினால் காணாமற் போனவர்களின் எண்ணிக்கை 64, காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 151 ஆகும்.

அனர்த்தங்களினால் 3 ஆயிரத்து 29 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. 61 ஆயிரத்து 560 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இன்னமும் ஆயிரத்து 122 குடும்பங்கள் 4 ஆயிரத்து 7 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்தும் நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)




வணக்கமுங்கோ!

போன கிழமை இதாலை வந்த இடத்திலை இயக்கப் பெடியளைப்பற்றிச்கதைச்சுப் போட்டுப் போனதைச் சிலபேர், கேள்விப்பட்டுப் போட்டு ''அப்பு! நீங்கள் நல்ல விசயமொண்டைச் சொல்லியிருக்கிறியள். உங்கட வாயால இப்ப வெளிச்சத்துக்கு வந்த இதே மாதிரி, இன்னும் வெளிவரவேணும்... அந்தப் பொடி, பொட்டையளின்ர அவலக் கதையள் பேப்பருகளிலையும் வர வேணும்...'' எண்டு சொல்லிச்சினம்.

உண்மைக்குப் புறம்பான விசயங்களைச் சொல்லிப் போட்டு, நாலு பேருக்கு முன்னால உபத்திரவப்படுகிறதைவிட, அவமானப்படுகிறதைவிட உண்மையை உள்ளபடி எடுத்துச் சொல்லுறதிலை பிழையேதும் இல்லைத் தானே பாருங்கோ!

சரி அது கிடக்கட்டும். அதைப்பற்றிப் பிறகு கதைப்பம். நான் இப்ப இண்டைக்கு என்ன சொல்ல வந்தனான் எண்டால்-

யாழ்ப்பாணத்தில இப்பவெல்லாம் பனை மரங்களிலை நுங்குகள் காய்ச்சு இளம் பருவமாய் தொங்கிக் கொண்டு கிடக்குது. இப்ப அடிக்கிற வெய்யிலுக்கு நுங்கு குடிக்கிறதும் உடம்புக்கு ஒரு வகைக் குளிர்ச்சிதான்.

ஆனா, அதை அளவோடை செய்து முடிச்சுக் கொள்ளவேணும்!

ஏனெண்டு சொன்னால், அறிவைப் புறமொதுக்கிப் போட்டு, அவசரத் தேவைக்காகச் செய்யிற சில காரியங்களால, பின்னாடி பெரிய அவலத்தையும், அந்தரிப்பையும் சந்திக்க வேண்டி வரும்... எண்டு சொல்ல வாறன்.

சண்டை ஓய்ஞ்சாப்பிறகு இப்ப வேலை வெட்டி இல்லாமல் பல பேர் தவறான வழிகளிலையும், சில பேர் தன்மானத்தோடையும் உழைச்சுப் பிழைச்சு வாழ வேணுமெண்டு தங்கட செய்கை காரியங்களை நடப்பிச்சுக் கொண்டு வருகினம் கண்யடிளே!

தொழில் இல்லாமல் குடும்பச் சீவியப்பாட்டைச் சமாளிக்கேலாத ஆள்கள், ஏதேதோ அந்தந்த நேரத்துக்கேற்றமாதிரி, தொழிலுகளையும் மாத்திக் கொண்டு... வருகினம்; வாழுகினம்.

அந்த வகையில பாருங்கோ... இப்ப நுங்கு சீசன் தொடங்கியிட்டதால, கனபேர் நுங்குக்குலையளை வெட்டி, வித்து... வியாபாரமாகச் செய்து, ஏதேதோ அண்டண்டு தங்கட வயித்துப் பாட்டைப் பார்த்துக் கொண்டு போகினம்.

இதை நான் ஒரு பிழையான காரியமெண்டு... சொல்ல வரேல்லை. பிழை எங்கை நடக்குதெண்டு சொன்னால், இப்படி நுங்கு விக்கிறவையளின்ரை குடும்பப் பொருளாதார அடிப்படைத் தேவையளை சம்பந்தப்பட்ட 'நல்லாட்சி ஆள்கள்' கவனியாமல் இருக்கிறதும் மற்றது - பனை வளத்தோடை, அதின்ர அபிவிருத்தி சம்பந்தமாகப் பொறுப்பான நிலையில இருக்கிறவையும் கவனத்தில எடுக்காமல் அசமந்தமான போக்கில போகினம்... எண்டு சொல்ல வாறன்.

பனை மரங்கள் எண்டது கூடுதலாக யாழ். குடா நாட்டுக்குள்ளதான் வளர்ந்து நிக்குது. ஒரு பனை மரத்தின்ர பெறுமதியும், அதில இருந்து பெறப்படுகின்ற பயன்பாடுகளும் எவையெவை எண்டது பனையோடை பக்கத்திலையிருந்து வளர்ந்தவைக்குத்தான் தெரியும். வெளியிடத்தாருக்குத் தெரியாது.

இப்ப யாழ்ப்பாணத்தில நுங்கு சீசன் எண்டு கேள்விப்பட்டு, நுங்கு குடிக்கிறதுக்காக, தெற்குப் பக்கத்திலையிருந்து வாற ஆள்களும் இருக்கினம். இப்படிப்பட்ட ஆள்களுக்காக, காசுக்காக நாங்கள் எங்கட மூல வளத்தின்ர ஒரு பகுதியை இழக்கலாமோ எண்டதை நுங்குவெட்டி, றோட்டுகளிலை வைச்சு விக்கிறவையள் அல்ல, அந்த நுங்கைத் தாற பனைமரத்தோடை சம்பந்தப்பட்ட ஆள்கள் உணர வேணும் பாருங்கோ!

நுங்குக்கு அடுத்தபடியாக... அதிலையிருந்து பெறப்படுகின்ற பனம்பழம், பனாட்டு, பனங்காய்ப் பணியாரம், பனங்கிழங்கு, ஒடியல், புளுக்கொடியல்... எண்டு எத்தனை பயன்பாடுகள் கிடக்குது தெரியுமே!

ஆரம்பத்தில நுங்குக்குலையளை வெட்டி அழிச்சா, நான் மேற்சொன்ன பொருளுகள் மட்டுல்ல, பனம்பழமே இல்லாமல் பனையின்ர இனமே அழிஞ்சு போகக் கூடிய சூழ் நிலை உருவாகவும் கூடுமல்லோ!

இப்ப உந்த நுங்கு வியாபாரம் நாவற்குழி, கைதடி, நுணாவில் பகுதியளில அதுவும் ஏ-9 றோட்டில வைச்சு நடக்குது எண்டு பேப்பரிலை பார்த்தனான்.

ஒரு நாள் கூத்துக்காக முகத்திலை ஆசையாய்... அருமை பெருமையாய் வளர்த்த அருமந்த மீசையைச் சிரைச்ச மாதிரி.... ரண்டொருநாள் வயித்துப் பாட்டுக்காக நுங்குக் குலையளை வெட்டி அழிச்சு... இனி வாற காலங்களில 'பிளாஸ்ரிக் அரிசி' மாதிரி எங்கட பனம்பழத்தையும் பனை வளத்தையும் ஆக்கிப் போடாதையுங்கோ!

# வீதிப் புனரமைப்புப் பணிகளுக்காக 50 இலட்சம் ரூபா ஒதுக்கினார் விந்தன்

வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் 38 பேருக்கும் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை (CBG) நிதி ஒதுக்கீட்டுக்கு மேலாக வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப, கிராம அபிவிருத்தி மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சின் 2017 ஆம் ஆண்டுக்குரிய பாதீட்டின் மூலம் 38 மாகாணசபை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் வீதி அபிவிருத்திக்கென தலா ஐம்பது இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

அதில் வட மாகாண சபை உறுப்பினர் கே. என். விந்தன் கனகரட்ணம் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து நெடுந்தீவு கிழக்கு தீர்த்தக்கரை ஆலமாவன பிள்ளையார் கோவில் வீதிப் புனரமைப்புக்கென இருபத்து ஐந்து இலட்சம் ரூபாமற்றும் வேலணை சேயன்



கந்தையா கைத்தனை வீதிப்புனரமைப்புக்கென இருபத்து ஐந்து இலட்சம் ரூபாவுமாக மொத்தம் ஐம்பது இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

குறித்த வீதிகள் குன்றும் குழியுமாக பாதசாரிகள் மற்றும் வாகனப் போக்குவரத்துகளுக்கு மிகவும் மோசமான நிலையில் இருப்பதனால் மக்களும், பொது அமைப்புகளும் விடுத்தவேண்டுகோளுக்கு இணங்க அதன் முக்கியத்துவத்தை அறிந்து இந்த நிதியைதாம் ஒதுக்கியுள்ளார் என்றும் விந்தன் குறிப்பிட்டுள்ளார். (இ)

## குளவி கொட்டியதில் 9 பேர் பாதிப்பு

இரு வேறு இடங்களில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்களைக் குளவிகள் கொட்டியதினால் 9 பேர் கொட்டகலை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று முன்தினம் மே பீல்ட் தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் 7 பேரும் கொட்டகலை டெரிக்கிளாயார் தோட்டத்தில் மலையில் பணியில் பணியில் ஈடுபட்டிருந்த 2 தொழிலாளர்களும் இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

## மலேரியாவைப் பரப்பும் புதுவித நுளம்பு: பேசாலைப் பகுதிகளில் இனங்காணல்!

மன்னார்,ஜூன் 25

மன்னார் பேசாலையை அண்மித்த கரையோரப் பகுதிகளில் மலேரியா நோயைப் பரப்பும் புதுவித நுளம்புகள் இனங்காணப்பட்டுள்ளன.

-இவ்வாறு மலேரியாத் தடை இயக்கத்தின் மன்னார் மாவட்ட பிராந்திய வைத்திய அதிகாரி கே.அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு விழிப்பூட்டும் நோக்கில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'அனோப்பிளிப்ஸ்ற் இவண்சி' என்ற புது வகை நுளம்புகளே இவ்வாறு முதன் முதலாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த நுளப்புகள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு பரவி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இதன் காரணமாக இலங்கையில் மீண்டும் மலேரியாவின் தாக்கம் அதிகரிக்கலாம். இது சம்பந்தமான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் மிக வேகமாக ஏற்படவேண்டும். இலங்கை மலேரியா தடை இயக்கமும், மன்னார் மாவட்ட மலேரியா தடை இயக்கமும் மக்களுடன் இணைந்து இந்த நுளம்புப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் மலேரியா நோய் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மு.பொ.வின் கவிதை நூல் வெளியீடு

'சிந்தனைக்கூடம்' யாழ்ப்பாணம் எனும் ஆய்வு, அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை பி.ப 3.45 மணிக்கு, நல்லூர், சங்கிலியன் தோப்பில் அமைந்துள்ள யூரோவில் கேட்போர் கூடத்தில் கவிஞர் மு.பொ.வின் 'குந்திசேத்திரத்தின் குரல்' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா இடம்பெறவுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் மெய்யியல்துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.வி.காசிநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், அறிமுகவுரையை யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கமும் கவிதை நூல் பற்றிய விமர்சன உரைகளை கவிஞர் சோ.பத்மநாதன், எழுத்தாளர் ச.இராகவன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

கவிஞர் மு.பொ.வைக் கௌரவித்தல் நிகழ்வைத் தொடர்ந்து ஏற்புரையை கவிஞர் மு.பொன்னம்பலம் நிகழ்த்துவார்.

சிந்தனைக் கூடத்தின் பணிப்பாளர் பேராசிரியர் இரா. சிவசந்திரன், மேற்படி நிகழ்வில் எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், பத்திரிகை யாளர்கள் கலந்துகொள்வதோடு எமது மூத்த கவிஞரும் பத்திரியையாளருமான மு.பொ.வுக்கு மதிப்பளிக்கும் வகையில் அன்பர்கள் அபிமானிகள் அனைவரும் வருகை தந்து கவிதை நூல் வெளியீட்டை சிறப்பிக்கவேண்டும். என வேண்டுகிறார். (இ)




வருடாந்த இப்தார் நிகழ்வு சமீபத்தில் கொழும்பு - புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள சாயி மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. இதன்போது, கொழும்பு சாயி பாபா மத்திய நிலையத் தலைவர் எஸ்.என். உதயநாயகன் வரவேற்புரை நிகழ்த்துவதையும், பேலியகொடை ஜும்மா பள்ளி மௌலவி அப்துல் ரசாக் ரசாதி மார்க்கச்சொற்பொழிவு ஆற்றுவதையும் இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.



# பாதுகாப்பு தரப்புக்கும், மக்களுக்கும் இடையில் விரிசலை ஏற்படுத்துவதற்கு அரசு சதித் திட்டம்!

கொழும்பு, ஜூன் 25

அரசின் பணிப்பின் அடிப்படையில் பல்கலைக்கழக மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பாதுகாப்புத் தரப்புக்கும், மக்களுக்கும் இடையில் விரிசலை ஏற்படுத்துவதற்கான அரசின் சதி என நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.



நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன பல்கலைக்கழக மாணவர்களைச் சந்திக்க மறுத்தமையே மாணவர்கள் மேற்கொண்ட போராட்டத்துக்குப் பிரதான காரணம்.

இதேவேளை, தனியார் வைத்தியக்கல்லூரிக்கு எதிர்ப்பு தெரிவித்து மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரும் கலந்துகொண்டிருந்தனர்.

இருப்பினும் அதனைக் கருத்திற்கொள்ளாமல் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டவர்கள் மீது மூர்க்கத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாட்டை தேசிய சுதந்திர முன்னணி வன்மையாக கண்டிக்கிறது.

## பல்கலைக்கழக மாணவர்கள்மீதான தாக்குதல் குறித்து ஜயந்த சமரவீர

இந்தத் தாக்குதலில் 96 மாணவர்கள் வரையில் பாதிக்கப்பட்ட நிலையில் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். மாணவர்களைக் கையாள வேறு வழிகள் உள்ளன. அவர்களை தாக்குதல் மேற்கொண்டு தான் கையாள வேண்டும் என்ற எவ்வித கட்டாயமும் இல்லை.

சுகாதார அமைச்சர், மாணவர்களுக்கு முகங்கொடுக்க சக்தியில்லாத நிலையில் தான் அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப் பணித்துள்ளார். இந்த செயற்பாட்டின் மூலம் உயர்கல்வி அமைச்சருக்கும், சுகாதார அமைச்சருக்கும் முதுகெலும்பு இல்லை என்பதையே அவர்களின் செயற்பாடு நிரூபித்துள்ளது.

எமது நாட்டின் பாதுகாப்பு படையினர் விடுதலைப் புலிகளையே தோற்கடித்து யுத்தத்தை நிறைவிற்குப் கொண்டு வந்தவர்கள் என்ற அடிப்படையில் மக்கள் அவர் கள் மீது பெரும் நம்பிக்கை வைத்துள்ளார்கள்.

இந்த நிலையில், பல்கலைக் கழக மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளுமாறு அரசு பணித்தமை, பாதுகாப்புத்தரப்பினர் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை உடைக்கும் சதித் திட்டமே என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## காணாமற்போனோருக்கான பணியகம் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்!

*சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை*

கொழும்பு, ஜூன் 25

மிகவும் தாமதிக்கப்பட்டு விட்ட காணாமற் போனோருக்கான பணியகத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என இலங்கை அரசிடம் சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

இது தொடர்பாக, சர்வதேச மன்னிப்புச்சபையின், தெற்காசியப் பணிப்பாளர் பிராஜ் பட்நாயக் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை மக்கள் இன்னும் நீண்ட காலத்துக்கு காத்திருக்க முடியாது. எல்லா சமூகங்களையும் சேர்ந்த பத்தாயிரக்கணக்கான குடும்பங்கள் ஏற்கனவே நீண்ட காலம் காத்திருந்து விட்டன.

கூடிய விரைவில் காணாமற் போனோருக்கான பணியகம் ஆரம்பிக்கப்பட வேண்டும். இலங்கையர்களின் காயங்களை நீதியால் மாத்திரமே குணப்படுத்த முடியும்.

பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில், காணாமற்போனோருக்கான பணியகத்தை உருவாக்குவது அதிகாரிகளின் பொறுப்பாகும். - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

## பிரித்தானியாவும் வரவேற்கிறது!



கொழும்பு, ஜூன் 25

காணாமற் போனோர் பணியகத்தை உருவாக்கும் சட்டம், இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதை பிரித்தானியாவரவேற்றுள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதுவர் ஜேம்ஸ் டௌரிஸ், தனது அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

''இலங்கையில் காணாமற்போனோருக்கான பணியக சட்டத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

''இதனை உடனடியாக நடைமுறைப்படுத்துவது, எல்லா சமூகங்களையும் சேர்ந்த மக்கள் தீர்வு ஒன்றைக் கண்டறிவதற்கு உதவியாக அமையும்'' -என்று கூறியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்கத் தூதுவர் அதுல் செகாப்பும் அண்மையில், காணாமற் போனோருக்கான பணியகம் மிக அவசியமானது என்று கருத்து வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியக் கடற்படையின் விமானங்கள் பயிற்சியை முடித்துவிட்டு நாடு திரும்பின!

கொழும்பு, ஜூன் 25

இலங்கைக் கடற்படை மற்றும் விமானப்படையினருக்குப் பயிற்சிகளை அளிப்பதற்காக, கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்திருந்த இந்தியக் கடற்படையின் டோனியர் விமானங்கள், பயிற்சியை முடித்துக் கொண்டு மீண்டும் நாடு திரும்பியுள்ளன.






இலங்கைக் கடற்படை மற்றும் விமானப்படையினருக்குப் பயிற்சி அளிப்பதற்காக, இந்தியக் கடற்படையின் இரண்டு டோனியர் கண்காணிப்பு விமானங்கள் கடந்த 19 ஆம் திகதி, கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்திருந்தன.

இந்த விமானங்கள், இலங்கையின் சிறப்பு பொருளாதார வலயத்துக்கு உட்பட்ட மேற்கு மற்றும் தென்மேற்கு கடற்பகுதியில், இலங்கைப் படையினருடன் இணைந்து பயிற்சிகளை மேற்கொண்டிருந்தன.

இலங்கைக் கடற்படையின் ஏழுவான் கண்காணிப்பாளர்கள் மற்றும் இலங்கை விமானப் படையின் கண்காணிப்பாளர்களுக்கு டோனியர் விமானத்தில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

இந்தப் பயிற்சிகள் கடந்த வியாழக் கிழமை நிறைவடைந்ததை அடுத்து, இந்தியக் கடற்படை விமானங்கள் திரும்பிச் சென்றுள்ளன.

இலங்கையில் இந்தியக் கடற்படையின் டோனியர் விமானங்கள் பயிற்சிகளை அளிப்பதற்காக வந்திருந்தமை இதுவே முதல்முறையாகும்.

## ஜனநாயகத்துக்கு சவால் விடும் போது அரசு மௌனமாக இருக்க முடியாது!

கொழும்பு, ஜூன் 25

நாட்டு மக்களைப் பணயம் வைக்கும் வகையில், சிறிய தோர் அடிப்படைவாதக் குழு, ஜனநாயகத்துக்குச் சவால் விடும் போது, மக்களின் அரச ஒன்றால் மௌனமாக இருக்க முடியாது என்று, வெளி விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் ரவி தெரிவிப்பு

ஜனநாயக உரிமைகள் என்ற போர்வையில், சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தால், அவர் யாராக இருந்தாலும், எத்தகைய நிலையில் இருந்தாலும், அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

சமூகத்தில் உறுதியற்ற நிலையை ஏற்படுத்தி, அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்த முனையும் தனிநபர்கள் மற்றும் குழுக்களின் மீது பொலிஸார் இன்னும் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றும் அவர் கூறியுள்ளார்.

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?



2017 ஆம் ஆண்டு ஏ விளம்பி வருடம் ஆனித் திங்கள் 11 ஆம் நாள் துவிதீயைத்திதி பி.இ. 1.01 மணி வரை. பின்னர் திருதியை. நட்சத்திரம் – புனர்பூசம் இரவு 11.25 மணி வரை. பின்னர் பூசம். சித்தயோகம் முழுவதும். பிறந்த நட்சத்திர வழிபாடு:– புனர்பூசம்.

**ராகுகாலம்:-** மாலை 4.47 மணி முதல் 6.32 மணி வரை.

**சுபநேரம்:-** காலை 8.56 மணி முதல் 10.27 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி:-** ஆனி மாத வளர்பிறை துவிதீயை.

**சந்திராட்டமநாள்:-** விசாகம் 4, அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் உதித்தோர் அவசியம் நற் கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

## 25.06.2017 இல் இருந்து 01.07.2017 வரை



**மேஷம்:** சமபலன்கள் உள்ள வாரம் ஆகும். பொருளா தாரம் சுமாராக இருக்கும். வீண் செலவுகள் அதிகரிக்கும். புத்திரர்களால் கவலை அதிகரிக்கும். பெரியவர் களின் உதவி குறையும். உத்தியோகத்தர்களுக்கு கோரிக்கைகள் தாமதமடையும். தொழி லாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் குன்றும். மாணவர்களுக்கு கல்வி ஊக்கம் குன்றும். சோம்பலும், விரக்தியும் அதிகரிக்கும். பெண்கள் ஆடம்பரச் செலவுகள் அகால போசனங்களால் கவலைப் பட வேண்டி வரும். விவசாயிகளுக்கு உற்பத்தி பாதிப்படைவதுடன் நட்டமும் பெருகும்.



**ரிஷபம்:** யோகமான வாரம் ஆகும். பணம் தாராள மாகப் புழங்கும். குடும்பங்களில் நல்லுறவு வளரும். வர்த்தகர்களின் குடும்ப முயற்சிகள் நற்பலன்களைக் கொடுக்கும். உத்தியோகத்தர்களுக்கு தொழிலில் முன்னேற்ற மும், அதிகாரிகளின் ஆதரவும், மதிப்பும் கிடைக்கும். விவசாயி கள் நல்ல விளைவும், லாபமும் பெறுவார்கள். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். தொழிலாளர்களுக்கு முதலாளிகளுடன் நல்லுறவு, ஒத்துழைப்பு வளரும். வேலைவாய்ப்புகள் அதிகரித்தலால் பொருள் வருவாயும் அதிகரிக்கும். தாய் வழிச் சொத்துகள் தடையின்றி வந்து சேரும்.



**மிதுனம்:** ஆக்கபூர்வமான வாரம் ஆகும். வருமா னம் பெருகும். வர்த்தகர்களுக்கு புது முத லீடுகள் உற்சாகம் அளிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவுடன் பதவி உயர்வு கிடைக்கும். விவசாயி களுக்கு விளைவுகள் அதிகரிக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் விருத்தியும் தொழிலால் ஆர்வமும் அதிகரிக்கும். மாணவர்களுக்கு சுயமுயற்சியும் ஆர்வமும் அதிகரிக்கும். பெண்களுக்கு மன நிறைவும் வாழ்க்கை வசதியும் கூடும். சுயதொழில் செய்ய விரும்பியவர்களுக்கு அரசாங்க வங்கியின் நிதி உதவிகள் கிடைக்கும்.



**கடகம்:** கவலையான வாரம் ஆகும். வரவுக்கு மிஞ்சிய செலவுகளும், குடும்ப உறவில் பாதிப்பும், கவலைகள், பிணக்குகள் அதிகரிக்கும். குடும்பச் செலவுகள் அதிகரிப்பால் கடன் பட நேரிடும். புத்திரர் உதவிகள் தடைப்படும். மன அமைதி குறைந்து காணப்படும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் மந்தநிலை உண்டாகும். நிதி நெருக்கடிகள் தொல்லை தரும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகள் அதிகரிக்கும். தாயாரின் உடல்நிலை மோசமாகும். உறவினர்கள், நண்பர்கள் தொல்லை தருவார்கள்.



**சிம்மம்:** யோகமான வாரம் ஆகும். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். வாழ்க்கைத் தரம் உயரும். குடும்பத்தவர்களுக்கு குடும்பச் சிறப்பும், நல் லுறவும் விருத்தியடையும். வீட்டில் மங்கல நிகழ்ச்சிகள் இடம் பெறும். வர்த்தகர்களுக்கு நிதி நிலைமை சீராக இருக்கும். தொழில்பிணக்குகளில் சாதகமான முடிவுகள் மகிழ்ச்சி தரும். இதுவரை வாடகை வீட்டில் இருந்த சிலர் சொந்த வீட்டிற்கு குடிபோகும் யோகம் உண்டாகும். சகோதர வழியால் எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும். வெளிநாட்டு உறவுகளிடமிருந்து விலையுயர்ந்த ஆடை, அணிகள் வந்து சேரும்.



**கன்னி:** மத்திமமான வாரம் ஆகும். வருமானம் சுமாராக இருக்கும். குடும்பச் சுகக் குறைவு, புத்திரர் பிணி பீடைகள், வீண் விரயம் போன்றவை அதிகரிக் கும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் அவ நம்பிக்கைக்கு ஆளாக வேண்டிவரலாம். சிலருக்கு விபத்துகள் முதலானவற்றை யும் எதிர்நோக்க வேண்டி வரும். எதிலும் அவதானம் தேவை. மாணவர்களுக்கு கல்வித் தடைகள் உண்டாகும். பெண்களுக்கு விவாகப் பேச்சுகளில் முடிவுகள் தடை, தாமதங்களுடன் நீண்டு கொண்டே செல்லும்.



**துலாம்:** சுபீட்சமான வாரம் ஆகும். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து சுபீட்சம் உண்டாகும். சொந்த வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும். அரச உதவிகள், பெரியோர் உத விகள் கிடைக்கும். சகோதர உறவு வலுப்பெறும். பிரிந்தி ருந்தவர்கள் மீண்டும் வந்து இணைவார்கள். உத்தியோகத் தர்களுக்கு பதவி உயர்வுடன் கூடிய மாற்றங்களும் கிடைக் கும். குடும்பத்தில் சுப சந்தோஷ நிகழ்ச்சிகள் இடம்பெறும். சிலருக்கு வெளிநாட் டுத் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் சுமுகநிலை உண் டாகும்.



**விருச்சிகம்:** கவலையான வாரம் ஆகும். பொருள் வருவாய் இருப்பி னும் செலவும் அதிகரிக்கும். குடும்பத்தில் பிணக்குகள் அதிகரிக்கும். வர்த்தகர்களுக்கு தொழில் முயற்சிகள் அதிகரித்தாலும் வருமானம் பற்றாக்குறைவாகவே இருக் கும். தொழிலாளர்களுக்கு தொழிலிழப்பும் ஊதியக் குறைவும் ஏற்படும். கடன் பளு ஏறும். மாணவர்கள் கல்வியில் சுய முயற்சி குறைவடையும். குடும்பப் பெண்களுக்குப் பொறுப்புகள், பிரயாசை அதிகரித்து உடலில் அசதியும், சோர்வும் ஏற்படும்.



**தனுசு:** மத்திமமான வாரம் ஆகும். பண வருவாய் சமமாய் இருக்கும். ஆரோக்கியம் பாதிப்படை யும். குடும்ப சச்சரவுகள் தோன்றி மறையும். குடும்பச் செலவு கள் அதிகரிக்கும். வர்த்தகர்கள் புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகளும், செலவுகளும் அதிகரிக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் ஒப்பந்தங்கள் நட்டம் தரும். மாணவர்களின் கல்வி ஊக்கம் தடைப்படும். பெண்களுக்கு விவாகப் பிரச்சினைகள் கவலை தரும். வீடு, வாகன வகையில் செலவுகள் ஏற்படும். மருத்துவச் செலவுகளும் உண்டாகும்.



**மகரம்:** இன்பமான வாரம் ஆகும். தனலாபம் பெருகும். அதக நலம், குடும்ப நலங்களில் அபிவிருத்தி உண்டாகும். தூர தேசப் பொருள் வரவு கிட்டும். ஏற்றுமதி, இறக்குமதி மொத்த வியாபாரங்கள் விருத்தி அடை யும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் அனுசரணை களும் பதவி உயர்ச்சி முதலானவைகளும் கிடைக்கும். இதுவரை பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் ஒன்றிணைவார்கள். தொழிலாளர் களுக்கு முதலாளிகளின் ஆதரவு கை கொடுக்கும். திருமண வாய்ப்புகள் வலிய வரும். மாணவர்– ஆசிரியர் நல்லுறவு வளர்ச்சியடையும்.



**கும்பம்:** மகிழ்ச்சியான வாரம் ஆகும். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் எல்லை யற்ற மகிழ்ச்சி காணப்படும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் வந்து சேரும். பிரிந்திருந்த குடும்பங்கள் ஒன்று சேரும் வாய்ப்புண்டாகும். உறவினர் வீட்டுச் சுப நிகழ்ச்சிகளில் கலந்து மகிழ்வார்கள். கலைஞர் களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். மாணவர்களுக்கு உயர் கல்வி கற்பதற்கு அரச உதவிப் பணம் கிடைக்கும். வியாபாரம் வளர்ச்சி அடையும்.



**மீனம்:** சஞ்சலமான வாரம் ஆகும். செய்யும் தொழிலில் விருத்தி குன்றும். தன விரயமும், கொடுக்கல் வாங்கலில் பிணக்குகளும் இருக்கும். குடும்பத்தில் விரோத மனப்பான்மை தோன்றும். உறவினர்களுக்குள் விரோதம், பகைமை என்பன உண்டாகும். நண்பர்கள் கூட எதிரிகளாக மாறுவார்கள். மறைமுக எதிர்ப்புகளில் அவதானம் தேவை. நெருங்கிய சிலரை இழக்க நேரும். மாணவர்களுக்கு கல்வித் துறையில் பாதிப்புகள், ஏமாற்றங்கள் என்பன உண்டாகும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் வெறுப்பைத் தேடிக் கொள்வார்கள்.

# இலங்கையில் பாரதி 31

● முருகபூபதி – ஆஸ்திரேலியா

*''ஐதீகத்தை கட்டிக்களிக்கும் வைதீகராயினும் சரி, பழமையைப் பகைக்கும் புதுமை விரும்பியும் சரி, பாரதியைப் பாராட்டுகிறார்கள். மேடை ஏறிப்பேசும் அரசியல்வாதி பாரதியின் பாடல்களிலிருந்து மேற்கோள் காட்டுகின்றான். ஏடுதீட்டும் எழுத்தாளன், பாரதியின் கவிதைகளிலிருந்து எடுத்துக்காட்டுகள் தருகின்றான். இசைவாணன் பாரதியின்பாடல்களைப்பண்ணோடு இசைக்கின்றான். திரைப்பட மெடுப்போரும், தெருவிலே பிச்சை ஏந்துவோரும்கூட, பாரதியின் பாடல்களை இனிமையான, கவர்ச்சிகரமான, உள்ளத்தைக்குளிர்விக்கக்கூடிய மெட்டுகளிலே வைத்திழைத்து மக்களுக்கு வழங்குகிறார்கள். அந்த அளவுக்குப் பாரதி தமிழ் உலகத்தில் அழியாச் சித்திரமாகிவிட்டான்.''*

1954 ஆம் ஆண்டளவில் இலங்கையில் நாடளாவிய ரீதியில் நடந்த பாரதி விழாக்களில் உரையாற்றிய மூத்த நாவலாசிரியரும் பாரதியின் புகழை இலங்கையிலும் மலேஷியாவிலும் தமிழ்நாட்டிலும் பரப்பியவருமான பத்திரிகையாளரும் நாடகாசிரியருமான **இளங்கீரன்** அவர்கள் தாம் எழுதியிருக்கும் **பாரதி கண்ட சமுதாயம்** என்ற நூலில் மேற்கண்ட



வாறு பதிவுசெய்துள்ளார்.

இந்நூலை சென்னை நவ பாரத் பதிப்பகம் 1955 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 1927 ஆம் ஆண்டு பிறந்த இளங்கீரன், 1997 ஆம் ஆண்டு நீர்கொழும்பில் மறைந்தார்.


25 நாவல்களும், ஈழத்து முற்போக்கு இலக்கியமும் இயக்கமும், தேசிய இலக்கியமும் மரபுப்போராட்டமும், பேராசிரியர் கைலாசபதி நினைவுகளும் கருத்துக்களும் முதலான நூல்களும் எழுதியிருக்கும் இளங்கீரன், வானொலி மற்றும் மேடை நாடகங்களும் எழுதியிருப்பவர்.

**மரகதம்** என்னும் இலக்கிய இதழின் ஆசிரியர். அத்துடன் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் **தொழிலாளி**, குமார் ரூபசிங்க நடத்திய **ஜனவேகம்** முதலான பத்திரிகைகளின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைமைக்குழுவில் அங்கம்வகித்தவர். இச்சங்கத்தினால் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட பல பாரதி விழாக்கள், மாநாடுகள், கருத்தரங்குகளில் அர்ப்பணிப்புடன் இணைந்திருந்தவர்.

தமது இருபது வயதிலேயே எழுத்துலகில் பிரவேசித்து வாழ்நாள்முழுவதும் முழுநேர எழுத்தாளராகவே இயங்கியவர். மலேஷியாவில் வாழ்ந்த காலத்தில் அங்கு **இனமணி** என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். சிறந்த பேச்சாளராகவும் சமூகப்பணியாளராகவும் விளங்கிய இளங்கீரன், ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் மாநகர சபை உறுப்பினருக்கான தேர்தலிலும் போட்டியிட்டவர்.

இலங்கையில் பாரதி நூற்றாண்டு (1982 - 1983) கொண்டாடப்பட்ட காலத்தில் இளங்கீரன் எழுதிய மகாகவி பாரதி நாடகம் கொழும்பில் இருதடவைகள் மேடையேற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் முஸ்லிம்




வட்டாரத்தில் அமைந்துள்ள குளத்தடி பள்ளிவாசல் (சின்னப் பள்ளிவாசல்) சீர்திருத்த சபையின் செயலாளராகக் கடமையாற்றி பெரியகுளம், சின்னக்குளம் ஆகியவற்றைப் புனரமைத்தார். இலங்கை முஸ்லிம் சமய கலாசார இராஜாங்க அமைச்சினால் நடத்தப்பட்ட வாழ்வோரை வாழ்த்துவோம் எனும் வைபவத்தில் இலக்கிய வேந்தர் எனும் பட்டத்தையும் விருதையும் பெற்றவர். இந்து சமய, கலாசார இராஜாங்க அமைச்சு 1992 இல் நடத்திய சாகித்திய விழாவில் **இலக்கியச் செம்மல்** என்னும் பட்டமும் விருதும் இவருக்கு வழங்கப்பட்டன.

இவ்வாறு பல சிறப்பியல்புகளைக்கொண்டிருந்த இளங்கீரன், தமது 27 வயது பராயத்திலேயே பாரதியின் புகழை இலங்கை எங்கும் பரப்பியிருக்கிறார்.

பாரதியின் கருத்துக்களினால் பெரிதும் கவரப்பட்டிருந்த அவரை இலங்கையில் பல பாகங்களிலுமிருந்த அமைப்புகளும் பாடசாலைகளும் அழைத்து பாரதியைப் பற்றி பேச வைத்திருக்கின்றன.

1954 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதியிலிருந்து ஒக்ரோபர் 10 ஆம் திகதி வரையில் இளங்கீரன் நாடெங்கும் சூறாவளிப்பயணம் மேற்கொண்டு, பாரதி விழா மேடைகளில் முழங்கியிருக்கிறார்.

சில ஊர்களிலிருந்து வந்த அழைப்பை தவிர்க்கமுடியாத காரணங்களினால் தவிர்த்திருக்கிறார். பாரதி கண்ட சமுதாயம் என்ற அவரது நூல் வெளிவந்ததற்கான காரணத்தை இளங்கீரன் இவ்வாறு பதிவு செய்துள்ளார்: -

''பாரதிவிழாவில் பங்குபற்றிச்சொற்பொழிவாற்றும்படி பல ஊர்களிலிருந்து அழைப்பு வந்தது. சில கூட்டங்களில் கலந்துகொள்ளத்தான் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. பல இடங்களிலிருந்து வந்த அழைப்பை நிராகரிக்கவேண்டிவந்துவிட்டது நேரமில்லாத காரணத்தால். இது குறித்து நான் வருந்திக் கொண்டிருந்தேன். இதே சமயத்தில், நான் பங்குபற்றிய கூட்டங்களில் நான் ஆற்றிய சொற்பொழிவுகளை ஒன்றாகத் தொகுத்து நூல் வடிவில் வெளியிடவேண்டுமென்று பல தோழர்களிடமிருந்து அஞ்சல்கள் வந்தன. நேரிலும் வலியுறுத்தினார்கள். இப்படி நூல்வடிவில் வெளியிட்டால், நான் போக முடியாதிருந்த ஊர்களிலுள்ள தமிழன் பர்களுக்கும் இந்த நூல் ஆறுதலைக்கொடுக்குமென்று எண்ணி சமாதானமடைந்தேன். இதன் விளைவே இந்நூல். இலங்கைத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிலுள்ளவர்களுக்கும், இதர நாடுகளிலுள்ள தமிழர்களுக்கும் இந்த நூல் பயனளிக்க வேண்டுமென்பது தான் எனது ஆசை.''

இளங்கீரன் அவர்களின் ஆசை சமூகத்திற்கும் பயன்பட்டது. குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தப்படும் நாவன்மைப்போட்டிகளில் பாரதியின் வாழ்வையும் பணிகளையும் பற்றி உரையாற்றவிரும்பும் மாணவர்களுக்கும், அத்தகைய போட்டிகளை தயார்படுத்தும் பாடசாலைகள் மற்றும் அமைப்புகளுக்கும் உசாத்துணையாக இளங்கீரனின் **பாரதி கண்ட சமுதாயம்** விளங்கியிருக்கிறது.

பாரதியை பலரும் பல்வேறு கண்ணோட்டத்தில் ஆராய்ந்துள்ளனர். பாரதியின் சிந்தனைகளின் அடியொற்றி தேசியம், மொழி, பொருளாதாரம், ஆன்மீகம், இனவிடுதலை, பெண்விடுதலை, அரசியல் சுதந்திரம் மட்டுமன்றி இன்னோரன்ன விடயங்களிலிருந்தும் ஆய்வுக்குட்படுத்தியிருக்கின்றனர்.

இந்தப்பின்னணியிலிருந்து **கலாநிதி ந. இரவீந்திரன்** எழுதியிருக்கும் **பாரதியின் மெய்ஞ்ஞானம்** என்ற நூலை மதிப்பீடுசெய்யலாம். இந்நூலை இலங்கையில், தேசிய கலை இலக்கியப்பேரவை வெளியிட்டுள்ளது.

இதன் முதல்பதிப்பை




சென்னை புக்ஸ் என்னும் பதிப்பகம் 1986 இல் வெளியிட்டது.

இந்த நூலை எழுதுமாறு தூண்டியவர் பேராசிரியர் கைலாசபதி என்பதும் குறிப்பிடத்தகுந்தது. அதனால், அவருக்கே இந்நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இந்நூல் பற்றிய அறிமுகத்தை தேசிய கலை இலக்கியப் பேரவையின் இணைச்செயலாளர்கள் க.தணிகாசலமும் சோ. தேவராஜாவும் வழங்கியிருக்கிறார்கள். அவர்களின் பதிவிலிருந்து பின்வரும் கருத்துக்களை இங்கு குறிப்பிடுகின்றோம்.

''ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பியோ விரும்பாமலோ ஏதோ ஓர் உலகநோக்கின் அடிப்படையில்தான் சிந்திக்கின்றான், செயற்படுகின்றான். சமூகத்தின் பல்துறைசார்ந்த ஒருவரது செயல், சிந்தனை, எழுத்து, பேச்சுக்களிலிருந்துதான் அவரது உலகநோக்கு சரியாக அடையாளம் காணப்படுகிறது. பாரதி நூற்றாண்டு நினைவாக வெளிவந்த பல நூல்கள் பாரதியின் வாழ்வையும் எழுத்தையும் வெளிக்கொணர்வதில் வெற்றிகண்டுள்ளன. எனினும் அவற்றுக்கு அடிப்படையான அவரது உலக நோக்குப்பற்றிய ஆய்வு நூல்கள் மிகச்சிலவே வெளிவந்துள்ளன.

மனிதகுல வரலாற்றை முன்தள்ளுவதில் பொருளாதார உலகநோக்கு பெரும்பங்கை வகித்தாலும், இன்றுவரை ஓர் அடிப்படைச் சமுதாய மாற்றம் ஏற்படாத பின்தங்கிய நாடுகளில் வாழும் பெரும்பாலான மக்கள், ஆன்மீக உலக நோக்கை உடையவர்களாகவே இருக்கின்றனர். ஒரு சமூக மாற்றத்துக்காக இத்தகைய மக்களை அணிதிரட்ட முனையும்போதுதான், இவ் உலக நோக்குப் பற்றிய மதிப்பீடு அவசியமாகிறது.

ஆன்மீகவாதிகள் அனைவரும் மனிதகுல விடுதலைப் போராட்டங்களின் விரோதிகள், பிற்போக்குவாதிகள் என்று ஒரு சாராரும், ஆன்மீகம் வேரூன்றிவிட்ட இந்த மண்ணில் ஆன்மீகம் கலந்த ஒருவகை மாக்ஸிஸத்தின் மூலமே ஒரு சமுதாய மாற்றம் சாத்தியமாகும் என்று இன்னொரு சாராரும் கருதுகின்ற நிலையில், ஆன்மீகத்தின் முற்போக்கான பாத்திரத்தை எப்படி தேசநலனுக்கும், முன்னேற்றத்திற்கும் அடிப்படைச் சமுதாய மாற்றத்திற்கும் துணையாகக் கொள்ளலாம் என்ற ஆய்வினை விரிவாக்க இந்நூல் துணை செய்கிறது.''

இந்நூலை எழுதியிருக்கும் கலாநிதி ந. ரவீந்திரன், இலங்கை தேசபக்த வாலிப இயக்கத்தின் தலைமை உறுப்பினராகவும் விளங்கியவர். பல முற்போக்கான சமூக, அரசியல் போராட்டங்களிலும் ஈடுபட்டவர். சமூக விஞ்ஞானப்பார்வையில் கட்டுரைகள் எழுதிவருபவர்.

பாரதியின் மெய்ஞ்ஞானம் நூலுக்கு முன்னுரை எழுதியிருக்கும் பேராசிரியர் சி. சிவசேகரம், ''இரவீந்திரனின் ஆய்வு நூல் பாரதியின் சிந்தனையை முழுமையானதாகவும் வரலாற்று வளர்ச்சியுடையதாகவும் காட்டி அதனுள் இதுவரை தீர்க்க இயலாததாகப் பலராலும் காணப்பட்ட முரண்பாட்டினுள் ஒற்றுமையை அடையாளங் காட்டுகிறது. அவரது கருத்துக்களில் எனக்கு ஒரு சில ஐயங்களும் அபிப்பிராய வேறுபாடுகளும் இருப்பதை ஏற்கனவே அவருக்குத் தெரியப்படுத்திவிட்டேன். அவற்றுள் சில பாரதி பற்றிய என் அறியாமை சார்ந்தவையாக இருக்கலாம். மற்ற வேறுபாடுகள், பெரும்பாலும், நூலின் நோக்குடனும் அவரது அடிப்படையான வாதத்துடனும் தொடர்பானவை அல்ல என்பது குறிப்பிடவேண்டியது.

இரவீந்திரனின் கருத்துக்கள் நிச்சயமாக மாற்றுக்கருத்துக்களை எழுப்பும் என்பதில் எனக்கும் அவருக்கும் ஐயம் இராது. அவை ஆரோக்கியமான விவாதமாக வளர்ந்து பாரதி பற்றி அவர்காட்டிட முயல்கிற முனைந்துள்ள பார்வையை மேலும் செழுமையடையச் செய்யும் என்பது எனது நியாயமான எதிர்பார்ப்பு. அவருடைய சிந்தனையின் நேர்மையும் எழுத்தின் தெளிவும் வாதங்களின் கூர்மையும் அவரிடமிருந்து தமிழ் இலக்கிய ஆய்வுத் துறை மேலும் நல்ல பங்களிப்புக்களை எதிர்பார்க்கலாம் என்றே கூறுகின்றன.''



எனத் தெரிவித்துள்ளார்.

''பாரதி ஆய்வுகளில் பெரும்பாலும் பாரதியின் மெய்ஞ்ஞானம் பற்றிய அகநிலைவாதத் தவறுகள் மேலோங்கியிருப்பதைக்கண்டதன் விளைவாக, இக்கட்டுரையை எழுதும் அவசியத்தை உணர்ந்துகொண்டேன். அவரை முற்றாகவே ஒரு மதவாதியாகக் காட்ட யாரும் முயன்றதில்லை. அதே வேளை பாரதியின் புரட்சிகர வாழ்வைப் பலதரப்பட்ட அரிய ஆய்வுகள் வாயிலாய் வெளிக்கொணர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள், அவரது ஆன்மீகவாதம் பற்றி அக நிலைவாதத் தவறுகள் உட்பட்டிருந்தார்களாதலால், பாரதியின் இயக்கப்போக்கைக் கணிப்பதிலும் தவறுகளைத் தவிர்க்க முடியாதவர்களாயிருந்தார்கள். இக்கட்டுரை, பாரதியை புறநிலை ரீதியாக ஆராய்ந்து, அவரது அரசியல் வாழ்வையும் அதற்கென அவர் வரித்துக் கொண்ட மெய்ஞ்ஞானத்தையும் பற்றி சரியான கண்ணோட்டத்தைப்பெற முயற்சிக்கும். இத்தகைய புறநிலை ரீதியான ஆய்வுகள் மேலும் அவசியமானவை'' என்று இந்நூலாசிரியர் கலாநிதி ந. இரவீந்திரன் குறிப்பிடுகிறார்.

இலங்கையில் பாரதியை பலகோணங்களிலும் பலரும் ஆய்வுசெய்திருக்கிறார்கள் என்பதற்கு இந்த அங்கத்தில் சொல்லப்படும் இளங்கீரனின் நூலும் இரவீந்திரனின் நூலும் சிறந்த சான்றுகள்.

இளங்கீரன், இரவீந்திரன், தணிகாசலம், சோ. தேவராஜா மற்றும் பேராசிரியர் சிவசேகரம் ஆகிய ஐவரும் மார்க்ஸியச் சிந்தனையில் இயங்கியவர்கள்.

இளங்கீரனின் பாரதி கண்ட சமுதாயம் பாடசாலை மாணவர்களுக்கு பெரிதும் உதவியிருக்கிறது. இரவீந்திரனின் பாரதியின் மெய்ஞ்ஞானம் பல்கலைக்கழக மட்டத்தில் மாத்திரமின்றி பாரதி இயல் ஆய்வுகளுக்கும் பெரிதும் பயன்பட்டுள்ளது.

இலங்கையில், பாரதி இவ்வாறெல்லாம் பேசப்பட்டுள்ளார், தொடர்ந்தும் பேசப்படுகிறார்.

(தொடரும்)




# திருமணத்தின் போது மருதாணி போடுவது ஏன்?



திருமணத்தின்போது நடத்தப்படும் முக்கியமான சடங்குகளில் மெஹந்தி எனும் மருதாணி போடும் நிகழ்வும் ஒன்றாகும்.

மருதாணியின் முக்கியத்துவம் என்னவென்பது பற்றித் தெரிந்து கொள்வோம்.

★மருதாணி போடும் மணமகளின் கையில் எவ்வளவு அதிகமாக சிவக்கிறதோ, அது அவளின் வருங்கால கணவர் மீதுள்ள அவளுடைய அன்பைக் குறிக்கும் என்கிறார்கள்.

★அதுவே மணமகளின் கையில் மருதாணி நீண்ட நாள்கள் அழியாமல் இருந்தால், அது அவளது மாமியார் அவளைப் பாராட்டுவார் என்பதைக் குறிக்குமாம்.

★மணமகளின் கையில் உள்ள மருதாணி வடிவமைப்புகள் அனைத்துமே வாழ்க்கையின் வெவ்வேறு அம்சங்களின் அடையாளமாக வரையப்படுகிறது.

★மலர்கள், மொட்டுகள், பட்டாம் பூச்சிகள், பறவைகள், மணமகன் மற்றும் மணமகள் போன்ற மெஹந்தியின் வடிவமைப்புகள் அனைத்துமே பொதுவானவை.

★மணமகளின் உள்ளங்கையின் பின்புறம் போடும் வடிவமைப்பு அவளது வாழ்க்கையின் கவசம் மற்றும் பாதுகாப்பையும் உணர்த்தும்.

★ மலர்கள், சந்தோஷம் மற்றும் இதயத்தின் அறிகுறியையும், மொட்டுகள் வாழ்க்கையின் புதிய ஆரம்பத்தையும் குறிக்கும்.

மருதாணி ஒரு சக்தி வாய்ந்த மருத்துவ மூலிகை என்பதால், இது அதிகப்படியான மன அழுத்தம் மற்றும் பதற்றம் போன்ற பய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த உதவுகிறது. திருமணத்தின் போது மணமகளின் கையில் மருதாணி போடுவதால் அவளுக்கு திருமணத்தால் ஏற்படும் பதற்றம் குறையும்.

அதுவே மணமகனுக்கு போடுவது, அந்த மருதாணியின் நறுமணம் பால் உணர்வைத் தூண்டும். இதனால் , அவர்களின் வாழ்க்கையை இனிதே தொடங்குவதற்குப் பயன்படும் வகையில் மணமகனுக்கு மருதாணி போடுகின்றனர்.

# பிள்ளைகளின் எதிர்காலம் உங்கள் கையில்

## இது அம்மாக்களுக்கு

இன்றைய கல்விச் சூழ் நிலையில் மதிப்பெண்கள் பெறுவதே குறிக்கோளாகி உள்ளது. இதனால் பிள்ளைகள் பாடங்களை எப்படியாவது மனப்பாடம் செய்ய வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது


இன்றைக்குப் பல தாய்மாருக்குத் தலைபோகிற பிரச்சினை தமது பிள்ளைகளை அதிகமதிப்பெண்கள் எடுக்க வைப்பது எவ்வாறு என்பது தான். பிள்ளைகள் ஒவ்வொருவருமே ஒவ்வொரு விதத்தில் கற்கிறார்கள். உதாரணமாக, சிலர் புத்தகத்திலிருக்கும் விஷயங்களை வரிசையாகப் பக்கம் பக்கமாகப் படித்தே கற்றுக் கொள்வார்கள். வேறு சிலரோ புத்தகத்திலிருக்கும் படங்கள், அட்டவணைகள் போன்றவற்றிலிருந்து விஷயங்களைக் கிரகித்துக் கற்றுக் கொள்வார்கள். இவர்களைக் கூட இரண்டு வகையாகப் பிரிக்கலாம். உதாரணமாக முதல் வகையினர் முன்அட்டையிலிருந்து பின்அட்டை வரை வார்த்தைக்கு வார்த்தை படித்து, நடு நடுவே நிறுத்தி, படித்ததை அசை போட்டு, பின் கிரகித்துக் கொள்ளும் ரகம். இரண்டாவது வகையினரோ புத்தகத்திலிருக்கும் முக்கியமான விடயங்களை மட்டும் படித்துக் கிரகித்துக் கொள்ளும் ரகம். இதில் இதுதான் சரி. அல்லது இது தவறு என்று எதையுமே சொல்ல முடியாது.



பிள்ளைகள் அதிக மதிப்பெண்களைப் பெற முடியாத போது, "ஹும்! நீ இன்னும் நல்லா படிச்சிருக்கலாம்" என்பது போல் காரணங்கள் சொல்வோம். ஆனால், உண்மையான காரணங்கள் என்னவென்றால் ஒவ்வொரு பிள்ளையும் கற்றுக் கொள்ளும் பாணியிலும் பலங்களும் உள்ளன! பலவீனங்களும் உள்ளன. இது தெரிந்தால் தான் நம்மால் நம் பிள்ளைகள் பெற முடியாத மதிப்பெண்களுக்குக் காரணம் சொல்ல முடியும்.

இன்றைய கல்விச் சூழ்நிலையில் மதிப்பெண்கள் பெறுவதே குறிக்கோளாகி உள்ளது. இதனால் பிள்ளைகள் பாடங்களை எப்படியாவது மனப்பாடம் செய்ய வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இப்படி படித்து அவர்கள் தேறினாலும் பாடத்திலிருக்கும் அடிப்படைகளை அவர்கள் கற்கத் தவறி விடுகிறார்கள்.

இதனால் சில குழந்தைகள் பிற்காலத்தில் பொறியியலாளர்களாகவோ, மருத்துவர்களாகவோ ஆனாலும் கூட, ஒரு வெற்றிகரமான வாழ்க்கையை வாழ முடிவதில்லை. குழந்தைகளின் கற்கும் முறையில் இருக்கும் நிறைகுறைகளை முன் கூட்டியே தெரிந்துகொண்டு, அவர்களின் எதிர்காலத்தைச் சிறப்பாக அமைத்துத் தருவது தாய்மார்களின் கடமையாகும்.



அழகு என்பது பார்ப்பவர் கண்களில் உள்ளது என்பது எவ்வளவு உண்மையோ, அதேபோல் நம் மனதிலும் உள்ளது. நம்மை நாம் அழகானவராக எண்ணுவதுதான் அழகாகத் தோன்றுவதன் முதல்படி. அதிக உடற்பருமன் இதற்கு முக்கியமான எதிரி. எங்கு பார்த்தாலும் நிறை குறைப்புப் பற்றிய பேச்சுத்தான். விளம்பரங்கள் மற்றும் திரைப்படங்களும் தினமும் உயரமான, நிறை குறைவுள்ள மொடல்களையும், நடிகர்களையும் பார்த்துப் பார்த்து, ஒல்லியாக இருப்பதே அழகு என்ற எண்ணம் நம் மனதில் வேரூன்றி விட்டது.

முதலில் உங்கள் உடலை நேசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். ஆரோக்கியமான உணவு, ஓய்வு, தூக்கம், உடற்பயிற்சி இவைகளால் உங்கள் உடல் நலன் கூடும். அத்தோடு உங்கள் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

கீழே உள்ள குறிப்புகளைப் பின்பற்றுங்கள். ஆரோக்கியமான, அழகாக உள்ள உணர்வைப் பெறலாம்.

உடலின் பராமரிப்பு:- நமது உடல்கூறு அதிசயமான தொகுதிகளைக் கொண்டது. இதை நல்ல முறையில், பேணிக் காப்பது, நமது கடமையாகும்.

உடலுக்கு சலுகைகள்:- உடலுக்கு அவ்வப்போது சலுகைகள் அவசியம். மஸாஜ் செய்து கொள்வது, புதிய உடை வாங்குவது, கை மற்றும் பாதங்களைப் பராமரிப்பது போன்றன வேண்டும். இது போன்ற சலுகைகளில் உங்களுக்கு தன்னம்பிக்கையும், உங்கள் உடலைப் பற்றிய நல்ல உணர்வும் ஏற்படும்.

உங்கள் தேவை:- உங்களுக்கு வாழ்வில் எது தேவை என்று முடிவெடுத்துக்கொள்ளுங்கள். மேற்கத்திய நாடுகளில் பெண்கள் தங்கள் அழகையும், உடலையும் பாதுகாப்பதில் தான் அதிகமான நேரத்தைச் செலவிடுகின்றனர்.

உங்கள் பழக்கங்கள்:- கண்ணாடி முன் நின்று 100 முறை உங்கள் மூக்கை பார்ப்பதற்கு பதிலாக வேறு வேலைகளில் கவனத்தை செலுத்தவும். உங்கள் மூக்கு மட்டுமே நீங்கள் என்ற எண்ணத்தை முதலில் விடவும்.

உண்மையை ஒத்துக்கொள்ளவும்:- ஐஸ்வர்யா ராய் போல் தோன்ற வேண்டும் என்று எண்ணம் இருந்தால் அதை விட்டு விடுவது நல்லது. அவர் அவர்தான், நீங்கள் நீங்கள்தான். அவர் அழகுதான்; ஆனால் அவர் மட்டுமே அழகு என்று நினைப்பது சரியல்ல.

சரியான பார்வை:- பட்டினி கிடந்து உடல் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்வது தான் அழகாகத் தோன்ற வழி என்று நினைப்பது தவறு. எது உங்களுக்கு சரி என்று முதலில் தீர்மானிக்கவும். தேவையான உடல் பயிற்சி, சரியான உணவு இவை இரண்டும் தான் அழகை மேம்படுத்தும்.

நீங்கள் தனியாள் இல்லை:- இதே பிரச்சினை அநேகமான பெண்களுக்கு உண்டு என்பதை புரிந்து கொள்ளவும். இந்த பிரச்சினையில் மூழ்காமல் இருப்பது உங்கள் கையில் உள்ளது.

எது அழகு, யார் சிறந்தவர் என்று மற்றவர் சொல்வதை நம்பாதீர்கள். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பதை மறந்து விடாதீர்கள்.

# உடலை நேசிக்க கற்றுக் கொள்ளுங்கள்!



# ரமழான் மாத நோன்பு பெருநாள் சிறப்பிதழ்

## உலக முஸ்லிம் அனைவருக்கும் ஜனாதிபதியின் வாழ்த்துக்கள்



பௌதீக வளங்கள் மீது அளவுகடந்த பேராசையைக் கொண்டுள்ள நவீன மனிதன் திருப்தியற்ற பயணத்தையே மேற்கொண்டுள்ளான். மக்கள் மத்தியில் பிளவுகளைத் தோற்றுவித்து, அமைதியின்மையை ஏற்படுத்தி, நம்பிக்கையீனத்தைப் பரப்பவே அழிவை உண்டாக்கும் இந்த இருப்பு காரணமாக உள்ளது.

உலகெங்கிலும் வாழும் முஸ்லிம் மக்கள் மிகுந்த பக்தியுடன் அனுஷ்டிக்கும் ரமழான் மாதத்தில் கடைபிடித்துவரும் பரஸ்பர கௌரவம், சமத்துவம்,ஈகை மற்றும் ஏழைகளுக்கு உதவுதல் போன்ற பண்புகள் மனிதனது விடுதலை சுயநலத்திலன்றி பிறர் நலம் பேணுவதிலேயே தங்கியுள்ளது என்பதையே வெளிப்படுத்துகின்றன.

அந்தவகையில், ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளின் மூலம் முழு மனித சமூகத்துக்கும் விடுக்கப்படும் முக்கிய செய்தி பிரபஞ்ச சமத்துவம் என்பதாகும். சமய, ஆன்மீக மற்றும் சமூகப் பெறுமானங்களின் அடிப்படையில் எல்லாவற்றிலும் சமத்துவத்தைப் பேணுவதே அதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அடுத்தவர்களது கஷ்டங்களைப் புரிந்துகொள்வதுடன், தமக்குத்தாம் நேர்மையாக இருப்பதனால் மனிதம் வளம்பெறும் என்பதை ரமழான் நோன்பு எமக்கு நினைவுபடுத்துகிறது.

சமய எல்லைகளைக் கடந்து பொது மானிடத்தை இலக்காகக்கொண்ட இத்தகைய வளமான தொலைநோக்குடைய ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் இலங்கை மற்றும் உலகெங்கிலும் வாழும் முஸ்லிம் மக்களுக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஒற்றுமையை உணர்த்துவோம்



இலங்கை வாழ் அனைத்து இஸ்லாமிய மக்களுக்கும் எனது இதயங்கனிந்த ரமழான் பெருநாள் வாழ்த்துக்கள். புனித ரமழான் மாதத்தின் நிறைவை நினைவுகூரும்முகமாக இந்த நாளை நாம் கொண்டாடுகின்ற போது, இந்தப் பண்டிகையின் பாரம்பரியத்தைப் போற்றும் வகையில், சகோதரத்துவ உணர்வோடு நாம் பகிர்ந்துகொள்ளும் அதேவேளை இல்லாதவர்கள் மேல்காட்டும் கரிசனையையும் எமது சிந்தையில் கொள்வோமாக.

இந்தப் பெருநாளைக் கொண்டாடும் இந்தத் தருணத்தில், எமது தேசத்தின்நல்லுறவுக்கான அர்ப்பணிப்பை மீண்டும்வலியுறுத்துவதுடன், நாட்டின்ஒற்றுமையை உலகுக்கு எடுத்துக்காட்டவும் செயற்படுவோமாக.

இந்த ரமழான் பண்டிகை எமது மக்களிடையே சமாதானம், ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை மேலும் வலுவாக்குவதாக அமைய வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

*இனிய ரமழான் நல்வாழ்த்துக்கள்.*

இரா. சம்பந்தன்
எதிர்க்கட்சித் தலைவர்
தலைவர் - தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு.

## நோன்பின் மகத்துவம்

இஸ்லாம் போதிக்கும் அடிப்படையான இபாந்துகளில்நோன்பும் ஒன்றாகும். ரமழான் மாதத்தில் நோன்பிருந்து இஸ்லாத்தின் மாண்புகளையும் மகத்துவங்களையும் புரிந்துகொள்ள இஸ்லாம் அதற்கு வழங்கியுள்ள சிறப்புகளை அறிந்து கொள்வது முக்கியமாகும்.

ஆரம்ப காலங்களில் குடும்பத்தில் மூத்தவர்கள் அனைவரும் நோன்பிருப்பதால் சிறுவர்களும் நோன்பு நோற்று வந்தனர். இதனால், நோன்பு என்பது அனைவராலும் கடைப்பிடிக்கப்படும் ஓர் இபாந்த்தாக இருந்தது. இந்தநிலை இப்போது குறைந்து வருகிறது. வளர்ந்தவர்களில் பலரும் தொழிலைக் காரணம் காட்டி நோன்பு நோற்பதைத்தவிர்த்து வருகின்றனர். எனவே, இது குறித்து விழிப்புணர்வூட்டுவது அவசியமாகும்.

நோன்பு என்பது இஸ்லாத்தின் தூண்களில் ஒன்றாகும். இது இஸ்லாம் இஸ்லாம் எனும் கட்டடத்தைக் கட்டி எழுப்ப முடியாது. ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பது கட்டாயக் கடமை என்பதை ஏற்காதவர் முஸ்லிமாக முடியாது.

''வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாரும் இல்லை என்றும் முகம்மத் அவர்கள் இறை தூதர் என்றும் உறுதியாக நம்புதல், தொழுகையை நிலைநிறுத்துதல், ஸகாத் செய்தல், நோன்பு நோற்றல் ஆகிய ஐந்து காரியங்களின் மீது இஸ்லாம் நிறுவப்பட்டுள்ளது'' - என்று இறை தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர் ரழி அறிவித்தார்கள் (4 ஹாரி:8).

ஒருவர் நோன்பை முறையாக நோற்கிறார் என்றால் அது அவரின் ஈமானின் அடையாளமாக இருக்கிறது. இதனால் தான், நோன்புடன் தொடர்புபட்ட பல ஹதீஸ்களில் 'ஈமான், இஹ்திஸாப்' என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன.

இறைத் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''லைலத்துர்கத்ரில்நம்பிக்கை உடனும் நன்மையை எதிர்பார்த்தும் வணங்குபவரின் முன் பாவம் மன்னிக்கப்படுகிறது. ரமழானின் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நோன்பு நோற்கின்றவர்களில் முன்னைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன'' - என அறிவித்தார்கள்.



நபி (ஸல்) அவர்கள் நோன்பு கேடயமாகும் என்று கூறினார்கள். எதிரிகளின் ஆயுத வீச்சில் இருந்து எம்மைக்காப்பாற்றிக்கொள்ளவே கேடயம் பயன்படுத்தப்படும். நோன்பு என்பது வீணான இச்சைகளில் இருந்தும் சைத்தானின் தாக்குதலில் இருந்தும் மறுமையில் நரகத்தில் இருந்தும் பாதுகாக்கும் கேடயமாக அமைந்துள்ளது.

நோன்பு சுய கட்டுப்பாட்டை வளர்க்கின்றது. ஆசை இருந்தும் தேவை இருந்தும் உணவு மற்றும் பானம் இருந்தும் அவற்றை உண்ணாமல் பருகாமல் மனதைக் கட்டுப்படுத்தி பக்குவப்படுத்துகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க...)

MCAI Campus
MCAI CAMPUS கற்கை நெறிகள்
Mobile Phone Repairing
Auto CAD
Revit
3D Max
Mulity Multimedia
இரண்டு நாள்களில் கற்கை நெறிகள் பூர்த்தி செய்வதற்கான உத்தரவாதம்
MCSE- USA
Ms Office
Organ - Keyboard (by:Srikugan)
குறைந்த செலவிலான சிறந்த பயனை பெற்றிடுங்கள்...
சிறந்த அனுபவமிக்க ஆசிரியர்களால் வகுப்புக்கள் நடத்தப்படும்.
ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றலாம்...
பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர் யாவரும் இணைந்து கொள்ளலாம்.
வயது எல்லை கிடையாது...
விசேட கட்டண கழிவில் இப்போது...
Qualified Lectures From American Institute - AICT- Colombo
பாடநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
முன்பதிவுகளுக்கு 0775520940, 0212219464
MCAI Campus
ஆடியபாதம் வீதி,
கல்வியங்காட்டுச் சந்தி, யாழ்ப்பாணம்.

# அனைவருக்கும் ரமழான் பெருநாள் வாழ்த்துக்கள்



## புது வழி பிறக்கின்றது இன்று

அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து முழு மாதம் நோன் பிருத்தலின் பயனை இன்று முஸ்லிம்கள் அடைகின்றார்கள். ஷவ்வால் மாத முதல் பிறையை அவர்கள் மகிழ்வுடன் வரவேற்கிறார்கள்.

எமக்கு ஒரு புது தோற்றம்! புது வழி இன்று பிறக்கின்றது. இந்தப் புது வழி எம்மைப் புது மனிதராக்குகின்றது. ரமழான் மாதம் முழுவதும் கெட்டனவற்றை விட்டோம்; நல்லனவற்றைப் பெற்றோம். மனம் பூரிக்கின்றது! இறையச்சம் 'தக்வா' எம்முள் துளிர் விடுகின்றது. ஏன்? ஏசவல்ல நாயகனின் கட்டளைப்படி நடந்ததினால். எதிர்வரும் 335 நாள்களிலும் நாம் நடக்க வேண்டிய நேர் வழிப்பாதையை ரமழான் எமக்கு நன்றே கற்றுத் தந்தது. நாம் நன்றியுள்ள மக்கள் - அல்லாஹ்வுக்கே முதல் நன்றி கூறுகின்றோம்!

இன்று முஸ்லிம்கள் பலவாறும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சோதனைக்குப் பிறகுதானே சாதனை - மேடேறிய பின்புதானே பள்ளம் - 'இன்னம அல் உஸ்ரியுஸ்ரன் வஇன்ன மஅல் உஸ்ரி யுஸ்ரா' என்று குர்ஆன் நமக்கு கஷ்டத்தைத் தொடர்ந்து, கனிவு நிலை வரும் என்று எவ்வளவு அழகாகச் சொல்லித் தருகின்றது! சகிப்புத்தன்மைக்கு சாமரை வீசி சுகந்தம் தரும் வழிமுறையே இதுவல்லவோ.

இந்த காற்றாடியை நாம் முஸ்லிம்கள் வீசுவோம். சக இன மக்களுக்கும் நாம் வழிகாட்டுவோம். எம்மை அடிக்க வரும்போது ''நான் நோன்பு, உன்னைத் திருப்பி அடிக்க மாட்டோம்.'' என்று அனைவருக்கும் புத்தி புகட்டுவோம். அண்ணல் நபிகள் நாயகம், கி.பி. 622 இல் பிரகடனப்படுத்திய மதீனாவில் மனித உரிமை சாசனம் மூலம், ஒரு முஸ்லிம் ராஜ்யத்தின் ஏனைய மதத்தினருக்கு உரிமை பெற்று வாழ்வதற்கு வழிசமைத்துக் கொடுக்கப்பட்டது. மனுகுல உயர்வுக்கு, சக வாழ்வுக்கு, சமாதானத்துக்கு, புரிந்துணர்வுக்கு, யதார்த்தபூர்வ வழிமுறை இதுவல்லவோ.

எமது நாட்டின் ஐக்கியத்துக்கு, ஒருமைப்பாட்டுக்கு நாம் முன்நின்று உழைப்போம். உழைப்பின் ஊதியம் பெறுவோம். மறந்திடாதீர்கள். இது நோன்பு புகட்டிய பாடம்!

அனைத்து மக்களுக்கும் ஈத் முபாரக்!

**அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர்**
முஸ்லிம் விவகார முன்னாள் அமைச்சர்,
செயலதிபர் - முஸ்லிம் முற்போக்கு முன்னணி.

## நோன்பின் மகத்துவம்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு கோபத்தைக் கட்டுப் படுத்திப் பொறுமையைப் போதிக் கின்றது. இவ்வாறு உடலையும் உள் ளத்தையும் கட்டுப்படுத்தி பக்குவமாக வாழ நோன்பு பயிற்சி அளிக்கிறது.

இறைத் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''பொய்யான பேச்சையும் பொய்யான நடவடிக்கைகளையும் விட்டு விடாதவர் உணவையும் பானத்தையும்விட்டுவிடுவதில் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையும் இல்லை.'' - என அபு ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவித்தார்கள். எனவே, உண்மையான, முறையான நோன்பு சுய கட்டுப்பாட்டை வளர்க்கிறது எனலாம். நோன்பாளியின் து ஆ விசேடமாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாகும். அல் குர் ஆனிலும் நோன்பு பற்றிக் கூறிய பின் னர் து ஆ பற்றியும் கூறப்படுகின்றது.

''நபியே என்னைப் பற்றி எனது அடியார்கள் உம்மிடம் கேட்டால், நிச்சயமாக நான் அருகிலேயே இருக்கிறேன். (எனக் கூறுவீராக) பிரார்த்திப்பவன் என்னை அழைத்தால் அழைப்புக்கு விடை அளிப்பேன். எனவே, அவர்கள் நேர்வழி பெறும் பொருட்டு என்னை அழைக்கட்டும். மேலும் என்னை நம்பிக்கை கொள்ளட்டும் (2:185 - 186).


''நோன்பாளி நோன்பு திறக்கும் போது மறுக்கப்படாத து ஆ, அவருக்கு உண்டு.'' என நபி (ஸல்) கூறினார்கள் என அமீர் இப்னு ஆஸ் (ரழி) அறிவிக்கின்றார்கள். இவ்வாறு பல்வேறுபட்ட கோணங்களில் பார்க்கும் போது நோன்பின் மாண்பு பளிச்செனத் தெரியவரும்.

எனவே, புனித ரமழானில் நாமும் நோன்பு நோற்பதுடன் எமது குடும்பத்தில் உள்ள அனைவரையும் நோற்கச் செய்து அதன் பாக்கியங்களை முழுமையாகப் பெற்றுக் கொள்ள முயல்வோமாக!

அனைவருக்கும் ரமழான் பெருநாள் வாழ்த்துக்கள்

**MODERN CITY INN**
**நீர்கொழும்பு மொடேன் சிற்றி இன்**

ஆடம்பர அறைகள் குடும்பமாக தங்கும் அறைகள் சிறிய மாநாட்டு மண்டபம் கொண்டாட்டம், களியாட்டங்களுக்கான வசதி, விமான நிலைய சவாரி, கடற்கரை சுற்றுலா.



15% கட்டண சலுகை

- ✓ குறுகிய தூரத்தில் இருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்தும் வரும் பஸ் நிறுத்தம்.
- ✓ 15 நிமிட ஓட்டத்தில் விமான நிலையம்.
- ✓ அதிவேக பாதை மூலம் 30 நிமிடங்களில் கொழும்பு நகருக்கு.
- ✓ வசதியான குளிரூட்டப்பட்ட அறைகள்.
- ✓ இணைப்பு குளியல் அறை சுடுநீர் வசதியுடன்.
- ✓ மிக நடுத்தரமான கட்டணம்.
- ✓ பஸ் நிறுத்தத்தில் இருந்து. விமான நிலையத்துக்கும் தேவையான Taxi போக்குவரத்து ஒழுங்கு செய்து தரப்படும்.

426, பிரதான வீதி, நீர்கொழும்பு.
தொடர்பு:- 031 2233 967
077 901 1900/ 078 450 6918
moderncityin@yahoo.com
moderncityinn.com

**Study with Part time Work**

Malasiya / Singapore / Cyprus

- முதலாம் வருடம் படித்துவிட்டு 2ம் வருடத்தில் இருந்து வேலை.
- 2ம் வருடம் வேலையுடன் சேர்ந்து படிப்பை முடித்துவிட்டு 3ம் வருடம் Australia / USA வில் மேற்படிப்பை மேற்கொள்ளும் வாய்ப்பு.

2017 July/September பிரிவுகள்

O/L - 3C, 3S மட்டும் IELTS தேவையில்லை

வரையறுக்கப்பட்ட மாணவர் குழாம் மட்டும்
அங்கீகரிக்கப்பட்ட College மட்டும்
அங்கீகரிக்கப்பட்ட Hotel ல் வேலை

தங்குமிட வசதி இலவம்

**சேவை**

UK/ USA/ Canada Swiss/Franch போன்ற நாடுகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு அனைத்து சேவைகளும் செய்து தரப்படும்
Bank Balance (வங்கியில் பண வைப்பு)
விண்ணப்பம் நிரப்புதல்
Appointment போடுதல்
Document சரிபார்த்தல்
Document தயார்படுத்தல்
போன்ற சேவை

NEW WAY SKY LINE INSTITUTE
No. 2C, IBC Road, Colombo -06.
(Near by Arpico Wellawatte - sea side)
Tel : 0114 575 043 / 077 334 7332

**கிருபா லேணர்ஸ்**
**KIRUBA LEARNERS**

Govt: Approved A Grade Driving Training School



No.1 Driving Training School IN NORTH

தலைமைக் காரியாலயம்: இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

021 222 4353
021 492 3200
0777225292

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள்

- அடையாள அட்டை
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதி)
- திருமண அத்தாட்சிப் பத்திரம் (பெண்கள் மட்டும்)
- சாரதி அனுமதிப்பத்திரம் (வைத்திருந்தால்)
- தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் வழங்கும் மருத்துவச் சான்றிதழ்



# அனைவருக்கும் ரமழான் பெருநாள் வாழ்த்துக்கள்




## yarl Pardy
## யாழ் பாடி

யாழ். மண்ணில் சுவையான பாரம்பரிய
ஒடியல் கூழை சுவைத்து மகிழுங்கள்.
சனி, ஞாயிறு மற்றும் புதன்கிழமைகளில்
முற்பகல் 10 மணி தொடக்கம்.

1 cup 100/=
மட்டுமே





No.49- 51, Amman Road, Nallur, Jaffna.
Email - tysunda@ gmail.com
House Keeper - 075 9875800
Tel:- 021 222 6868/ 075 934 0026/
077 7360353





## ஸ்ரீதேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

குழந்தையின்மை, ஆண்மைக் குறைவு, சர்க்கரை நோய், சொரியாசிஸ், ஆஸ்மா, மூட்டுவலி, பக்கவாதம், வலிப்பு நோய், மனநிலை சரியின்மை, சிறுநீரக பிரச்சினை, மூலம், பாலியல் நோய் குணமடைய தொடர்பு கொள்ளுங்கள்.

பாரம்பரிய சித்த மருத்துவர்
Dr.G. ஜெகதீஸ்குமார்

## ஆண்மைக் குறைவிற்கு நிரந்தரத் தீர்வு

உயிரணுக்கள் உற்பத்தியில் சாதனை

எங்களது மருந்தை ஒரு சில நாள்கள் மட்டும் தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் செயற் கையாக இல்லாமல் இயற்கையாகவே குழந்தைப் பாக்கியம் பெறலாம். திருமணத்துக்குத் தயாராகும் வாலிபர்கள் மற்றும் முதியவர்கள் எங்களது சிகிச்சை யின் பலனை முதல் மாதத்திலேயே முழுமையாகப் பெற்று இல்லற வாழ்வை இனிமையாக ஆரம்பிக்கலாம்.

செல்: 0091 9842457673

**இலங்கை செல்: 075 4154364**

வைத்திய கட்டணத்தை வங்கியில் வைப்புச் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**ஸ்ரீதேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை**
இராமாபுரம், சென்னை 89, இந்தியா
E-mail:sridevisiddha@gmail.com Skype -sridevisiddha



கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா. மற்றும் முல்லைத்தீவு **IELTS Exam Centre**

**Diploma in Graphic Designing** Duration : 4 Months

**Diploma in Web Designing** Duration : 4 Months

**Diploma in Computer Hardware** Duration : 3 Months

**Microsoft Office Application** Duration : 3 Months

**Auto CAD** 2D & 3D Duration : 2 Months

**Computerized Accounting** Accpack + MYOB Quick book + Tally Duration : 2 Months

**Spoken Sinhala**
அரச கரும மொழித் திணைக்களத்தின் பரீட்சைக்கான பாடப்பரப்பும், மேலதிக பேச்சுப் பயிற்சியும்

**BRITISH COLLEGE OF EDUCATION**

**DIPLOMA IN SPOKEN ENGLISH**

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளிவரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்

முதன் முறையாக IELTS பரீட்சை நிலையமாக அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனம்

கல்வி கற்க மற்றும் குடியேற | SPOUSE விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு

**IELTS** | IELTS Life Skills | A1 | B1

சர்வதேச மொழிப் பாடநெறிகள் ஆரம்பமாகின்றன.

ஜேர்மன் / சுவிஸ் மொழி (DEUTSCH)

French மொழி (FRENCH)

Netherlands மொழி (DUTCH)

**HOT LINE : 0777-596148**

23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd. Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
மிக விரைவில் கிளிநொச்சி மற்றும் நெல்லியடியில்
565, Peradeniya Rd, Kandy. 13, 1st chepal Rd, Colombo-06.

# அனைவருக்கும் ரமழான் பெருநாள் வாழ்த்துக்கள்

## இனிய ஈதுல் பித்ர் நல்வாழ்த்துகள்



இன்றைய தினம் 'ஈதுல் பித்ர்' நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் சர்வதேச முஸ்லிம்களுக்கும் இலங்கைவாழ் முஸ்லிம்களுக்கும் என் இனிய 'ஈதுல் பித்ர்' நோன்புப் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்ற நோன்பாளிகளுக்கு இறைவனால் பரிசாக வழங்கப்பட்டிருக்கும் இந்தப் பெருநாளானது மிகப் பெரிய 'வெகுமதியாகும்'.

பல படிப்பினைகளை எமக்குக் கற்றுத்தந்திருக்கும் நோன்பு எம்மை விட்டுப் பிரிந்தாலும் அதன் படிப்பி னைகளைத் தொடர்ந்தும் நாம் கடைப்பிடிக்கக்கூடிய பாக்கியத்தையும், அருளையும் இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டும். மேலும் பல வருடங்களாக நடைபெற்று முடிந்திருக்கும் யுத்தத்துக்குப் பின்னர் அபி விருத்தியையும், சமாதானத்தையும், ஒற்றுமையையும், நிம்மதியான வாழ்வையும் எதிர்பார்த்திருக்கும் வடக்கு மாகாண தமிழ் - முஸ்லிம் மக்கள் அதனை அடைந்து கொள்வதற்கும், சமாதானம் நிலவவும் இறைவனையும் இந்தத் தருணத்தில் பிரார்த்திக்கின்றேன்.

எதிர்காலம் எம் அனைவருக்கும் சிறப்பாக அமையவேண்டும் என்பதோடு, இலங்கைத் திருநாட்டில் குறிப்பாக வடக்கில் அனைத்து இனம் மற்றும் மதங்களுக்கும் இடையில் என்றும் இன ஐக்கியமும், நல்லிணக்கமும் ஏற்பட்டு சுமுகமான வாழ்க்கை ஏற்பட எல்லாம் வல்ல இறைவனை இந்த வேளையில் வேண்டிக் கொள்கின்றேன்.

அய்யூப் அஸ்மின்
(உறுப்பினர் - வடக்கு மாகாணசபை)

## நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்



இன்றைய தினம் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து முஸ் லிம்களுக்கும் இனிய ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் வாழ்த்துகளை அகில இலங்கை முஸ்லிம் வாலிப முன்னணிகளின் - யாழ். மாவட்ட சம்மேளனத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன். ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று, இஸ்லாம் கூறும் நல்லொழுக்கங்களையும், இறையச்சத்தையும் அடைந்து கொண்ட நாம் தொடர்ந்தும் இறையச்சத்துடன் வாழ எல்லாம் வல்ல அல்லாஹ் துணை செய்ய வேண்டும் என பிரார்த்திப்பதோடு இந்தப் பெருநாள் தினத்தில் அல்லாஹ்வின் அருள் எம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என ஆசை கொண்டவனாக மீண்டும் ஒருமுறை வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
வஸ்ஸலாம்.

ஐ.எல்.நிராஸ்
தலைவர், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் யாழ். மாவட்ட சம்மேளனம்.

## பெருநாள் தினத்தின் கடமைகள்

சகோதரர்களே நாம் இன்று பெருநாள் தினத்திலே புத்தாடை பூண்டவர்களாக ரமழான் மாதத்தின் முழு நோன்புகளையும் நோற்று ஈகைத் திருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். இந்தப் பெருநாள் தினத்திலே நாம் செய்ய வேண்டிய கடமைகள் நிறையவே இருக்கின்றன. பேரன்பு மிக்க இஸ்லாமிய சகோதரர்களே ஈதுல் பித்ர் என்றால் அதன் கருத்து ஈகைத் திருநாள் ஆகும். இந்த ஈகைத் திருநாளில் நாங்கள் மட்டும் புத்தாடை பூண்டு நல்ல உணவுகள் உண்டு சந்தோசமாக இருக்காமல் ஏழை எளியவர்களையும் கவனிக்க வேண்டும்.

இந்தத் தினத்தில் வீண் விளையாட்டிலோ, வீண் களியாட்டத்திலோ கழிப்பதை இஸ்லாம் தடை செய்துள்ளது. பெருநாள் தினத்தில் முக்கியமாக கீழ் சொல்லப்பட்டுள்ளதைக் கடைப்பிடிக்குமாறு இஸ்லாத்தில் சொல்லப்பட்டுள்ளது.

★தக்பீர் சொல்லல், பிறை தென்பட்டது முதல் பெருநாள் தொழுகை வரை உள்ள நேரங்களில் ஈதுல் பித்ர் தினத்தில் சொல்வது சுன்னத்தாகும்.

★இரு பெருநாள் இரவுகளிலும் அதிக நன்மையில் ஈடுபடுதல்.

★குளித்துச் சுத்தமாகிக் கொள்ளல்.

★புத்தாடை அணிதல், புத்தாடை இல்லாவிட்டால் சுத்தமான அழகிய ஆடை அணிதல்.

★ஆண்கள் மணம் பூசிக் கொள்ளல், வெளியில் செல்லாது வீட்டில் தங்கியிருக்கும் பெண்கள் மணம் பூசுதல்.

★இயன்றவரை அதிகமாகத் தர்மம் செய்தல்.

★ஸதகத்துல் பித்ர் கொடுத்தல்.

★பெருநாள் தொழுகையிலும் குத்பாவிலும் கலந்து கொள்ளல்.

இந்த எட்டுக்காரியங்களில் ஸதகத்துல்பித்ர்கடமையானது ஏனையவை அனைத்தும் சுன்னத்தானவை.

தான் விரும்பி உண்ணும் உணவுப் பொருள்களிலேயே பெருநாள் பித்ரா தர்மமாகக் கொடுக்க வேண்டுமே அன்றி நாம் பிரியப்படாததை விரும்பாததை அளவுக்கதிகமாகக் கொடுத்தாலும் நாடிய நன்மை கிடைக்காது என்பதைத் திருக்குர் ஆன் கூறுகிறது.


பித்ரா தர்மத்தைத் தமது பொறுப்பில் உள்ளவரான தாய், தந்தை, பாட்டன், பாட்டி, மகன், பேரன், மனைவி ஆகியோருக்குக் கொடுக்க முடியாது. இவர் சொந்தப் பொறுப்பில் இருந்தால் அவர்களுக்காகவும் நாம் பித்ரா தர வேண்டும். மற்ற உறவினர்களில் ஏழை எளியவர் இருந்தால் அவர்களுக்கு முதலிடமளித்துப் பித்ரா கொடுக்க வேண்டும்.



வெளியூர்களில் இருக்கும் ஏழை எளியவர்களுக்கு ஓரிரு நாள்கள் முன்பாகவே அனுப்புவதை இஸ்லாம் அனுமதிக்கிறது. தவித் தோழர் இப்வை உமர் (ரழி) அன்ஹீ தனது பித்ரா தர்மத்தை பெருநாளைக்கு முன்பே அனுப்பி வைத்த நிகழ்ச்சி அபுதாவுதில் இடம் பெற்றுள்ளது.

இவ்விதம் பித்ரா தர்மத்தை கொண்டு இந்தப் பெருநாள் தொடங்குவதால் இதற்கு ஈதுல் பித்ர் ஈகைப் பெருநாள் எனப் பெயரானது.

எனவே, புனித ஈகைத் திருநாளை நல்ல முறையில் கொண்டாடி நல்ல அமல்கள் செய்து அல்லாஹ்வின் திருப்பொருத் தத்தைப் பெற்றுக் சுகனம் செல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள் பாலிப்பானாக!




# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கி பிரவகித்து அடங்கியிருக்கின்றது.


அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – அவுஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

14



## அத்தியாயம் - II

### புலிகளின் குகைக்குள்

உண்மையான போர்க்களமுனையில் இருந்து ஆயிரம் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் ஆபத்து இல்லாத பாதுகாப்பான சூழலில் இருந்துகொண்டு, புரட்சி அரசியலைப் பற்றி உரத்துப் பேசிக் கொண்டிருப்பது வேறு; ஆயுதப் புரட்சிப்போராட்டம் ஒன்றிலே தீவிரமாகப் பங்கெடுக்கும் நிலையில் ஒருவர் தனது உரிமையையும், உயிரையும் அர்ப்பணிப்பது முற்றிலும் வேறான ஒரு விடயம். ஆகவே, இந்தியாவுக்கு நாம் பயணித்தமையும், அங்கே தலைமறைவாக இருந்த விடுதலைப் புலித் தலைமையையும், போராளிகளையும் சந்தித்தமை, விடுதலைப் போராட்டத்தில் எமக்கிருந்த ஆழமான அர்ப்பணிப்பையும், பங்களிப்பையும் சுட்டிக் காட்டுவனவாக அமைந்தன. இங்கிலாந்தின் சௌகரியங்களோடு நாற்காலி அரசியல் பேசுவது அல்ல இது. மாறாக புரட்சிகர புதிய அரசியலுக்காக சிறிலங்கா அரசால் தேடப்படும் தீவிரவாத இளம் போராளிகளை சந்திக்கும் ஒரு முயற்சியே இது. மக்களின் விடுதலைப் போராட்டத்தை, விடுதலைப் புலிப் போராளிகள் நாடாளுமன்றத்துக்குப் புறம்பான ஆயுதப் போராட்ட அரங்குக்குள் கொண்டு சென்றிருந்தார்கள். அந்த வரலாற்றுக் காலகட்டத்தில், அரசின் பாதுகாப்பு யந்திரங்களான அரச படைகள் மீதும் காவற்றுறை மீதும் சிறு சிறு கெரில்லாத் தாக்குதல்களில் விடுதலைப் புலிப் போராளிகள் ஈடுபட்டிருந்தார்கள். ஆகவே, தமிழ் மக்களையும் போராளிகளையும் எம்மையும் ஆழமாகப் பங்குகொள்ளச் செய்யப்போகும் புரட்சி அரசியலில் நாம் ஈடுபடத் தொடங்கி இருந்தோம். இது வெறும் விநோதம் அல்ல. அந்த நேரம் நாம் இருவரும் ஆயுதங்களை ஏந்தவில்லையாயினும், கெரில்லா அமைப்பின் தலைமையோடு நெருக்கமான உறவும் பரிந்துணர்வும் கொண்டிருந்தோம். இயக்கத்தின் உள்ளார்ந்த செயற்பாடுகள் பற்றிய விவரங்களை எம்மோடு பகிர்ந்து கொள்ளும் நம்பிக்கைக்கு உரியவர்களாக நாம் இருந்தோம். இதனால், போராளிகள் மட்டிலும் போராட்டம் மட்டிலும் பெரிய பொறுப்புணர்வு எம்மீது படிந்திருந்தது. இந்தப் போராளி இயக்கத்தின் அமைப்புப் பற்றியும் அதன் தலைமறைவான தலைவர்கள் யார் யார் என்பது பற்றியும் அந்தரங்க விவரங்களை நாம் அறிந்து கொண்டமையால், கனதியான பொறுப்பு எம்மீது இருப்பதையும் உணர்ந்து கொண்டோம்.

மும்பையில் இருந்து விமானம் மூலம் சென்னை வந்தோம். கிருஷ்ணனும் எம்முடன் கூட வந்தார். விடுதலைப் புலிகளையும், தலைவர் பிரபாகரனையும் சென்னையில் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது. அன்று இரவு நாம் விமானத்தில் வருகின்றமை புலிகளுக்குத் தெரியும். ஆனால், சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் எம்மைப் பகிரங்கமாகச் சந்திக்க யாரும் இல்லை. தலைமறைவு அரசியலுக்குள் இப்படித்தான் நாம் பிரவேசித்தோம். அன்றிலிருந்து இரகசிய அரசியல் எம் வாழ்வில் இரண்டறக் கலந்தது.

1979 ஆம் ஆண்டு நாம் சென்னைக்கு விஜயம் செய்தபோது, வணங்காமுடியான இந்திரா காந்தி அம்மையார் இந்தியாவின் ஆட்சிப்பீடத்தில் அமர்வதற்கு ஆயத்தமாக இருந்தார். (1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தியப் பிரதமராக அவர் பதவியேற்றார்). மூத்த அரசியல்வாதியான கலைஞர் கருணாநிதி தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியிலிருந்தார். அந்தக் காலகட்டத்தில் தமிழ்நாட்டு அரசியலும், இந்திய வெளிவிவகாரக் கொள்கையுமே தமிழீழ மக்களின் தேச சுதந்திரப் போராட்டத்தின் பாதையை நிர்ணயிக்கும் சக்திகளாக விளங்கின. குறிப்பாக, இந்திய வெளிவிவகாரக் கொள்கை உள்நாட்டிலும், பிராந்திய ரீதியாகவும், அனைத்துலக மட்டத்திலும் தாக்கத்தை விளைவிக்கும் பரிமாணத்தைக் கொண்டதாக அமைந்தது.

பனிப்போர் காலத்து அனைத்துலக உறவுகளும், அணிசேரா இயக்கத்தின் கொள்கைகளுமே எழுபதுகளிலும் எண்பதுகளிலும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை வடிவமைத்தன. அணிசேரா இயக்கத்தின் மூலபிதா என்ற வகையில், நடுநிலைக் கொள்கையையும், தலையிடாக் கொள்கையையும் மூன்றாவது உலக நாடுகளுக்கு இந்தியா பரிந்துரைத்து வந்தது. ஆயினும், அறுபதுகளின் ஆரம்பத்தில் இந்திய வடக்கு கிழக்கு எல்லையில் சீனா படையெடுப்புநடத்தியதைத் தொடர்ந்து வல்லரசுகளின் அழுத்தங்களுக்கு சிக்குப்படாமல் ஒரு புதிய உலக ஒழுங்கைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற இந்தியாவின் கனவு தகர்ந்து போனது.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்ற வகையில் உலகப் பெருநாடாகவும், பிராந்திய வல்லரசாகவும் தனது ஆதிக்கத்தைச் செலுத்த இந்தியா விரும்பியது. ஆனால், அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஆசியாவில் ஏற்படுத்திய உடன்பாட்டு இணைப்பின் பலம், தனக்கு அச்சுறுத்தலாக அமைவதாகவும் இந்தியா கருதியது. இந்தப் பாதுகாப்புத் தொடர்பான அச்சமே சோவியத் யூனியனுடனான ஒரு தந்திரோபாய உடன்பாட்டில் இணைந்து கொள்ள இந்தியாவை நிர்ப்பந்தித்தது. இதுவே எழுபதின் முற்பகுதிகளில் அணுகுண்டு ஒன்றையும் பரீட்சித்து, அணு வல்லரசாக உயர்வதற்கு இந்தியாவை ஊக்குவித்தது. மூன்றாவது உலக நாடுகளுக்கு உகந்தது அணிசேராக் கொள்கை என்று தொடர்ந்து இந்தியா பரிந்துரை புரிந்தாலும், சோவியத் முகாமுக்குள்ளேயே இந்தியா நிலையூன்றி நின்றது. பல நூற்றாண்டுகளாகக் குடியேற்றவாதச் சுரண்டலுக்கு உள்ளாகி, போராட்டம் மூலமே சுதந்திரத்தை வென்றெடுத்த ஒரு நாடு என்ற வகையில், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த பல ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் மட்டில் இந்தியா அனுதாபம் காட்டியது. அத்துடன், அந்தப் போராட்டங்களுக்குத் தார்மீக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் இந்தியா ஆதரவு வழங்கியது. அனைத்துலக மட்டத்தில் கண்டிக்கப்பட்ட 'அப்பாதை' இன ஒடுக்கல் முறைக்கு எதிராகப் போராடிய ஆபிரிக்க தேசிய காங்கிரஸுக்கு ஆதரவு வழங்குவதில் முதல் நிலை நாடாக இந்தியா திகழ்ந்தது. அத்தோடு ஆபிரிக்காவின் ஏனைய விடுதலைப் போராட்டங்களுக்கும், முதல்நிலை ஆதரவு வழங்கியது. பலஸ்தீன போராட்டம் 'பயங்கரவாதம்' என்று கருதப்பட்ட அரசியல் ராஜதந்திர உலகில், பலஸ்தீன விடுதலை இயக்கமான PLO இற்கு இந்தியா வலுவான ஆதரவு வழங்கியது. இது பலஸ்தீன மக்களுக்குப் பெரியதொரு தார்மீக உந்துதலாக விளங்கியது.

ஏனைய கண்டங்களிலும் பிரதேசங்களிலும் நடைபெற்ற தேசிய விடுதலைப் போராட்டங்களுக்குத் தாராள மனப்பான்மையுடன் வெளிப்படையாக தார்மீக, இராஜதந்திர உதவிகளை வழங்கி வந்த இந்தியா, தனது கொல்லைப்புறத்தில் நிகழ்ந்த போராட்டங்கள் சம்பந்தப்பட்டவரை சந்தர்ப்பவாதத்தையும் பிரதேச நலன்பேணும் சாணக்கியத்தையுமே கடைப்பிடித்தது. தமிழ் மக்களின் போராட்டத்தை உதாரணமாக இங்கு எடுத்துக் கொள்ளலாம். தமிழீழ மக்களின் அவலநிலை பற்றியும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் பற்றியும் இந்தியா நன்கு அறிந்திருந்தது. 1978 ஆம் ஆண்டு, விடுதலைப் போராட்டத்தை எடுத்து விளக்கி, பாலா, இந்திரா காந்தி அம்மையாருக்குக் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். பழ.நெடுமாறன் போன்ற தமிழ்நாட்டு அரசியல்வாதிகளும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக இந்திரா காந்திக்கு விளக்கம் அளித்திருந்தார்கள்.

இவற்றையெல்லாம் அறிந்த பின்னரும், தமிழ் மக்களின் துன்பநிலை தொடர்பாக, தனது மனக்கலக்கத்தை மட்டும் இந்திய அரசு அறிக்கைகளில் தெரிவித்தது. குறிப்பாக, 'ஆழ்ந்த துயரம்' என்ற, யாருக்கும் பாதகம் இல்லாத இராஜதந்திர பதத்தைப் பிரயோகித்தது. இனி, தான் ஒரு பிரதேசப் பேரரசு என்ற நிலையில் இலங்கையில் நடப்பவை மீது ஒரு கண் வைத்திருப்பதாகச் சிங்களவருக்கு எச்சரிக்கை செய்ததோடு நிறுத்திக் கொண்டது.

தனது நாட்டின் எல்லைக்குள் பிரிவினைப் போக்குகளைத் தூண்டிவிடவோ உற்சாகப்படுத்தவோ கூடாது என்பதில் இந்தியா என்றுமே விழிப்பாகவும் அக்கறையாகவும் இருந்திருக்கின்றது. ஆகவே, அருகே உள்ள இலங்கையில் தமிழ் மக்கள் தொடுத்திருக்கும் தனியரசுக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்கும் நோக்கம் இந்தியாவுக்கு அறவே கிடையாது. ஆனால், தென்னகத்தில் உள்ள ஆறு கோடித் தமிழ் மக்கள் பொங்கி எழுந்தால், நாட்டில் நிலைகுலைவு ஏற்படலாம் என்ற ஆபத்தையும் குறைத்து எடைபோட்டு ஒதுக்கிவிடவும் இந்தியாவால் முடியவில்லை. தமிழ்நாட்டுத் தமிழர்கள் பாக்குநீரிணைக்கு 22 மைல்களுக்கு அப்பால் உள்ள தங்கள் சகோதரர்களுக்காகப் பெரும் அனுதாபம் கொண்டவர்கள்.

இதைவிட, சிறிலங்கா அரசுத் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஒளிவு மறைவின்றி மேற்குலகத்துக்குச் சார்பாக இருந்தமை குறித்தும் இந்திரா காந்தி அம்மையார் பெரிதும் கலவரம் அடைந்திருந்தார். இந்து மாகடல் பிரதேசத்தில் அமெரிக்கா தனது வல்லாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான புறநிலைச் சூழலை சிறிலங்கா அரச தலைவர் வேண்டுமென்றே உருவாக்கிக் கொண்டிருக்கிறார் என அவர் அஞ்சினார். ஆனால், இந்தப் பிரதேசத்தில் தனது செல்வாக்கையே தக்கவைக்க இந்தியா விரும்பியது. எனினும், அரசியற் சித்து விளையாட்டில் கைதேர்ந்தவரான இந்திரா காந்தி இலங்கையின் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் தொடர்ந்து அங்கீகரித்தார். அத்தோடு புதுடில்லியின் செல்வாக்கு வீச்சுக்குள் சிங்கள அரசை மீளவும் கொண்டுவரவேண்டும் என்பதற்கான ஒரு தந்திரோபாயமாகத் தமிழ்ப் போராளிகளைச் சகித்துக் கொண்டார். மேற்குலக ஆதிக்க வியூகத்துக்குள் சிங்கள அரசைச் சிக்கவிடாது, அதனைத் தனது ஆதிக்க வியூகத்துக்குள் கொண்டுவருவதே இந்தத் தந்திரோபாயத்தின் ஒட்டுமொத்த நோக்கமாகும். ஆகவே, இந்த பிராந்திய அரசியல் பின்புலத்தில், இலங்கையின் வடக்குக் கிழக்கில் வாழ்ந்த பெருந்தொகையான தமிழ் மக்கள் தமிழ்நாடு தமக்குப் பாதுகாப்பான இடமெனக் கருதினார்கள். விடுதலைப் புலிப் போராளிகளுக்கு தமிழகம் ஒரு பாதுகாப்பான புகலிடமாக மட்டுமல்லாது உறுதியான தளமாகவும் அமைந்தது. தாம் வசிக்கவும் அச்சமின்றித் தங்கள் திட்டங்களை வகுக்கவும் வாய்ப்பான இடம் இது என்று அவர்கள் கருதினார்கள். ஆகவேதான், புலிப் போராளிகள் சென்னையில் தங்கினார்கள். தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் வழங்கிய ஆதரவோடு, இலங்கையில் தலைமறைவாக வாழ்ந்த தமிழ்ப் போராளிகள், தமிழ்நாட்டில் பாதுகாப்பாகத் தங்கியிருந்தார்கள். ஆனாலும் உள்வீட்டு எதிரிகளால் எழுந்த பிரச்சினைகள், புலனாய்வுப் பிரிவுகளின் கூரிய கண்கள், சிறிலங்கா தூதரக அதிகாரிகளின் நாசகார நடவடிக்கைகள் ஆகியன காரணமாகத் தமிழ்நாட்டில் கூட, ஒரு தலைமறைவான அமைப்பாகவே விடுதலைப் புலிகள் இயங்கினர். இப்படியான பின்புலத்திலேயே மீனம்பாக்கம் விமான நிலையத்தை வந்தடைந்தோம். இந்தச் சூழல் காரணமாகவே அங்கே எம்மை யாரும் கண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால், இரண்டு மூன்று சோடிக் கண்கள் சனக் கும்பலுக்குள் எமது ஒவ்வொரு நடவடிக்கையையும் இரகசியமாக நோட்டமிட்டபடியே இருந்தன. கடைசியாக எமது இரகசியச் சந்திப்பு ஏற்படும் வரை, அவை எம்மைத் தொடர்ந்தன.

தொடரும்...

**வளர்இளம் பருவப் பிள்ளைகளைத் தனியாக விடாது அவர்களுடன் இருத்தல்**

வளர் இளம் பருவப் பிள்ளைகளைத் தனியாக விடாது அவர்களுக்குக் கல்வி வழங்குவதில், அவர்களுடன் இருப்பது என்ற மாநாட்டில் பேசிய திருத்தந்தை தாங்கள் பின்பற்றக்கூடிய மனிதர்கள் இல்லாமையால் இளையோர் தங்கள் வளர்ச்சிப் பாதையைத் தடை செய்கின்றனர். அல்லது தங்களையே தனிமைப்படுத்திக் கொள்கின்றனர். இளையோரைச் சென்றடைவதற்கு, அவர்கள் பிரச்சினைகள் பற்றி அவர்களிடம் பேசாமல் இருப்பது முதல்படி என்றும் கூறினார்.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவான்:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

**போர்த்துக்கல் காட்டுத் தீயில் பலியானவர்க்குத் திருத்தந்தை செபம்**

போர்த்துக்கல் நாட்டில் பரவிவரும் காட்டுத் தீயில் பலியானவர்கள் மற்றும் காயமடைந்தவர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்காகச் செபித்தார் திருத்தந்தை பிரான்சிஸ். காட்டுத் தீயில் சிக்கி குறைந்தது 62 பேர் பலியானமையுடன் 59க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனையடுத்து அந்த நாட்டில் மூன்று நாள் தேசிய துக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 156 இடங்களில் தீயணைப்பு மற்றும், மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

# யாழ்.பத்திரிசியார் கல்லூரி பரிசளிப்பு விழாவில் கொழும்பு பேராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகை



வடபகுதியின் பிரசித்தி பெற்ற கல்லூரிகளில் ஒன்றான யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் பரிசளிப்புவிழாநேற்றுமுன்தினம்23 ஆம் திகதி ஜூன் மாதம் 2017ஆம் ஆண்டு நடைபெற்றது. யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற யாழ்.பத்திரிசியார் கல்லூரி பரிசளிப்பு விழாவின் பிரதம அதிதியாக கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக வடமாகாண சமுக ஆலோசக நிபுணர் டாக்டர் ரட்ணசபாபதி அவர்கள் கலந்து கொண்டார். கல்லூரி அதிபர் ம.ஜெறோ செல்வநாயகம் அடிகளார் பரிசளிப்பு விழா அறிக்கையை வழங்கினார்.

புனித பத்திரிசியார் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில்





கலந்து கொள்ள கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை யாழ். வரும் இந்த வேளை தமிழ் மறைமாவட்டங்கள் தனி அலகாக இயங்க வேண்டும் என்ற ஆலோசனை முன் வைக்கப்பட்டது. தற்போது யுத்தம் முடிவடைந்துள்ளது. இனங்களுக்கும் மதங்களுக்குமிடையில் இன்னும் அதிக புரிந்துணர்வையும் இணக்கப்பாட்டையும் தோற்றுவிக்க முயற்சிகள் என்றுமில்லாதவாறு மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வேளை தமிழ் மறை மாவட்டங்கள் தனி அலகாக இயங்க வேண்டும் என்ற ஆலோசனை முன்வைப்பது பொருத்தமானது.

## உண்மையின் எண்ணங்கள்

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கொழும்பு உயர் மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகையை யாழ் மறை மாவட்டம் வரவேற்றது. தமிழ் மறைமாவட்டங்கள் தனி அலகாக இயங்க வேண்டும் என்ற ஆலோசனை முன்வைக்கப்பட்டது. இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் இரண்டாவது கர்தினால் என்ற பெயரும் பெருமையும் பெற்றவர் கொழும்பு உயர் மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை. கருதினால் பட்டம் பெற்ற பின்னர் பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை யாழ்.மறை மாவட்டத்திற்கு வருகை தருவது இது முதற் தடவையல்ல. யாழ்.ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஆயர்த்துவ பட்டமளிப்பின் போதும் வேறும் பல முக்கிய நிகழ்வுகளின் போதும் அவர் யாழ் மறை மாவட்டத்திற்கு வந்திருக்கிறார். தமிழ் மறைமாவட்டங்கள் தனி அலகாக இயங்க வேண்டும் என்ற விடயத்தை முதலில் முன்னெடுக்கக் கூடியவர். இது பற்றி சாதகமான எண்ணம் கொண்டவர். அவர் இந்த வேண்டுகோளை சிபார்சு செய்ய வேண்டியவர். அவர் தனக்கு இலங்கை கத்தோலிக்க திருச்சபையிலும் சிங்கள கத்தோலிக்க மக்கள் மத்தியிலும் பௌத்த, சிங்கள மக்கள் மத்தியிலும் எல்லாவற்றிற்கும் மேலாக கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப்பீட வட்டாரங்களிலும் இருக்கும் செல்வாக்கை பயன்படுத்துவது இங்கு சிறப்பானதும் காத்திரமானதுமாகும்.

# கியுடெக் கரித்தாஸ் சர்வமத சகவாழ்வு அரங்க அனுசரணையுடன் சர்வமத இப்தார் நிகழ்ச்சி



கியுடெக் கரித்தாஸ் சர்வமத சகவாழ்வு அரங்க அனுசரணையுடன் முஸ்லிம் லீக் யாழ்.பிராந்திய சம்மேளனம் இணைந்து நடத்திய இப்தார் நிகழ்ச்சி யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் 17 ஜூன் 2017 அன்று நடைபெற்றது. இந்த இப்தார் நோன்புத் திறப்பு நிகழ்ச்சியில் சமயத் தலைவர்களின் இப்தார் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் யாழ் பிரதேசசெயலர் பொன்னம்பலம் தயானந்தன் அவர்களுடன் கலாச்சார உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் யாழ்.உலாமா சபை மௌலவிகள், நாவாந்துறை பங்குத்தந்தை அன்ரனிபாலா அடிகள், போதகர் ஈனோக் புனிதராஜ் அடிகள், சர்வமதத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள்,யாழ் பல்கலைக் கழகமாணவர்கள் என 150 பேர் கலந்து கொண்டனர்.

# 11 ஆண்டுகளின்பின்னர் இயேசுவின் திருக்கல்லறை திறக்கப்படவுள்ளது

எருசலேமில் 11 ஆண்டுகள் சீரமைப்புப் பணிகளுக்குப் பின்னர் இயேசுவின் திருக்கல்லறை விசுவாசிகளுக்காக மீண்டும் திறக்கப்படவுள்ளது. இயேசுவின் திருக்கல்லறையை மீண்டும் திறக்கும் நிகழ்வில் கான்ஸ்டான்டிநோபிள் கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும் தந்தை முதலாம் பர்த்தலோ மேயு உட்பட பல முக்கிய கிறிஸ்தவத் தலைவர்கள் கலந்து கொள்வர். இயேசுவின் திருக்கல்லறை சீரமைக்கப்பட்டு தற்போது திறக்கப்படுவது வரலாற்றில் மூன்றாவது முறையாகவும், கடந்த இருநூறு ஆண்டுகளில் முதன் முறையாகவும் உள்ளது. உரோமைப் பேரரசர் கான்ஸ்ட்டைன் அவர்களின் அன்னை கெலன் இயேசுவின் திருக்கல்லறைப் பகுதியைக் கண்டுபிடித்த பின்னர் கி.பி.325ஆம் ஆண்டில் பேரரசர் கான்ஸ்ட்டைன் திருக்கல்லறையைக் கட்டினார்.

# கல்விப் பணிக்கு அரும்பணியாற்றி வைரவிழாக் காணும் கார்மேல் சபை கன்னியர்











யாழ்.மறைமாவட்டத்தில் கன்னியர்களாக பணியாற்ற தம்மை அர்ப்பணித்து - துறவற வாழ்வு பூண்டு - திருப்பணி புரிந்து கடந்த 60 ஆண்டுகளாகப் பணிபுரிந்து - குறிப்பாக கல்விப்பணி புரிந்து ஓய்வு நிலையில் தம் பணி வாழ்வின் வைரவிழா காணும் கார்மேல்சபை அருட்சகோதரிகளான அருட்சகோதரி ஸ்ரனிஸ்லஸ் மேரி, அருட்சகோதரி ஜெறோம், அருட்சகோதரி மாறி லூயிஸ், அருட்சகோதரி லைசா, அருட்சகோதரி ஜேம்ஸ் ஆகிய ஐந்து கார்மேல் சபை கன்னியரையும் காலைக்கதிர் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழ் பகுதி அன்பு நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்துவோம். இவர்கள் வடமாகாணத்தின் தலைசிறந்த பாடசாலையான டொன் பொஸ்கோ மற்றும் யாழ் நல்லூர் சென் பெனடிக்ற் போன்ற பாடசாலைகளில் பணியாற்றியுள்ளனர். இவர்களின் கல்விப்பணியால் வாழ்வில் உயர்வு பெற்றுள்ள அன்பு நெஞ்சங்கள் பலருடன் காலைக்கதிர் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழ் பகுதி அன்பு நெஞ்சங்களும் இணைந்து வாழ்த்துகிறோம்.

# இலங்கையில் அமைதியை ஊக்குவிப்பதற்கு திருப்பயணம்

*இலங்கையில் அமைதி மற்றும் ஒப் புரவை ஊக்குவிப்பதற்கு திருக்குடும்ப கன்னியர் சபை அருள் சகோதரிகள் நாடு முழுவதும் அமைதித் திருப்பயணம் ஒன்றை மேற்கொண்டனர். யாழ்ப்பாணத்திலிருந்து இந்த அமைதிப் பயணத்தைத் தொடங்கிய 49 திருப்பயணிகள் கொழும்பு செல்லும் வழியில் நுவரெலியாவில் உள்ள கத்தோலிக்கர்களைச் சந்தித்துப் பேசினர்.*

*சிங்கள - தமிழ் மொழிப் பிரச்சினை இருந்தபோதிலும் அன்பு மொழிகளால் அனைவரும் தங்களின் பாசத்தைப் பகிர்ந்துகொண்டனர்.*

*ஜூன் 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை திருக்குடும்ப கன்னியர் சபை அருள்சகோதரிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இத்திருப்பயணத்தில் 42 சிறுமிகள், இளம் பெண்கள் மற்றும் ஏழு அருள்சகோதரிகள் கலந்துகொண்டனர். இலங்கையில் வடக்கிலிருந்து தெற்கு வரை பயணம் செய்த இவர்கள், ஒருவர் மீது ஒருவர் அன்பையும், பாசத்தையும் பகிர்ந்து, நட்புணர்வை வளர்த்துக் கொண்டு, அமைதி மற்றும் ஒப்புரவை ஊக்குவித்துள்ளனர்.*

# இறைவாக்கினர் யோனாவின் கல்லறை அழிவுக்குள்ளாக்கிய நிலையில்!

ஈராக்கின் மொசூல் நகரிலுள்ள அசீரிய அரண்மனையின் அடித்தளத்தில் அமைந்திருந்த இறைவாக்கினர் யோனாவின் கல்லறையை முந்தைய இஸ்லாமிய ஆக்கிரமிப்பாளர்கள் அழிவுக்குள்ளாக்கியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. 2014 ஆம் ஆண்டு இஸ்லாமிய தீவிரவாதிகளால் மொசூல் நகரம் கைப்பற்றப்பட்ட சில நாள்களிலேயே, இறைவாக்கினர் யோனாவின் கல்லறையை அவர்கள் சேதமாக்கியுள்ளனர் என அகழ்வாராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். யூதர்களாலும், கிறிஸ்தவர்களாலும், இஸ்லாமியர்களாலும் மதித்துப் போற்றப்படும் இறைவாக்கினர் யோனாவின் கல்லறை சேதமாக்கப்பட்டுள்ளன, வரலாற்று இழப்பு என அவர்கள் மேலும் கூறியுள்ளனர். மொசூல் நகரின் வரலாற்று மற்றும், கலை இழப்புக்கள் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு அகழ்வாராய்ச்சியாளர்களை ஈராக் அரசு விண்ணப்பித்ததைத் தொடர்ந்து இறைவாக்கினர் யோனாவின் கல்லறை சேதம் குறித்து வெளி உலகிற்குத் தெரியவந்துள்ளது.

# ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

# இழுபறிப்படும் கன்னைகளால் ஊசலாடும் தமிழர் தலைவிதி!

''ஊருலகத்திலை கள்ளர் பயம் கூடிப் போச்சு.சனம் நிம்மதியாக வாழ ஏலாமல் கிடக்கு'' என்று புறுபுறுத்தபடியே கச்சான் கடையைத் திறந்தாள் செல்லாச்சி.

''சனத்துக்கும் சுயநலம் கூடிப் போச்சு.அரசியலும் அலங்கோலமாகக் கிடக்கு.உழைக்கிறதுக்குப் பயன்படுத்திற வாகனங்களுக்கு அள்ளை கொள்ளையாக வரி விதிக்கிற அரசாங்கம், நோகாமல் நுங்கு குடிக்கிறவையின் சொகுசு வாகனங்களுக்கு வரி விலக்குக் கொடுக்குது. இதை யாரிட்டைப் போய்ச் சொல்ல'' என்று சலித்துக் கொண்டார் ஏரம்பர்.

இதைக் கேட்ட வாத்தியார், ''இதனால்ல சமூகத்திலை ஒரு பிரிவு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, இன்னொரு பிரிவு மக்களின் நிலை தாழ்ந்து போகும். இப்படி ஏற்படுகிற இடைவெளி அதிகமாகிப் போகும்போது மக்களிடையே மிகப் பெரிய பொருளாதார இடைவெளி ஏற்படும். யுத்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட எங்கடை பக்கத்திலை, வறுமையின் பிடியிலை பல குடும்பங்கள் இருக்கின்றன.இன்னும் ஒரு தொகுதி அங்கவீனமான, உடல்பாதிப்புள்ள மக்கள் இருக்கினம். இவையின்றை வாழ்க்கைத் தரத்தை உயர்த்திறதிலை கவனம் எடுக்க வேண்டிய வடக்கு மாகாண சபைக்காரர், தங்களுக்குள்ளை பிடுங்குப்பட்டுக் கொண்டிருக்கினம்.'' என்று விரக்தியுடன் சொன்னார்.

''அன்றாட வாழ்க்கைக்கே அல்லாடிற நிலையிலை எங்களை வைச்சிருந்தால்தானே, தேர்தலுக்குத் தேர்தல் வந்து எங்களிட்டை வாக்குப் பொறுக்க அரசியல்வாதிகளுக்கு வசதியாக இருக்கும். வெளிநாட்டிலையிருக்கிற எங்கடை ஆக்கள் கொடுக்கிற காசை, எங்களுக்குப் பயன்படுத்த வசதியாக,முதலமைச்சர் நிதியம் ஒன்றை உருவாக்க முடியாமல் இருக்காம்.அதனை உருவாக்கிறதுக்கு ஆகிற காரியத்தைப் பார்க்காமல்,தங்கடை கதிரைச் சண்டையிலை வாக்குப் பொறுக்கிறவை நேரத்தை வீணாக்கியினம்.'' என்று சலித்துக் கொண்டாள் செல்லாச்சி.

இதற்குப் பேப்பர்தம்பி, ''அதுக்கென்ன செய்யிறது, எல்லாம் தானாக நடக்கும் என்று இருந்தால், நாளைக்கு எது நடந்தாலும் காப்பாற்ற நாதியில்லாத ஆக்களாகப் போயிடுவம் என்பது எங்களுக்குப் புரியும்வரை, இந்த இழி நிலைமை தான் தொடரப்போகுது''-என்றான்.

அப்போது பரபரப்பாக ஜீவனுடன் வந்த ரூபன், ''கிழக்கு ரோட்டிலை ராசாத்தியக்காவின் அம்மாவை யாரோ வீட்டுக்குள்ளை புகுந்து அடிச்சுப் போட்டிட்டுக் கிடந்த நகைகள் எல்லாத்தையும் கொண்டு போட்டாங்களாம்'' என்றான்.

''கனக்கப் போட்டுதாமோ?'' என்று கேட்டாள் செல்லாச்சி.

''கிழவி போட்டிருந்த 16 பவுண் நகைகளைத்தான் கொண்டு போட்டாங்கள்.ஆனால் உயிருக்கு ஆபத்தாம்'' என்று சொன்னான் ரூபன்.

''வீட்டிலை இருக்கிற மனிசிக்கு உவ்வளவு நகை தேவையே?'' என்று கேட்டாள் செல்லாச்சி.

''அப்ப பொம்பிளையள் நகை நட்டுப் போடக்கூடாது என்றே சொல்லுறாய். உண்மையில் நகை என்பது ஒரு சேமிப்புத்தானே. அந்தரம் ஆபத்துக்குக் காசு தேவையென்றால் உதவும் என்று தானே சனம் வாங்கி வைக்கிறது. அரசாங்கத்துக்கும் பொலிசுக்கும் காப்பாற்ற வக்கில்லை.அதை ஒருத்தரும் சொல்ல மாட்டீங்கள்'' என்று புறுபுறுத்தார் ஏரம்பர்.

''தங்கம் சேமிப்பென்றால் தங்கக் காசாக அல்லது கட்டியாக வாங்கித் தகுந்த பாதுகாப்போடை வைக்கலாம்தானே.இப்ப வாங்கிய நகைகள் ஆபத்துக்கு உதவினதா அல்லது ஆபத்தைக் கொண்டு வந்ததா?கிழவி செத்தா நகையையும் போட்டா கொளுத்தப் போகினம். எப்பவும் தங்க நகைகள் அணிவதைத் தவிர்க்கிறதுதான் இனிமேல்காலத்திலை நல்லது'' என்று அனுபவத்தைச் சொன்னார் வாத்தியார்.

இதனைத் தலையாட்டி ஆமோதித்த பேப்பர்தம்பி ''உண்மையில் எதுக்கு பெண்கள் நகை போடுகினம்?அழகுக்கு அழகு சேர்க்கத்தான் என்று சொல்லி வைச்ச மாதிரித்தான் எல்லோரும் சொல்லுவினம்.ஆனாலும் உண்மையான காரணம் அதில்லை.சமூக மதிப்பைக் காட்டத்தான்.இன்னும் பச்சையாகச் சொல்லுவதென்றால், சுத்தியிருக்கிறவை பார்த்து 'எவ்வளவு நகை,இத்தனை மொத்தமான தாலிக்கொடியா, இதுதான் வைரமா?'என்று பொறாமையில் பெருமூச்சு விட, போட்டிருக்கிறவைக்கு மனதில் சந்தோசம் பொங்கும்.வீட்டை வந்தவுடனை 'கலியாணத்துக்கு வந்த எல்லோரும் எத்தினை பவுண் என்று கேட்டவை' எனச் சொல்லி சொல்லி சந்தோசப்படுவதற்கே நகைகள்'' என்று சொன்னான் .

அப்போது ஜீவன் ''ஏரம்பர் சொன்னதிலை ஒரு நியாயம் இருக்குத்தானே.நகை வாங்கிறது அவசரத் தேவைக்கு வித்துக் காசாக்கத்தான் என்று சொன்னவர். களவெடுத்தவனுக்கு அவசரமாகக் காசு தேவைப்பட்டிருக்கு. அதுதான் கிழவிபோட்டிருந்த நகையை எடுத்துக் கொண்டு போட்டான்'' என்று சிரித்தபடி சொன்னான்.

''இப்ப பெண்கள் மட்டுமில்லை.ஆண்களும் சங்கிலியும் மோதிரமும் தம்மை உயர்த்திக் காட்டும் என்று நம்புகினம். ஊரைச் சுத்திக் கடன் இருந்தாலும், இப்பிடிப் பகட்டாக இருப்பதில் ஒரு சுகம் இருப்பதாக நினைக்கினம்''என்று சொன்னான் பேப்பர்தம்பி.

இதைக் கேட்ட வாத்தியார், ''அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று முன்னோர் சொன்னவை.முன்னர் எளிமை என்பது வாழ்க்கை முறையாகச் சொல்லப்பட்டது.இப்ப அது நிர்ப்பந்தமாக மாறி வருகுது. உடுக்கிறதும், சாப்பிடுவதும் வாகனம் வாங்குவதும் கூட அடுத்தவர் பொறாமைப்படவும், அதில் கிடைக்கும் சந்தோசத்தை அனுபவிக்கவுமே என்று கனபேர் அலையும்போது, அதிலிருந்து விலகி தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியவர்கள் நாங்கள் தான்''-என்றார்.

அப்போது கைபேசியிலிருந்து தலையை நிமிர்த்திய ஜீவன், ''நாங்கள் பாயாசத்துக்கு இனிப்புக் காணாது என்று கவலைப்படுகிறம். ஆனால், எங்கடை சனத்திலை எத்தனைபேர் ஒரு வேளைக் கஞ்சிக்கே வழியில்லாது கஷ்டப் படுகினம்''என்று சொன்னான்.

அவனது குரலில் தொனித்த இறுக்கம் விடயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தியது.

''நீ என்னடாப்பா,வழக்கத்தில் இல்லாத திருநாளாக ,வலு 'சீரியஸாக' ஒரு விசயத்தைச் சொல்லுகிறாய்'' என்று நண்பனிடம் கேட்டான் ரூபன்.

''தீவகத்திலை பணியாற்றுகின்ற ஒரு மருத்துவர், முகப்புத்தகத்திலை ஒரு விசயத்தைப் போட்டிருக்கிறார். அதுவும் அவரே நேரில்கண்டு அனுபவித்த விசயம்'' என்று பீடிகை போட்டான் ஜீவன்.

''இவனொருத்தன் ,இழுத்துப் பறிச்சுக்கொண்டு...விசயத்தைச் சொல்லன்'' என்று பொறுமையற்றுச் சொன்னாள் செல்லாச்சி.

''சொல்லுறன்''என்று தொடங்கிய ஜீவன், ''அவர் எழுதியிருக்கிறதை அப்படியே வாசிக்கிறன்''



என்று சொல்லிவிட்டு, கைபேசியிலிருப்பதைச் சத்தமாக வாசிக்கத் தொடங்கினான்.

''இன்று நாரந்தனையில் உள்ள ஒரு பாடசாலைக்கு மாணவர்களின் மருத்துவப் பரிசோதனைக்காக சென்றிருந்தேன்.பத்து வயது மாணவன் ஒருவனைப் பரிசோதிக்கும்போது சோர்வாக இருந்தான். வகுப்பாசிரியரும் வகுப்பில் அம் மாணவன் அடிக்கடி நித்திரை கொள்ளுறான் என்றார். அம் மாணவனிடம் காரணத்தை கேட்ட நான் தலையைத் தாழ்த்தினேன் எனது கண்ணீரை மறைப்பதற்காக. அவனது அம்மாவுக்கு பெண் பிள்ளை பிறந்திருக்கிறது.

''அம்மா பகலில் வேலைக்குச் செல்கிறார். பாவம் இரவில் எழும்பும் குழந்தையை அம்மாவுடன் சேர்ந்து தானும் நித்திரையாக்குவதாகக் கூறினான்.இவனுக்கு நித்திரை இல்லை. பகலிலும் சகோதரர்களைப் பார்த்துக் கொள்வது இப்பத்து வயதுப் பாலகனின் பொறுப்பு. வறுமை; ஒழுங்கான சாப்பாடு கூட இல்லை.

''தீவுப் பகுதியில் கோயில்கள் கட்டுவதற்கு இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் பணம் கொடுப்பவர்களுக்கு இது சமர்ப்பணம்.' என்று அந்த மருத்துவர் எழுதியிருக்கிறார்.தீவகத்திலை மட்டுமில்லை,யுத்தத்தாலை பாதிக்கப்பட்ட எங்கடை மண்ணிலை, இந்த மாதிரி பரிதாபக் கதைகள் அநேகமிருக்கின்றன'' என்று சொல்லி முடித்தான் ஜீவன்.

''நாங்கள் பின் தங்கிய இடங்கள் என்று சொல்லிச் சொல்லிக் கொண்டு இருக்கிறமே தவிர,அந்த இடங்களையும்,அங்கு வாழும் மக்களையும் முன்னேற்றுவதற்கு எந்தவித தூரநோக்குள்ள நடவடிக்கைகளையும் எடுப்பதாக இல்லை'' என்று கவலைப்பட்டார் வாத்தியார்.

''எங்களிடம்தான் மக்களுக்குள் இருந்து வருகின்ற தலைமைகளே இல்லையே. எல்லோரும் தேர்தலுக்குத் தேர்தல்வந்து வாக்குப் பொறுக்கிச் சென்ற பிறகு, அவையை அடுத்த தேர்தலுக்குத் தானே பார்க்க முடியுது.''என்றார் ஏரம்பர்.

அப்போது விறைத்த கால்களை உதறிவிட்ட வாத்தியார், ''எனக்குத் தமிழகத்திலை முதலமைச்சராக இருந்த கர்மவீரர் காமராஜரின் நினைவு வருகிறது காமராஜர் ஆட்சிப் பொறுப்பேற்றபோது எதிர்க்கட்சி மேடைகளில் அவர் உயர்நிலைப் படிப்பைக் கூட முடிக்காதவர், இவருக்கு ஆளும் ஆற்றல் எப்படியிருக்கும் என்று நக்கலடிப்பார்களாம். அப்போது காமராஜர் மிக அடக்கமாக பூகோளம் என்பது நதிகள், மலைகள், பயிர் வகைகள், மக்கள் வாழ்க்கை என்பதைப் பற்றிக் கூறும் கல்வி என்றால் பலரைவிட நான் நன்கறிவேன். புத்தகப் படிப்புதான் பூகோளம் என்றால் அது எனக்குத் தெரியாது, அது எனக்குத் தேவையுமில்லை''என்று கூறினாராம் என்று சொன்னார்.

அப்போது செல்லாச்சி, ''வாத்தியாருக்கு காமராஜரின் நினைவு வருகிறமாதிரி, எனக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு இவையெல்லாம் செய்த பிரசாரம்தான் ஞாபகத்துக்கு வருகிறது'' என்று சொன்னாள்.

''அதிலையென்ன விசேசம்?'' என்று அப்பாவியாகக் கேட்டார் ஏரம்பர்.

''பழைய நோட்டீசுகளை எறியாமல் இன்னும் வைத்திருக்கிறம். எல்லோரும் தங்கடை பேருக்குப் பின்னாலை பட்டங்களைப் போட்டு, தாங்கள் படிச்சவையென்றும், தங்களாலைதான் இந்த மண்ணிலை பாலாறும் தேனாறும் ஓட வைக்க முடியும் என்றும் எங்களைப் பேய்க்காட்டிச் சினம்.நாங்களும் படிச்சவை, பிழைவிடமாட்டினம் என்றுதானே வாக்குப் போட்டு அனுப்பினனாங்கள். இப்ப பார்க்கேல்லையே. படிச்சவை செய்யிற அலங்கோலத்தை'' என்று கடுகடுப்புடன் சொன்னாள் செல்லாச்சி.

''உண்மைதான்'' என்று அதனை ஆமோதித்தபேப்பர்தம்பி, ''இனியாவது இப்ப களத்திலை நிக்கிற அரசியல்வாதிகளின் பட்டியலை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.சீட்டு விளையாடும் போது சீட்டுக்கட்டைக் கலைத்து, மீண்டும் ஒழுங்காக அடுக்குவதுபோல, அவர்களுக்குள்ளைகளையெடுத்து, சரியான நேர்மையான, அதே நேரம் செயற்திறன் உடையவர்களாக இருப்பவர்களை தேர்தல்களில் வேட்பாளராக நிறுத்த வேண்டும். இது இருக்கிற எல்லாக் கட்சிகளுக்கும் பொருந்தும்.அதற்கு மக்கள் அரசியலில் அக்கறை செலுத்தத் தொடங்கவேணும். அதோடை புத்திஜீவிகள், மக்களிடையே அரசியல் உரையாடல்களை ஊக்குவிக்க வேண்டும்'' என்று யதார்த்தத்தைச் சொன்னான்.

''புத்திஜீவிகள் என்னத்தைச் செய்யிறது. விளையாட்டுப் போட்டியின்இடைவேளையிலை பொழுதுபோக்குநிகழ்ச்சிநடத்திற மாதிரி, அவை தங்கடை சொந்த வேலைகளையெல்லாம் முடிச்சுப்போட்டு,இடையிலை அரசியலைப் பார்க்கினம்.பிறகு எப்படி அரசியலில் மாற்றம் வரும்'' என்றாள் செல்லாச்சி.

அப்போது பெருமூச்சொன்று வாத்தியாரிடமிருந்து வெளிப்பட்டது.

''என்ன வாத்தியார், ஏதோ பெரிய விசயம் யோசிக்கிறீங்கள் போல இருக்கு?''என்று கேட்டார் ஏரம்பர்.

எல்லோரும் வாத்தியாரைப் பார்த்தனர்.அவரும் கதைக்கத் தொடங்கினார்.

''இரவு நடந்த விசயத்தை சமூக ஊடகங்களில் பரப்பி, அடுத்தநாள் ஆயிரக்கணக்கில் ஒன்று கூடி, எதிர்ப்புக்காட்டத் தெரிஞ்சஇளைஞர்கள்இருக்கிறார்கள்.இரவிரவாகக் கூடி ஆலோசனை செய்து பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரத் தெரிஞ்ச புத்திஜீவிகளும், மதத் தலைவர்களும் இருக்கிறார்கள். அதே நேரம் மக்களுக்கு உண்மையாக நேர்மையாக உழைக்கத் தயாராயுள்ளவர்களும், செயற்றிறன்மிக்கவர்களும் இருக்கிறாா்கள். ஆனால், இவர்கள் தனித்தனியே இருக்கிறார்கள். இதற்கு தயக்கம், தன்முனைப்பு என்று பல காரணங்கள் இருக்கலாம்.அதோடை இவர்கள் முழு நேரமாக இதில் ஈடுபட முடியாமல் இருக்கிறார்கள். ஆனால், ஊரைஅடித்து உலையில் போடுவதையே தொழிலாகக் கொண்ட இன்னொரு கூட்டம் முழுநேரமாக இங்கு இயங்குகிறது. அது இணைஞ்சு செயற்படுகுது. இப்படிப்பட்ட களநிலைமையில், நாங்கள் எதுவும் நடக்கட்டும் என்று இருந்தால், அழக்கூட உரிமை இல்லாமல் போகும் . இதை சனத்துக்கு உணர வைத்து, அரசியலில் பங்கேற்கச் செய்து, புதிய அரசியல் வியூகத்தை வகுப்பதே இப்போதைய அவசிய நடவடிக்கையாக இருக்கிறது'' என்று சொன்னார்.

''ஆனால் இது இலகுவான வேலையாகவும் இருக்காது.தூய அரசியலில் தாங்கள் காணாமல் ஆக்கப்படுவார்கள் என்று தெரிந்த கும்பல்கள், இதை எத்தகைய குறுக்கு வழிகளைப் பயன்படுத்தியாவது குழப்பவே எத்தனிக்கும். அதைத் தாண்டி எமக்கு நல்லது நடக்க வேண்டும் என்றால், நாமே முன்னின்று,எமக்கான அரசியல் பாதையை அமைக்க எல்லோரும் முன்வரவேணும். அதற்கான வழிகாட்டலை பட்டறிவு மிக்கவர்கள் வழங்க வேண்டும்'' என்று கூறியபடியே எழுந்தான் பேப்பர் தம்பி.

''ஆக மொத்தத்திலை இவை கன்னை பிரிஞ்சு நடத்திற இழுபறிகளாலை ,ஈழத்தமிழர்களின் தலைவிதி ஊசலாடுது'' என்றபடியே கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.

பொன்.வேணு கிருஷ்ணா




### வட கொரியா மீதான அமெரிக்க போர் சாத்தியமா?

கொரிய தீபகற்பத்திற்கு அருகே அமெரிக்கா அதன் இராணுவத்தயாரிப்பை தொடர்ந்துவரும் நிலைக்கு மத்தியில், சமீபத்திய ஒரேவகையான ஏவுகணை சோதனைகளின் தொடர்ச்சியாக, வட கொரியா மேற்கொண்ட ஒரு குறும் தூர ஏவுகணைச்சோதனைவெடிப்பானது வொஷிங்டன் மற்றும் அதன் நட்பு நாடுகளின் மற்றொரு சுற்று கண்டனங்களையும், எச்சரிக்கைகளையும் அது தூண்டியுள்ளது. அந்த பிராந்தியத்தில் அமெரிக்கக் கடற்படை, USS Nimitz ஐயும், அதன் போர் குழுவையும் நிலைநிறுத்தியுள்ளதாகவும், வட கொரியாவிற்கு எதிராக அவர்களது பெரிய தாக்குதல் பலத்தை நிகழ்த்தக் கூடிய விதமாக மூன்று விமானந்தாங்கி கப்பல்களை அங்கு கொண்டுவந்துள்ளதாகவும் அது அறிவித்தது.

அமெரிக்காவின் கோரிக்கைகளுக்கு வளைந்துகொடுத்து பியோங்யாங் அதன் அணுஆயுத மற்றும் ஏவுகணைத் திட்டங்களை கைவிடுமாறு அதனை வலியுறுத்தி "கடும்முயற்சி" செய்துவரும் அதன் அண்டைநாடான சீனாவிற்கு அது ''பெரும் அவமதிப்பைக்'' காட்டியுள்ளது என்று ஜனாதிபதி ட்ரம்ப் இந்த ஏவுகணைச்சோதனைக்குவிடையிறுத்து ட்வீட் செய்துள்ளார். பியோங்யாங் ஆட்சிக்கு கடிவாளமிட தனது பொருளாதார பலத்தைப் பயன்படுத்துவதற்கு, அனைத்திற்கும் மேலாக அதன் நுழைவாயிலில் இருக்கும் போர் அச்சுறுத்தலுக்கு ஊடாக, பீஜிங் மீது வொஷிங்டன் பெரும் அழுத்தத்தைக் கொடுத்துள்ளது.

### வட கொரியாவிற்கு எதிரான அமெரிக்கப் போர்

CBS இன் Face the Nation பற்றி பேசுகையில், சீனா மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தையே கொண்டுள்ளது என்பதை அமெரிக்கப் பாதுகாப்பு செயலர் ஜேம்ஸ் மாட்டிஸ் தெளிவுபடுத்தினார். வட கொரியாவை ''அமெரிக்காவிற்கான ஒரு நேரடி அச்சுறுத்தல், '' என்று அவர் கண்டனம் செய்ததுடன், மேலும் பின்வருமாறு தெரிவிக்கிறார்: ''அணுஆயுதமான ஓர் அணுஆயுத போர் முனையில் அவர்கள் ஒரு கண்டம் விட்டுக் கண்டம் பாயும் பெருவெடி ஏவுகணையை அவர்கள் உருவாக்கும் வரை நாங்கள் காத்திருக்கத் தேவையில்லை.'' வட கொரியாவுடனான எந்தவொரு போரும் "பேரழிவு" கொண்டதாக இருக்கும் என்பதுடன், ''ஒருவேளை பெரும்பாலான மக்கள் அவர்களது வாழ்நாளில் ஈடுபடும் மிக மோசமான ஒரு போராட்டமாகவும்'' அது இருக்கும் என்று மாட்டிஸ் எச்சரித்தார்.

வட கொரியாவிற்கு எதிரான அமெரிக்க போர் உந்துதலானது, பியோங்யாங் ஆட்சியையும், அதன் சிறிய அணுஆயுதத் தொகுப்பை முன்வைத்து அது அச்சுறுத்துவதையும் குறைகூறி இழிவுபடுத்தும் வகையில் ஊடகங்களில் செய்யப்படுகின்ற இடைவிடா பிரசாரத்துடன் இணைந்துள்ளது. அணு ஆயுதங்களைப் பயன்படுத்தக்கூடிய வகையிலான வட கொரியாவின் எந்தவொரு முயற்சியும் ''செயலூக்கம் உடைய மற்றும் பெரும் அடக்குமுறையுடனான'' விடையிறுப்பை, அதாவது அமெரிக்காவின் மிகப்பெரிய அணுஆயுத படைக்கலங்களை பயன்படுத்தி அழிக்கும் திறனை அது எதிர் கொள்ள நேரிடுமென மாட்டிஸ் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய கிழக்கில் அமெரிக்க தலைமையிலான மோதல்களைப் போலவே, வட கொரியாவின் ''பேரழிவு ஆயுதங்கள் மற்றும் அதன் ஒட்டுமொத்த மனித உரிமை மீறல்களும், ஒரு சிறிய, தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நாட்டிற்கு எதிரான போரைத்'' தயாரிப்பதற்கு வசதியான சாக்குப்போக்குகளாக உள்ளன. அமெரிக்க ஏகாதிபத்தியம் ஏனைய, கொள்ளையடிக்கும் வகையிலான, பொருளாதார மற்றும் பூகோள மூலோபாய இராணுவவாத போக்குகளின் காரணமாக மட்டுமே கொரிய தீபகற்பத்தின் மீதான பதற்றங்களின் திடீர் எழுச்சி அடையவில்லை. மாறாக, 2008 இன் உலகளாவிய நிதியியல் நெருக்கடியை அடுத்து மோசமான முதலாளித்துவ முறிவு ஏற்பட்டதன் மூலம் எரியூட்டப்பட்ட நிலையில், ஆசியாவிலும், உலகெங்கிலுமான பூகோள அரசியல் போட்டியாளர்களை விரைவாக கூர்மைப்படுத்தும் ஒரு சாதனமாக வட கொரியாவிற்கு எதிரான ட்ரம்பின் ஆக்ரோஷமும், அச்சுறுத்தும் நிலைப்பாடும் இருக்கிறது.

1991 இல் சோவியத் ஒன்றியத்தின் பொறிவிற்கு பின்னர், அதன் போட்டியாளர்களிடமிருந்து வரும் எந்தவொரு பொருளாதார அல்லது இராணுவ ரீதியான சவால்களைத் தடுப்பதாகவும், அதிலும் குறிப்பாக யுரேஷிய நிலப்பகுதியை ஒன்று அல்லது அதற்கு மேற்



பட்ட போட்டியாளர்கள் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுப்பதாகவும் தான் அமெரிக்க மூலோபாயத்தின் முக்கிய நோக்கமாக இருந்துவருகிறது.

முன்னாள் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் Zbigniew Brzezinski, 1997இல் வெளியுறவு விவகார சஞ்சிகையில் இருந்த நியாயத்தை பின்வருமாறு விளக்கினார்; ''யுரேஷிய நிலப்பகுதி மீதான அதிகாரப் பகிர்வுடன் என்ன நடக்கிறதென்பது அமெரிக்காவின் உலகளாவிய முன்னுரிமை மற்றும் வரலாற்று மரபுக்கு தீர்க்கமான முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். ஓர் உறுதியற்ற யுரேஷியாவில், எந்தவொரு நாடோ அல்லது நாடுகளின்கலவையோ, அமெரிக்காவை வெளியேற்றவோ அல்லது அதன் தீர்க்கமான பங்கை குறைக்கும் திறனையோ கொண்டிருக்காது என்பதை உறுதி செய்வதற்கான உடனடிப் பணியாக உள்ளது.''

1950 இலிருந்து 1953 இற்கு மத்தியில், வட கிழக்கு ஆசியாவில் அமெரிக்கா அதன் மேலாதிக்க நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற் காக மில்லியன் கணக்கிலான உயிர்களைப் பலியெடுத்த ஒரு குற்றவியல் போரை அமெரிக்கா சீனாவிற்கு எதிராக கொரிய தீபகற்பத்தின் மீது நடத்தியது. பியோங்யாங் உடன் எந்தவொரு சமாதான உடன்படிக்கையிலும் வொஷிங்டன் ஒரு போதும் கையொப்பமிடாத நிலையில், அதன் மீதான வாஷிங்டனின் அணுகுமுறை எப்பொழுதும் ஒரு இடைவிடாத விரோதப் போக்காகவே உள்ளது. சோவியத் ஒன்றிய பொறிவுக்குப் பின்னர், அமெரிக்க மூலோபாயம் ஆட்சி மாற்றத்தையும், சீனாவின் செலவில் அதன் செல்வாக்கு மண்டலத்துக்குள் வட கொரியாவை இணைப்பதையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. 1994 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் வட கொரியாவுடன் அதன் சார்பான அணுஆயுத ஒழிப்பு குறித்த உடன்படிக்கை எதையும் அமெரிக்கா மேற்கொள்ளத் தவறிவிட்டது.

வட கொரியா மீதான அமெரிக்க தாக்குதலினால் அதிகரித்துவரும் அபாயமும், அமெரிக்க அரசியல் ஆளும் வர்க்கத்திற்கும், அரச இயந்திரத்திற்கும் இடையேயான வெளிநாட்டுக்கொள்கை மீதான ஒரு வெளிப்படையான மறைக்க முடியாத உள்நாட்டு யுத்தமும் ஒரே காலகட்டத்தில் நிகழ்கின்றன. உண்மையில், அங்குள்ள கருத்துவேறுபாடுகள், அமெரிக்கா யுரேஷியாவில் அதன் மேலாதிக்கத்திற்கான உந்துதலில், ரஷ்யா அல்லது சீனா எதன் மீது முதலில் கவனம் செலுத்தவேண்டும் என்ற தந்திரோபாயம் தொடர்பானதே. மாஸ்கோவுடனான ஒரு மோதலுக்குப் பதிலாக பீஜிங் உடனான ஒரு மோதலை நோக்கி அமெரிக்க வெளியுறவுக் கொள்கையை மாற்றுவதற்கான ட்ரம்பின் முயற்சிகளைத் தடுப்பதன் மூலமாக, ரஷ்யாவிற்கு தொடர்புடையதாகக் கூறப்படுகின்ற ட்ரம்ப் நிர்வாகத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்த நிலையான தடை உந்தப்படுகிறது.

சீனாவை தனிமைப்படுத்தவும், இராணுவ ரீதியாக அதனை சுற்றி வளைப்பதற்குமான உந்துதலாக இருந்த ஒபாமா நிர்வாகத்தின் ஆசியாவை நோக்கிய முன்னிலை கொள்கை தோல்வியடைவது குறித்து அதிகரித்து வரும் அறிகுறிகளுக்கான விடையிறுப்பின் ஒரு பகுதியாகவே பெய்ஜிங் மீதான வாஷிங்டனின் வட கொரியாவின் மீதான அதன் அழுத்தம் உள்ளது, ஜனாதிபதி ரொட்ரிகோ டுரேற்றவின் கீழ் பிலிப்பைன்ஸின் சரிவு, வாஷிங்டனிலிருந்து விலகியதாகவும், பெய்ஜிங் உடனான நெருக்கமான உறவுகளை நோக்கியதாகவும் இருப்பது, ஆசியா எங்கிலும் மற்றும் சர்வதேச ரீதியாகவும் சீனாவில் பொருளாதார வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதற்கு இதே போன்ற மோதல்களின் மிக வெளிப்படையான அடையாளமாகவும் உள்ளது.

(கேள்வி தொடரும்)



**எந்தவொரு நாடோ அல்லது நாடுகளின் கலவையோ, அமெரிக்காவை வெளியேற்றவோ அல்லது அதன் தீர்க்கமான பங்கை குறைக்கும் திறனையோ கொண்டிருக்காது என்பதை உறுதிசெய்வதற்கான உடனடி பணி**

ட்ரம்ப் மற்றும் அவரது நிர்வாகத்தின் இலக்குகளைக் கொண்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, பியோங்யாங் ஆட்சியை அழிக்கும் ஒரு போரானது சீனாவைப் பலவீனப்படுத்தி, வலுவற்றுப் போகச்செய்வதை இலக்காகக் கொண்டிருக்கும்என்பதுடன், அமெரிக்காவிற்கும் மற்றும் அதன் நட்பு நாடுகளான வட கிழக்கு ஆசியா, ஜப்பான் மற்றும் தென் கொரியாவிற்கும் எப்பொழுதும் எதிரான ஒரு முக்கியமான முட்டுக் கட்டையாக வட கொரியாவை எப்போதும் கருதுகின்றது.

## வடகொரியாவுக்குப் போட்டியாக தென்கொரியாவும் ஏவுகணைச் சோதனை!

வடகொரியாவுக்குப் போட்டியாக தென் கொரியாவும் ஏவுகணைச் சோதனையை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் எதிர்ப்பு, பொருளாதாரத் தடைகளையும் மீறி வடகொரியா அணு ஆயுதச் சோதனைகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. சமீபகாலமாக அந்த நாடு அணு ஆயுதங்களை ஏந்திச் சென்று கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனைகளையும் நடத்துகிறது.

இதனால் தென் கொரியாவுக்குப் பாதுகாப்பாக அமெரிக்கா தனது போர்க்கப்பலை கடற்பகுதியில் நிறுத்தியது. ஆனாலும் தற்போது போர் மூளும் சூழல் சற்றுத் தணிந்துள்ளது. இந்த நிலையில், வட கொரியாவுக்குப் போட்டியாக தென்கொரியாவும் ஏவுகணைச் சோதனையை நடத்தியுள்ளது. தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே முன்னிலையில் தென்மேற்கு கடற்பகுதியில் 'ஹியுன்மூ - 2' ஏவுகணைச்சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

## தென் மேற்கு சீனாவில் மண்சரிவு: 100 இற்கும் மேற்பட்டோர் மாயம்!





பீஜிங், ஜூன் 25

தென் மேற்கு சீனாவில் உள்ள சிச்சுவான் மாகாணத்தில் இடம்பெற்ற மண்சரிவில் சிக்கி சுமார் 100 இற்கும் அதிகமானோர் மண்ணில் புதைந்துள்ளனர். இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சிச்சுவான் மாகாணத்தில் அமைந்துள்ள மலை அடிவாரத்தில் உள்ள ஷின்மோ என்ற கிராமத்தில், நேற்றுச் சனிக்கிழமை காலை ஏற்பட்ட திடீர் மண் சரிவில் 40 வீடுகள் மண்ணோடு மண்ணாகப் புதைந்தன. இதில், அந்த வீடுகளில் வசித்து வந்த 100 இற்கும் மேற்பட்டவர்கள் மண்ணில் புதைந்தனர். இவர்கள் அனைவரும் உயிரிழந்திருக்கக் கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மண்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் பேரிடர் மீட்புக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர் என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த மண்சரிவு தொடர்பில் முழுமையான விவரங்கள் இன்னும் வெளியாகாத நிலையில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என நம்பப்படுகிறது.

சமீப காலமாக கனமழை காலங்களில் சீனாவில் இது போன்ற மண்சரிவுகள் அதிகமாக இடம்பெறுகின்றன. சீனாவின் மத்திய பகுதியில் உள்ள ஹுபே மாகாணத்தில் கடந்த ஜனவரியில் மண் சரிவு ஏற்பட்டது. அந்த மண்சரிவில் அங்குள்ள விடுதி ஒன்று புதைந்தது. இதில் 12 பேர் உயிரிழந்தனர். இதேபோல், கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஏற்பட்ட மண்சரிவில் 8 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பாகிஸ்தானில் தொடர் குண்டு வெடிப்பு: ஒரே நாளில் 62 பொதுமக்கள் உயிரிழப்பு!





இஸ்லாமாபாத், ஜூன் 25

பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஒரே நாளில் தீவிரவாதிகள் நடத்திய மூன்று குண்டு வெடிப்புத் தாக்குதல்களில், 62 அப்பாவிப் பொதுமக்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் நாட்டில் பலுசிஸ்தான் மாகாணத்தின் தலைநகரான குவெட்டா நகரின் மையப்பகுதியில் உள்ள பொலிஸ் அலுவலகத்தின் அருகே உள்ள கடை வீதிகளில் ரமழான் மாதம் என்பதால் அதிகளவிலான மக்கள் குவிந்திருந்தனர். அப்போது, அங்கு வந்த சந்தேகத்துக்குரிய காரைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதனையடுத்து, காரில் இருந்த வெடிகுண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்தது.

இந்தத் தாக்குதலில் 17 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்தனர்.

இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ந்த அதிர்ச்சி நீங்குவதற்குள்ளாகவே, அடுத்த ஒரு மணித்தியால இடைவேளையில் குர்ராம் நகரத்தில் பழங்குடிகள் அதிகம் வசிக்கும் பகுதியான பரச்சினாரில் உள்ள சந்தையில் இரட்டை குண்டுகள் அடுத்தடுத்து வெடித்தன. இந்தத் தாக்குதல்களில் 45 பேர் உயிரிழந்தனர். 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதல்களில் பலியானோரின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

மேற்கண்ட மூன்று குண்டு வெடிப்புகளுக்கும் பாகிஸ்தானைமையமாக கொண்டு செயற்படும் தெரிக்-இ-தாலிபான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

தீவிரவாதிகளை வேட்டையாட இராணுவம் மும்முரம்

இந்தத் தாக்குதலை அடுத்து, ஆவேசமடைந்துள்ள அந்த நாட்டு இராணுவம் தெரிக்-இ-தாலிபான் மட்டுமல்லாமல் ஏனைய தீவிரவாத இயக்கங்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க முடிவெடுத்துள்ளது. அதன்படி, உளவுத்துறையுடன் இணைந்து தீவிரவாதிகளைத் தேடும் பணியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

நாடுமுழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது எனவும் தீவிரவாதிகளை தேடும் பணியில் இராணுவத்தினரோடு சிறப்பு பொலிஸாரும் இணைந்துள்ளனர் என இராணுவசெய்தித் தொடர்பாளர் ஆசிப் கபூர் தெரிவித்துள்ளார்.

## உலகின் சக்தி வாய்ந்த 5 மனிதர்களின் பட்டியல் வெளியானது!

2017 ஆம் ஆண்டின் உலகின் சக்தி வாய்ந்த மனிதர்களின் பட்டியலை பிரபல போர்ப்ஸ் பத்திரிக்கை வெளியிட்டுள்ளது.

**விளாடிமிர் புடின்**

ரஷ்யாவின் ஜனாதிபதி புடின் இந்த பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். கடந்த 2012 ஆம் ஆண்டில் இருந்து ஜனாதிபதி பதவியில் இருக்கும் புடின் ஏற்கனவே இரு முறை ரஷ்யாவின் பிரதமராகவும் பதவி வகித்துள்ளார்.

**ஏஞ்சலா மெர்கல்**

கடந்த 2005 ஆம் ஆண்டில் இருந்து ஜேர்மனியின் அதிபராகப் பதவி வகிக்கும் ஏஞ்சலா கடந்த 2007 ஆம் ஆண்டு ஐரோப்பிய கவுன்சிலின் தலைவராகவும் பொறுப்பேற்றார். அந்த பதவியில் அமர்ந்த இரண்டாவது பெண் என்ற பெருமையும் ஏஞ்சலா வசமே உள்ளது.

**பராக் ஒபாமா**

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான ஒபாமா முதல் முறையாக அந்தப் பதவியைக் கடந்த 2009 ஆம் ஆண்டு ஏற்றார். அதன்பிறகு நடந்த தேர்தலிலும் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுச் சாதனை படைத்தார் ஒபாமா.

**போப் பிரான்ஸிஸ்**

போப் பிரான்ஸிஸ் ரோமன் கத்தோலிக்கத் தேவாலயத்தின் 266 ஆவது போப்-ஆக இவர் கடந்த 2013 ஆம் ஆண்டு பதவியேற்றுக் கொண்டார். ஏழை மக்களிடம் அதிக இரக்கம் காட்டுபவராக அறியப்படும் போப் பிரான்ஸிஸ் 'மனித உரிமைகள்', அதிலும் முக்கியமாக பெண்களின் உரிமைகளுக்காக அதிகம் போராடுபவராகத் திகழ்கிறார்.

**ஜீ ஜின்பிங்**

சக்திவாய்ந்த மனிதர்கள் பட்டியலில் 5ஆவது இடத்தில் இருக்கும் ஜீ ஜின்பிங், சீனாவின் ஜனாதிபதி ஆவார். இவர் கடந்த 1999 ஆம் ஆண்டில் இருந்து 2002 ஆம் ஆண்டு வரை ஆளுநராக இருந்துள்ளார்.

## லண்டன் கேம்டன் பகுதியில் இருந்து 800 குடும்பத்தினர் வெளியேற்றம்!


வடக்கு லண்டன் கேம்டன் பகுதியில் உள்ள குடியிருப்புகளில் வசிக்கும் 800 குடும்பத்தினர் அவசரமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

லண்டனில் கடந்த வாரம் கிரென்பெல் அடுக்குமாடித் தொடரில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து, இது போன்ற தீ விபத்து ஏற்படாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே கேம்டன் பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

கட்டடத்தின் வெளியே பூசப்பட்டுள்ள அலங்கார ஓடுகள் எளிதில் தீ பிடிக்கும் வகையில் இருக்கின்றமையால், அதை நீக்குதல், கட்டடத்தில் புதைக்கப்பட்டுள்ள மின்சார இணைப்புகளைப் பரிசோதனை செய்தல் போன்ற காரணங்களுக்காகவே மக்கள் வெளியேற்றப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நான்கு வாரங்கள் இந்த பராமரிப்பு பணி நடைபெறும் எனவும், அதுவரை, குடியிருப்பு வாசிகள் தனியார் விடுதியில் தங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் கேம்டன் சபை அறிவித்துள்ளது.

# தமிழக மீனவர் பிரச்சினைக்கு கச்சதீவை மீட்பதே ஒரே தீர்வு!



அமைச்சர் ஜெயக்குமார் தெரிவிப்பு

சென்னை,ஜூன் 25

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்குக் கச்சதீவை மீட்டால்தான் தீர்வு கிடைக்கும்.இதன்மூலமே மீனவர்களின் உரிமையைப் பாதுகாக்க முடியும்.

-இவ்வாறு அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்தார்.

சென்னையில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

1974 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த கருணாநிதி கச்சதீவை இலங்கைக்குத் தாரை வார்த்தார். அதுவரை இந்திய எல்லை கச்சதீவு வரை விரிவாக இருந்தது. 500 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழக மீனவர்கள் அங்கு மீன் பிடித்துள்ளனர்.

1991 ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா சுதந்திர தினத்தன்று கொடியை ஏற்றி வைத்து கச்சதீவை மீட்க வேண்டும் என்று கூறினார். தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வந்தார்.உச்ச நீதிமன்றத்தில் அவரது பெயரிலேயே வழக்கும் தொடர்ந்தார். இப்போதும் நாங்கள் அவரது வழியில் கச்சதீவை மீட்கும் விடயத்தில் உறுதியாக இருக்கிறோம்.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடிக்கின்றமை தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. கச்சதீவுப் பகுதியில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுட்டுக் கொல்கின்றமை கண்டனத்துக்குரியதாகும். கச்சதீவு இந்தியாவின் ஒரு பகுதி. இந்தப் பகுதி மீட்கப்பட்டால் முழு அளவில் தமிழக மீனவர்களின் உரிமை பாதுகாக்கப்படும்.-என்றார். (ச)

## லைக்கா பற்றிப் பேசுவதற்கு வேல்முருகனுக்குத் தடை!



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் லைக்கா குழுமம் தொடர்பு கொண்டு செயற்படுகிறது என அவதூறு தெரிவித்த தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகனுக்கு எதிரான தடை உத்தரவு ஒன்று சென்னை உயர் நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உண்மைக்குப் புறம்பான அவதூறுகளை லைக்கா குழுமம் மீது சுமத்திய வேல்முருகனுக்கு எதிரான மான நஷ்ட வழக்கு ஒன்றை, லைக்கா குழுமம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்திருந்தது. இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சென்னை உயர் நீதிமன்றம், வேல்முருகனைக் கடுமையாகக் கண்டித்தது.

மேலும், வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், லைக்கா நிறுவனம் தொடர்பாகவோ அல்லது அதனுடன் தொடர்புடையவர்கள் பற்றியோ பொதுவெளியில் பேசக்கூடாது என்ற தடை உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்தது. (ச)

## ஆந்திராவில் 4 கால்களுடன் ஆண் குழந்தை பிறந்தது!

காக்கிநாடா,ஜூன் 25

ஆந்திரா மாநிலம் காக்கிநாடாவில் 4 கால்களுடன் ஆண்குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

ஆந்திரா மாநிலம் காக்கிநாடா மாவட்டத்தில் உள்ள துபஸ்வரம் கிராமத்தைச் சேர்ந்தவர் மணிமாலா.

25 வயதான அவர் நிறைமாதக் கர்ப்பிணி ஆவார். நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் அவருக்கு பிரசவ வலி ஏற்பட்டது. உடனடியாக அவரைக் காக்கிநாடாவில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர்.

இந்த நிலையில், அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை 4 கால்களுடன் பிறந்துள்ளது. இதனைக் கண்ட மருத்துவர்கள் ஆச்சரியம் அடைந்தனர்.

இதுபற்றி அந்த மருத்துவமனையின் குழந்தைகள் நல சிறப்பு மருத்துவர் மணிகயம்பா கூறுகையில்-

'அந்தக் குழந்தையின் வயிற்றுப் பகுதியை ஒட்டிய படி 4 கால்களும் உள்ளன. 10 லட்சம் குழந்தைகளில் ஒரு குழந்தை இவ்வாறு வித்தியாசமான முறையில் பிறக்க வாய்ப்புள்ளது' -என்றார்.

மேற்படி குழந்தையும், தாயும் நலமாக இருக்கின்றனர் என மருத்துவமனை அறிவித்துள்ளது.

குழந்தையை மட்டும் தீவிரசிகிச்சைப்பிரிவில் வைத்து கண்காணித்து வருகிறார்கள்.

இதற்கிடையே 4 கால்களுடன் பிறந்த குழந்தை பற்றி காக்கிநாடா பகுதியில் பரபரப்பாகத் தகவல் பரவியது. இதையடுத்து, மருத்துவமனை முன்பு ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டனர். ஆனால், மருத்துவமனை நிர்வாகம் அதை ஏற்கவில்லை. இதையடுத்து, பொலிஸார் வரவழைக்கப்பட்டு கூட்டத்தினர் கலைக்கப்பட்டனர். (ச)

## ராஜீவ் கொலை வழக்குக் கைதிகள் விடுதலை:

# மத்திய, மாநில அரசுகளே முடிவு எடுக்க வேண்டும்!

### அமைச்சர் நிர்மலா சீதாராமன் கருத்து



திருச்சி,ஜூன் 25

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்களை விடுவிக்கின்றமை தொடர்பில் மத்திய, மாநில அரசுகளே முடிவெடுக்க வேண்டும்.

-இவ்வாறு மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

திருச்சியில் வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பல கோணங்களில் நீதிமன்றம் விசாரணை நடத்தி உள்ளது. குற்றவாளிகளுக்கான கருணை மனுக் கூட குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டு, இவர்களின் தண்டனைக் காலம் முடிந்துவிட்டமையால், விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை தமிழகத்தில் எழுந்துள்ளது.

மேலும், ரோபர்ட் பயஸ், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற ஒரு கைதி. அவரது கருணை மனு ஜனாதிபதியால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் தன்னைக் கருணை கொலை செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் என தமிழக அரசிடம் அவர் மனு கொடுத்துள்ளார். இந்த வழக்கு சட்ட நுணுக்கங்கள் மற்றும் மனித உரிமைகளுடன் சம்பந்தப்பட்டது. எனவே, மத்திய அரசு இதில் தனிப்பட்ட முறையில் முடிவெடுக்க முடியாது. (ச)

## இந்தியாவில் 7 கோடி பேருக்கு நீரிழிவு நோய்!

இந்தியாவில் 6 கோடியே 90 லட்சம் பேருக்கு நீரிழிவு நோய் உள்ளது.


-இவ்வாறு அப்பலோ மருத்துவமனை துணைத் தலைவர் பிரீத்தா ரெட்டி தெரிவித்தார்.

சென்னையில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உலகின் நீரிழிவு நோய் தலைநகரமாக இந்தியா மாறி வருகிறது. இந்தியாவில் நீரிழிவு நோயால் 13 லட்சம் பேர் இறந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# ராஜீவ் கொலை வழக்கில் கைதான எழுவருக்கும் பரோல் வழங்குங்கள்!

### சீமான் வலியுறுத்துகின்றார்



சென்னை,ஜூன் 25

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதான பேரறிவாளன் உட்பட 7 பேருக்கும் 'பரோல்' வழங்கவேண்டும்.


-இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அண்ணாவின் பிறந்த நாளையொட்டி 8 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்தவர்கள் எல்லாம் விடுதலை செய்யப்படும்போது, 25 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்த 7 தமிழர்களையும் விடுதலை செய்ய மறுப்பது ஏன்?

இவர்கள் 7 பேரையும் விடுதலை செய்ய மறுக்கின்றமை மனித உரிமை மீறல் ஆகும். பேரறிவாளன், சாந்தன், முருகன், ரோபர்ட் பயாஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரமன் மற்றும் நளினி ஆகிய 7 பேருக்கும் உடனடியாகப் 'பரோல்' வழங்கப்படவேண்டும்.- என்றுள்ளது. (ச)

## வெற்றிகரமாக ஏவப்பட்டது பி.எஸ்.எல்.வி சி–38




முப்பது துணைக்கோள்கள் மற்றும் 'கார்ட்டோசாட்- 2 ' செயற்கைக்கோளுடன், பி.எஸ்.எல்.வி. சி-38 செயற்கைக் கோள் விண்ணில் ஏவப்பட்டுள்ளது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள முதலாவது ஏவுதளத்தில் இதற்கான நேரக் கணிப்பு கடந்த வியாழக்கிழமை காலை 5.29 மணிக்குத் தொடங்கியது. இந்த நிலையில், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 9.29 மணிக்கு இந்தச் செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்பட்டது.

மொத்தமுள்ள 30 செயற்கைகோள்களில் 29 செயற்கைக்கோள்கள் அமெரிக்கா உள்ளிட்ட 14 வெளிநாடுகளில் தயாரானவை. ஒன்று மட்டும் இந்தியாவில் தயாரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



# குசல் மெண்டிஸ் என்னை விடவும் திறமையானவர்!

## குமார் சங்கக்கார கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 25

இளம் வீரரான குசல் மெண்டிஸ் அவரது தற்போதைய வயதில் அடைந்திருக்கும் (சாதனை) அடைவு மட்டத்தை நான் அப்போதைய எனது வயதில் பெற்றிருக்கவில்லை என இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான குமார் சங்கக்கார, கருத்து வெளியிட்டுள்ளார்.

மேலும், குசல் மெண்டிஸ் தனது இளவயதில் வெளிக்காட்டிய திறமைகள் குறித்து இலங்கை அணியின் முன்னாள் தலைவரான சங்கக்கார பாராட்டுக்களை தெரிவித்துள்ளதோடு, தற்போதைய மெண்டிஸின் வயதில் தான் இருந்த போது தான் வெளிக்காட்டிய ஆட்டத்தினை விட மிகவும் முன்னேற்றகரமான ஆட்டத்தை அவர் காட்டுகிறார் என்றும் கூறியுள்ளார்.

குசல் மெண்டிஸ், கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக இலங்கையில் இடம்பெற்றிருந்த டெஸ்ட் போட்டியொன்றில், 176 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இதன் மூலம் அந்தப் போட்டியில் திருப்புமுனையை ஏற்படுத்தியிருந்த அவர் கிரிக்கெட் உலகிற்கும் தன்னால் சாதிக்க முடியும் என்பதனை வெளிக்காட்டியிருந்தார்.

மெண்டிஸ் தனது 21 ஆவது வயதில் பெற்றிருந்த இந்தச் சதமானது, ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக இந்தத் தசாப்த காலத்தில் வயது குறைந்த இளம் வீரர் ஒருவரினால் பெறப்பட்ட சதமாகப் பதிவாகியிருந்தது. அத்துடன், ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக 150 ஓட்டங்களைக் கடந்த, வயது குறைந்த இளம் வீரர்களில் இரண்டாவது வீரராகவும் அச்சதம் மூலம் மெண்டிஸ் தன்னை அடையாளப்படுத்தியிருந்தார்.

தற்போது, மீளக்கட்டியெழுப்பப்படும் அனுபவம் குறைந்த இலங்கை அணியில், முக்கிய துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக காணப்படும் மெண்டிஸ், குமார் சங்கக்கார தனது கன்னி டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்த வயதிற்கு (23 வயது) இரண்டு வயது குறைவான நிலையில் தனது முதல் சதத்தினை பூர்த்தி செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சங்கக்கார, மெண்டிஸ் உடன் சேர்த்து ஏனைய சில இலங்கை வீரர்களின் அண்மைய ஆட்டங்களுக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்.

இதுதொடர்பில் சங்கக்கார தெரிவித்தவை வருமாறு:-

நான் குசல் மெண்டிஸை கடந்த வருடம் ஆஸ்திரேலிய அணியுடனான டெஸ்ட் போட்டியில் பார்த்திருந்தேன். அவரது ஆட்டம் மிகவும் ரசிக்கும் விதமாக காணப்பட்டிருந்தது. அப்படியான ஒரு ஆட்டத்தை, நான் எனது அப்போதைய வயதில் கனவில் கூட நினைத்துப் பார்த்திருக்கவில்லை.

அதே போன்று, அசேல குணரத்ன ஆஸ்திரேலிய அணியுடன் இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடிய விதம், லஹிரு குமார தென்னாபிரிக்க அணியியை தனது பந்து வீச்சினால் கட்டுப்படுத்தியிருந்த விதம், துஷ்மந்த சமீர நியூஸிலாந்தில் பந்து வீசிய விதம், லக்ஷன் சந்தகன் ஆஸ்திரேலிய அணியை நிலைகுலையச் செய்த விதம், போன்ற இளம் வீரர்களின் ஆட்டத்தைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருந்தேன். இதனாலேயே, இலங்கை கிரிக்கெட் மீது ஒரு நல்லெண்ணம் காணப்படுகிறது என குமார் சங்கக்கார குசல் மெண்டிஸ் பற்றியும், ஏனைய வீரர்கள் பற்றியும் தெரிவித்துள்ளார்.

குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்தன மற்றும் திலகரத்ன டில்ஷான் ஆகிய முக்கிய வீரர்களின் ஓய்விற்குப் பின்னர், இலங்கை அணியானது சர்வதேச கிரிக்கெட்டில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

எனினும், தற்போது நடைபெற்று முடிந்திருக்கும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இலங்கை வீரர்களின் ஆட்டம் முன்னேற்றம் அடைந்திருந்ததனை அவதானிக்க முடியுமாக இருந்தது.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இருந்து இலங்கை அணி வெளியேறி இருப்பினும் குசல் மெண்டிஸ், நிரோஷன் திக்வெல்ல, தனுஷ்க குணதிலக மற்றும் அசேல குணரத்ன ஆகிய வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிக்காட்டியிருந்தனர்.

இவ்வாறான வீரர்கள் இலங்கை அணிக்கு கிடைத்திருப்பது துவண்டு போயிருந்த இலங்கை கிரிக்கெட் அணி மீண்டும் புத்துயிர் அடைந்து வருவதை உறுதிப்படுத்துகிறது.

# நெட்வெஸ்ட் ரி.20 தொடரிலிருந்து விலகினார் மஹல ஜெயவர்தன!

லண்டன், ஜூன் 25

எதிர்வரும் ஜூலை மாதம் இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் நடைபெறவுள்ள நெட்வெஸ்ட் இரு பதுக்கு 20 தொடரில் விளையாடுவதற்கு ஒப்பந்தமாகியிருந்த இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹல ஜெயவர்தன தனிப்பட்ட காரணங்களுக்காக கலந்து கொள்ள மாட்டார் என்று லங்காஷயர் உள்ளூர் கிரிக்கெட் கழகம் அறிவித்துள்ளது.

ஐ.பி.எல். போட்டிகளின் நடப்புச் சம்பியன்களான மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளரான மஹல ஜெயவர்தன எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி டர்ஹாம் ஜெட்ஸ் அணிக்கெதிரான ஆரம்பப் போட்டியில், லங்காஷயர் அணி சார்பாக களமிறங்கவிருந்தார்.



மஹல, சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் கடந்த வருடம் சமர்செட் அணிக்காகவும், அதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் உள்ளூர் இருபதுக்கு 20 போட்டிகளுக்காக கராச்சி கிங்ஸ் அணி சார்பாகவும், நியூஸிலாந்து உள்ளூர் இருபதுக்கு 20 போட்டிகளில் சென்ட்ரல் ஸ்டேஜ் அணி சார்பாகவும் பங்கு பற்றியிருந்தார்

தற்பொழுது 39 வயதான மஹல ஜெயவர்தன 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண இருபதுக்கு 20 போட்டிகளில் இலங்கை அணி வெற்றி பெறுவதற்கு பங்களிப்புச் செய்திருந்தார்.

அதேவேளை, இருபதுக்கு 20 போட்டிகளில் இதுவரை மொத்தமாக 5 ஆயிரத்து 455 ஓட்டங்களையும் குவித்துள்ளார்.

மஹலவின் விலகல் குறித்து லங்காஷயர் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் களேன் சப்பல் கருத்துத் தெரிவிக்கையில்-

மஹல ஜெயவர்தன நெட்தொவெஸ்ட் இருபதுக்கு 20 தொடரிலிருந்து விலகியுள்ளமை மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கின்றது.

நாங்கள் தற்போது மஹல ஜெயவர்தனவுக்குப் பதிலாக வேறொரு வீரரை இணைத்துக் கொள்வதற்கு மீளாய்வு செய்து வருகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இது குறித்து மஹல தெரிவிக்கையில்-

ஏற்கனவே திட்டமிட்டபடி நெட்வெஸ்ட் இருபதுக்கு 20 போட்டிகளில், லங்காஷயர் அணியிலிருந்து எதிர்பாராத காரணங்களால் விலக நேர்ந்தமை மிகவும் ஏமாற்றம் அளிக்கின்றது. எனினும் இந்த தொடரில், லங்காஷயர் அணியின் வெற்றிக்காக வாழ்த்துகின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற நெட்வெஸ்ட் இருபதுக்கு 20 போட்டிகளின் போது சமர்செட் அணிக்காக விளையாடிய மஹல ஜெயவர்தன 10 போட்டிகளில் துடுப்பாடி மொத்தமாக 239 ஓட்டங்களைக் குவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.சி.சி.யின் வருமானப் பகிர்வில் இலங்கைக்கு 13 கோடி டொலர்கள்!

டுபாய், ஜூன் 25

ஐ.சி.சி. வருமானப் பகிர்வில் இலங்கைக்கு 12கோடி 80 லட்சம் டொலர்கள் கிடைக்கவிருக்கின்றது.

அதேபோல், இந்தியாவிற்கு 405 மில்லியன் டொலர்கள் கிடைக்கவிருக்கிறது. இங்கிலாந்துக்கு 1.39 மில்லியன் டொலர்கள் கொடுக்க ஐ.சி.சி. சம்மதம் தெரிவித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் நடத்தும் தொடர் மூலம் கோடிக்கணக்கில் வருமானம் கிடைக்கிறது. இந்த வருமானங்கள் அனைத்து நாட்டுக் கிரிக்கெட் சபைகளுக்கும் பிரித்து கொடுக்கப்படும். இதில் இந்திய, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைகளுக்கு அதிக அளவில் வருமானப் பகிர்வு கிடைத்திருந்தது.

தற்போது லண்டனில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தியாவுக்கு 40 கோடி 50 லட்சம் டொலர்கள் வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

அதன்படி இங்கிலாந்துக்கு 13கோடி 90 லட்சம் டொலர்களும், ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், நியூஸிலாந்து, இலங்கை மற்றும் பங்களா தேஷ், ஆகிய அணிகளுக்கு தலா 12 கோடி 80 லட்சம் டொலர்களும் வழங்க ஐ.சி.சி. ஒப்புக் கொண்டுள்ளது.

## தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ண தலைமையிலான நவ சமசமாஜக் கட்சியின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

ஜயம்பதி விக்ரமரட்ணவும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டார்.

"சிவாஜிலிங்கம் போன்றோர் சில நேரம் தமிழ் மக்களின் சார்பில் இனவாதப் பேச்சுக்களை வெளியிடுகின்றனர். சில நேரம் இனவாதத்தை தூண்டும் கடினமான பேச்சுக்களையும் கூறுகின்றனர். அவற்றில் ஒன்றைக் கூட நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

"இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மத்தியஸ்த தீர்மானத்திற்கு வந்திருக்கும் சந்தர்ப்பத்தில் அதனைத் தோற்கடிக்கும் நோக்கில் வடக்கில் சில இனவாதக் குழுக்கள் முயற்சித்து வருகின்றன. இது உண்மை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்துவதே அவர்களின் நோக்கம். இதற்கு நாங்கள் முழுமையாக எதிர்ப்பை வெளியிடுகின்றோம்.

"யாழ்ப்பாணத்திற்குச் சென்றும் இதற்கு எதிராக நான் பேசியுள்ளேன். இன்று வடக்கு இனவாதிகள் தென்னிலங்கை இனவாதிகளைப் பலப்படுத்துகின்ற அதேவேளை, தெற்கு இனவாதிகள், வடக்கு இனவாதிகளை சக்திப்படுத்துகின்றனர்.

"தென்மாகாண சபையிலும் அதற்கு உட்படாத சில விடயங்கள் தொடர்பில் பிரேரணைகளை நிறைவேற்றுகின்றன. வடமாகாண சபையிலும் இது இடம்பெறுகின்றது.வடமாகாண சபை குறித்து நாங்கள் கவலைப்படுகின்றோம்.

"கடந்த காலங்களில் அதிகாரங்களை சரிவர பயன்படுத்தாமல் விக்னேஸ்வரனின் தலைமைத்துவம் சில அரசியல் அறிவிப்புக்களை விடுத்து வருகின்றது.

"எனினும், அந்தப் பேச்சுக்களால் எந்தவித பயனும் இல்லை. தென்மாகாண சபையும் இருந்திருந்து இதுபோன்ற செயற்பாட்டில் ஈடுபடுகின்றது." – என்றார் அவர்.

## அனந்திக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி சேனாதிராசா இணங்கவில்லை என்று அறியவந்தது.

தமிழரசுக் கட்சிக்குரிய அமைச்சர் பதவியை யாருக்கு வழங்குவது என்பது குறித்துக் கட்சி இரண்டொரு நாள்களில் தீர்மானித்து- முதல்வருக்குத் தெரிவிக்கும் என்றும் –

ஈ.பி.ஆர்.எல்.எவ். தரப்புக்கு ஒதுக்கிய அமைச்சர் பதவியை அக்கட்சியுடன் பேசித் தீர்மானிக்கும்படியும் –

மாவை சேனாதிராசா தரப்பில் முதல்வருக்குத் தெரியப்படுத்தப்பட்டதாகவும் அறியவந்தது. (உ)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் கடந்த வியாழக்கிழமை காலை 8.00 மணிமுதல் ஆரம்பித்த வேலை நிறுத்தம் நேற்றுவரை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கத்துக்கு வந்த மாவை சேனாதிராசாவைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு நல்ல முறையிலும், புரிந்துணர்வு மிக்கதாகவும், இருவருக்குமே திருப்தி தரும் விதத்திலும் அமைந்ததாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

★ வடக்கு மாகாண சபையில் ஏற்பட்டுள்ள அமைச்சரவை வெற்றிடங்களை நிரப்புவது குறித்து இருவருமே பேசி, கலந்துரையாடி, அடுத்த மூன்று நாள்களுக்குள் ஒரு தீர்மானத்தை எடுத்தல்.

★ கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும், முதல்வரும் மாதத்துக்கு ஒரு தடவை – அல்லது தேவைப்படும் சமயங்களில் – சந்தித்துப் பேசி, தீர்மானங்களை எடுத்தல்.

★ வடக்கு மாகாண சபை ஆளும் தரப்புக்குள் ஐக்கியத்தையும், வடக்கு மாகாண சபை ஆளும் தரப்புக்கும் தமிழ்க் கூட்டமைப்புக்கும் இடையில் பிளவு ஏதும் இல்லை, ஐக்கியமாகச் செயற்படுகின்றோம் என்பதையும் மக்களுக்கும், தேசத்துக்கும், சர்வதேசத்துக்கும் எடுத்துக் காட்டும் விதத்தில் புரிந்துணர்வுடன் செயற்படுதல்.

– இவைபோன்ற முடிவுகளை இரு தலைவர்களும் தங்களுக்குள் பேசி எட்டினர் என்று மிக நம்பகரமாக அறியவந்தது.

### மாவை கூறியவை

இந்தச் சந்திப்புக் குறித்து, சந்திப்பின் பின்னர் மாவை. சேனாதிராசா ஊடகங்களுக்குத் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

முதல்வர் வெற்றி பெற்ற பின்னர், தமது வெற்றிக்கு வித்திட்ட இந்த இடத்துக்கு வந்திருக்கின்றமை மிகுந்த மகிழ்வைத் தருகின்றது.

இங்கு, மாகாண சபையில் அண்மையில் ஏற்பட்ட குழப்பங்கள், அவற்றுக்கான தீர்வுகள் குறித்துப் பேசினோம்.

மாகாண சபையில் நாம் பிளவுபட்டு நிற்கின்றமை எமது இனத்தின் நலனுக்கு எவ்வகையிலும் உதவுவதாக இருக்க முடியாது

அமைச்சர் பதவிகளுக்காகச் சண்டை போடுவதில் அர்த்தமில்லை. அப்படிச் சண்டையிடவும் கூடாது.

இங்கு மாகாண சபையில் அமைச்சுப் பதவிகளை ஏற்பது அல்ல. அதற்காகப் போராட்டங்களை நடத்துவது அல்ல. அதையும் விடப் பெரிய பிரச்சினை எமக்குள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குச் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்து வருகின்றது. நாடாளுமன்றத்திலும் இதற்கான முன்னெடுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

மேலும் மீள் குடியேற்றம், இராணுவத்தினரால் காணி அபகரிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பரிகாரம் போன்ற விடயங்களும் தீவிரமாகப் பேசப்படுகின்றன.

நல்லாட்சி அமைக்கப்பட்டுள்ள போதும் அது மக்களுக்கு முழுமையான பலனை அளிக்காத நிலையில், அவை தொடர்பிலேயே கவனம் செலுத்த வேண்டும். அது தொடர்பில் இருவரும் கலந்துரையாடினோம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பது தொடர்பில் வடக்கு மாகாண சபையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் எதிர்காலத்தில் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்பதில் இணக்கப்பாட்டைக் கண்டுள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், வடமாகாண முதலமைச்சரும், கூட்டமைப்பின் ஏனைய கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பிலும் இத்தகைய பிரச்சினைகள் எழாது செயற்படுவது தொடர்பிலும் இணக்கம் கண்டுள்ளோம்.

மேலும் தற்போது கிடைத்துள்ள சர்வதேச சந்தர்ப்பத்தை நாங்கள் முறையாகப் பயன்படுத்தி தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்காக ஒன்றுப்பட்டு இயங்குவதற்கும் இணங்கியுள்ளோம்.

எதிர்காலத்தில் இவ்வாறான சந்திப்புக்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடனும், முதலமைச்சருடனும் மேற்கொள்வது என்பதிலும் இணக்கம் கண்டுள்ளோம். – என்றார்.

### மதியுரைஞர் நிமலன் வெளியேற்றப்பட்டார்

வடக்கு மாகாண முதலமைச்சரை அண்மைக் காலத்தில் சந்தித்துப் பேசச் செல்லும் பல அரசியல் தலைவர்களும், தங்களால் முதலமைச்சருடன் தனித்துப் பேச முடிவதில்லை என்றும் –

சதா நேரமும் முதல்வருடன் அவரின் மதியுரைஞர் நிமலன் கார்த்திகேயனும் ஒட்டிக் கொண்டு உடனிருப்பதால் தங்களால் முதல்வருடன் மனம் விட்டுப் பேச முடிவதில்லை என்றும் –

முறைப்பாடு கூறிவருகின்றமை தெரிந்ததே.

நேற்று முன்தினம் முதல்வர் விக்னேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் இந்தியாவின் துணைத் தூதுவர் நடராஜனைச் சந்தித்த சமயம் கூட முதல்வருடன் மதியுரைஞர் நிமலனும் ஒட்டிக் கொண்டிருந்தார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் வடமாகாண சபையின் ஆளும் கட்சிக்குள் ஏற்பட்ட குழப்பத்தை அடுத்து இவ்விடயத்தில் சமரசத்துக்கு முயன்ற பல கட்சித் தலைவர்களும் கூட, முதல்வர் இணக்கம் ஒன்றுக்கு வருவதற்கு அவருக்குப் பக்கத்தில் சதா தொங்கிக் கொண்டிருக்கும் அவரின் மூலோபாய மதியுரைஞர் நிமலன் கார்த்திகேயன் விடுகின்றார் இல்லை என்றும், முதல்வரை எப்போது தவறாகத் தூண்டி வழிநடத்துகின்றார் என்றும் பல இடங்களிலும் வெளிப்படையாகக் கூறுகின்றமையை அவதானிக்க முடிந்தது.

நேற்று மாலை சேனாதிராசாவை முதல்வர் விக்னேஸ்வரன் சந்திக்கச் சென்ற போதும் மதியுரைஞர் நிமலன் ஒட்டிக் கொண்டு சந்திப்பு அறைக்குள் செல்ல முயன்றார் எனத் தெரிகின்றது.

எனினும், மாவை சேனாதிராசாவின் வழிகாட்டல் உத்தரவைப் பெற்றிருந்த அவரின் காவலர்கள் முதல்வர் விக்னேஸ்வரனை மட்டுமே உள்ளே அனுமதித்தனராம்.

அதையும் மீறி உள்ளே நுழைய முயன்ற நிமலனைப் பார்த்து "நான் முதலமைச்சருடன் தனியே பேசவிரும்புகிறேன்." – என்று மாவை சேனாதிராசா நிமலனின் முகத்துக்கு நேரடியாகவே கூறினார் என்று கூறப்பட்டது.

அதையடுத்து, முதல்வர் விக்னேஸ்வரனின் முகத்தைப் பார்த்த நிமலன்.

"நாங்கள் சந்தித்துப் பேசி முடியும் வரை சற்று வெளியில் காத்திருங்கள் நிமலன்." – என்று முதல்வரும் தம்பாட்டுக்குக் கூறினார் என்று தெரிகின்றது.

இதனால் கோபமுற்ற மதியுரைஞர் நிமலன், அங்கு காத்திருக்காமல், வெடுக்கென வெளியேறி, தமது காரில் ஏறி அங்கிருந்து புறப்பட்டார் எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## காரைநகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வசதி கருதி காரைநகரில் இருந்தும் படகுச்சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தினால் இந்தப் படகுச் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று தொடக்கம் பெருந்திருவிழா நிறைவடையும் வரை பக்தர்கள் இந்தப் படகுச் சேவை மூலம் ஆலயத்திற்கான போக்குவரத்தை மேற்கொள்ள முடியும்.

காரைநகரில் இருந்து தினமும் காலை 9 மணிக்கு நயினாதீவை நோக்கிப் புறப்படும் படகு நயினாதீவில் இருந்து மதியம் 2.30 மணிக்கு மீண்டும் காரைநகருக்குப் புறப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (மு)

## சிறிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கட்சியின் ஏற்பாட்டில் கம்பஹா மாவட்ட அத்தனகல்லைத் தொகுதி முஸ்லிம் உறுப்பினர்களுக்கான இப்தார் நிகழ்வு நேற்றுமுன்தினம் திஹாரியலப்ஸன் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே முன்னாள் ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார். இந்நிகழ்வில் சு.கவின் முஸ்லிம் அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

பௌத்த தர்மத்தின் அடிப்படையைச் சரியாகப் புரிந்து கொள்ளாத குழுவே இதில் ஈடுபட்டுள்ளதாகவும் சந்திரிகா அங்கு மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (உ)

## 10 இணைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) செய்தார்.

வடக்கு மாகாண சபை முதலமைச்சருக்கு எழுதியமை போன்று ஒரு கடிதமே இவ்வாறு பரபரப்பாகப் பரவி விடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் நாடாளுமன்ற சபாநாயகரிடம் சிறிதரன் எம்.பி. முறைப்பாடு செய்திருந்தார்.

சபாநாயகரின் வழிகாட்டலுக்கு அமையவே நேற்று மதியம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தமது முறைப்பாட்டை அவர் உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்தார். (உ)

## காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) னால் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து காணப் படுகின்றனர் எனக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் போனோரைக் கண்டறியும் பணியகத்தை அமைப்பதற்கான சட்டமூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அதில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து காணப்படுகின்றனர்.

ஆகவே இந்த விடயம் குறித்து அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இனியும் காலம் தாமதிக்கக்கூடாது. – என்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கோரியுள்ளார்.

## ரயில் நிலையங்கள் அசுத்தமாக உள்ளன!

நாட்டில் பெரும்பாலான புகையிரத நிலையங்கள் அசுத்தமான நிலையில் இருப்பதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் புகையிரத நிலையங்கள் மற்றும் வழிதடங்கலை சுத்தம் செய்யும் செயற்றிட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கை புகையிரத நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மலேரியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) றிதழை இலங்கைக்கு சர்வதேச சுகாதாரஸ்தாபனம் வழங்கியுள்ள நிலையிலேயே இந்தப் புதுவித நோய் பற்றிய எச்சரிக்கை வெளியாகியிருக்கின்றது.

மலேரியா கிருமிகளைக் காவிச் சென்று பரப்பும் நுளம்பு வகையே இப்போது அவதானிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் மலேரியா நோய்க் கிருமிகள் அண்மைக்காலத்தில் இலங்கையில் பரவவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

'அனோப்பிளிப்ஸ்ற் இவன்சி' என்ற 'புதுவகை நுளம்பே பேசாலையை அண்மித்த கரையோரப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் பரவியுள்ளது.

இந்தப் புதுவித நுளம்பு நகரப்புறங்களில் மலேரியா பரப்புவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. குறிப்பாக இலங்கையின் முக்கிய நகரங்களைத் த்தாக்கி மலேரியாவைப் பரப்பலாம் என்ற அபாயத்திற்கு இலங்கை உள்ளாகியுள்ளது. எனவே, இது சம்பந்தமான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் மிக வேகமாக ஏற்படுத்தப் படவேண்டும். இந்த நுளம்பை அழிப்பதற்கான மக்கள் ஒத்துழைப்பு மிக அவசியமானதாகத் தேவைப்படுகின்றது.

இந்த நுளம்பு தற்போது பாழடைந்த கிணறுகளிலும், பாவனைக்கு உட்படுத்தப்படுகின்ற கிணறுகளிலும் அதிகளவான குடம்பிகளைப் பெருக்கி மலேரியா நோயைப் பரப்புவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றது.

எனவே, இதற்காக இலங்கை மலேரியா தடை இயக்கமும், மன்னார் மாவட்ட மலேரியா தடை இயக்கமும் மக்களுடன் இணைந்து மிக முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றன.

இந்த நுளம்பு தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் விரைவாகப் பரப்பப்பட்டு வருகிறது எனவும் வைத்திய அதிகாரி கே.அரவிந்தன் மேலும் தெரிவித்துள்ளார்.

மலேரியாயாவைப் பரப்பும் நுளம்பு இலங்கையில் உள்ள போதும் மலேரியாக் கிருமிகள் இலங்கையில் இல்லை. அதனால் இந்த நுளம்புகளினால் மலேரியா நோயைப் பரப்ப முடியாமல் இருக்கக் கூடும்.

ஆனால், மலேரியாக் கிருமிகள் இன்னும் எஞ்சியுள்ள ஆபிரிக்க நாடு ஒன்றுக்குச் செல்லும் இலங்கையர் ஒருவர் அந்தக் கிருமித் தொற்றுடன் இலங்கைக்கு வந்து இங்கு சில நாள்கள் தங்குவாராயின் அவர் மூலம் மீண்டும் இலங்கைக்குள் மலேரியாக் கிருமி பரவும், அதனால் மீண்டும் அந்த நோய் பரவும் ஆபத்து ஏற்படவும் பெரும் வாய்ப்பிருப்பதாக எச்சரிக்கப்படுகின்றது. (உ)

## நாளை மின் தடை

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை-

காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ் பிரதேசத்தில் வதிரி, இரும்புமதவடி, சக்களாவத்தை, தேவரையாளி, மனோகரா, திக்கம், திக்கம் சித்திவிநாயகர் கோவிலடி ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## ஆலய உற்சவங்கள்

இருபாலை, ஜூன் 25

இருபாலை, கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவமும் தொடர்ந்து ஆலயத்தில் வழமை போன்று சமய அறிவுப் போட்டியும் இடம்பெறும். (இ)

***

அரியாலை, ஜூன் 25

யாழ். அரியாலை வெட்டுக்குளம் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான திவ்விய மகோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும், மறுநாள் சப்பைரதத் திருவிழாவும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும், வியாழக்கிழமை பூங்காவனமும் இடம்பெறும். (இ)

***

சாவகச்சேரி, ஜூன் 25

சாவகச்சேரி நுணாவில் மத்தி அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி ஆலய வைரவப் பெருமானின் இலட்சார்ச்சனை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை வரை இடம்பெறவுள்ளன.

நித்திய மற்றும் இலட்சார்ச்சனைக் குருவான சிவஸ்ரீ.தே. பிரசன்னக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ள இலட்சார்ச்சனை நிகழ்வுகள் காலை 8.30 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடம்பெறவுள்ளது.

பத்துத் தினங்களும் வைரவப் பெருமானுக்கு பஞ்சவிம்சதி கலச(25) சங்காபிஷேகமும், நியாசபூசை, இலட்சார்ச்சனை விசேட பூசை என்பனவும் இடம்பெறவுள்ளன.

இலட்சார்ச்சனை பூர்த்தி தினமாகிய 5 ஆம் திகதி புதன்கிழமை 8.30 மணி முதல் வைரவப் பெருமானுக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகமும் (108) மாலை 5.30 மணி முதல் இலட்சார்ச்சனை பூர்த்தியும், திருவூஞ்சல் உற்சவமும் இடம்பெறும். (இ)

## தவறாகவே சிந்திப்பவர்கள் தலைவர்கள்

# தமிழ் மக்கள் எப்போதுமே விழிப்பாக இருக்க வேண்டும்!

## பேராசிரியர் சிவசேகரம் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜூன் 25

தமிழர்களைப் பொறுத்தவரை மக்கள்தான் எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும். தலைவர்கள் அல்லர். தலைவர்கள் எப்பொழுதும் தவறாகவே சிந்திப்பவர்கள். அவர்கள் தங்களின் அரசியலுக்கு அப்பால் செல்லமாட்டார்கள்.

-இவ்வாறு பேராசிரியர் சிவசேகரம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்ற சமகால அரசியல் நிலைவரம் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்கள் தங்களின் அரசியல் பிரதிநிதிகளிடம் கேள்வி கேட்கும் நிலைமை உருவாக வேண்டும். பொறுப்புக் கூறும்படி கோரவேண்டும்.

ஆனால், எங்களுடைய மக்களைப் பொறுத்தவரை எங்களுக்கு ஏன் வீண் வம்பு என எல்லாவிடயங்களிலும் ஒதுங்கியிருக்கின்றனர். தலைவர்கள் தவறாக இருப்பதற்கு மக்களுடைய இந்தப் போக்குத்தான் காரணம்.

சமூகத்தில் எங்கு அநீதி நடந்தாலும் அதற்கு எதிராகக் குரல் கொடுக்க பின் நிற்கக் கூடாது. மக்கள் தங்களுக்குள் அரசியல், சாதி, இன, மத பிரதேசவாதங்களால் பிளவுபட்டு நிற்கின்றமை மக்களையே பலவீனப்படுத்துகிறது. -என்றார். (ச)

# இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் சர்வதேச யோகா தினம்!





வடமாகாண கல்வி மற்றும் சுகாதார அமைச்சின் இணை அனுசரணையில் வவுனியா நகரசபை மைதானத்தில் சர்வதேச யோகா தினம் இடம்பெற்றுள்ளது.

இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப் பாணம் மற்றும் கிளிநொச்சியைத் தொடர்ந்து நேற்று வவுனியாவில் யோகா தினம் துணைத் தூதுவர் ஆர். நடராஜன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதில் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அத்துடன், வவுனியா தெற்கு வலய கல்விப்பணிப்பாளர் வீ. இராதாகிருஷ்ணன், தமிழருவி த.சிவகுமாரன், தமிழ்மணி அகளங்கன், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வின் இறுதியில் யோகா சிறப்பு மலரும் கலந்துகொண்ட அதிதிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் பாதுகாப்பு ஆலோசகர் இராணுவத் தளபதியுடன் சந்திப்பு!



கொழும்பு, ஜூன் 25

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரகத்தில் கடமை புரிந்து விடைபெற்றுச் செல்லும் பாதுகாப்பு ஆலோசகரான கேணல் முகமட் ரஜீல் இர்ஷாட் கான் நேற்றுமுன்தினம் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வாவைச் சந்தித்துள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இருவருக்கும் இடையில் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்புச் சம்பந்தமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என இராணுவத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தாம் சேவையாற்றிய காலப்பகுதிகளில் இலங்கை இராணுவத்தால் தனக்குக் கிடைத்த ஒத்துழைப்புத் தொடர்பாக பாகிஸ்தான் பாதுகாப்பு ஆலோசகரால் இராணுவத் தளபதிக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு தனியான இடங்கள்!

கொழும்பு நகரில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு இரண்டு அல்லது மூன்று இடங்களைத் தனியாகப் பெயரிட வேண்டும் என்ற யோசனையை அமைச்சர் மகிந்த அமரவீர அடுத்த வாரம் இடம்பெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கத் திட்டமிட்டுள்ளார் என அவரது அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பு நகரில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளை நடத்துவதன் காரணமாக ஏற்படும் போக்குவரத்து தடை மற்றும் இயல்பு வாழ்க்கைக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் கற்கை நெறிகளை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேயும் சிறப்பு விருந்தினராக இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் தலைவர் எந்திரி (கலாநிதி) லயனல் பின்ரோவும் கலந்து கொள்வர். (இ)

## பெரியபுலம் ம.வி. பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் ந.பரமேஸ்வரன் தலைமையில் பாடசாலையின் கனகசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பழைய மாணவரான யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் பரமலிங்கம் சத்தியகுமாரும் சிறப்பு விருந்தினராக யாழ். பெரியபுலம் மகாவித்தியாலய ஓய்வு நிலை அதிபர் ஏ.விவேகானந்தனும் கௌரவ விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரி எஸ். எக்ஸ். அன்ரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகளைக் கலந்துகொள்ளுமாறு பாடசாலை சமூகம் அழைக்கின்றது. (இ)

## இளவாலையில் இன்று இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

இளவாலை பழனியானந்தன் சனசமூக நிலையத்தில் உறுப்பினராகப் பணியாற்றி அமரத்துவமடைந்த சப் இன்ஸ்பெக்டர் அமரர் ஆ.துரைராஜசிங்கத்தின் நினைவாக நடத்தப்படும் இரத்ததான முகாம் இன்று ஞாயிறு காலை 8.30 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (இ)

## பொதுக்கூட்டம்

கோண்டாவில், ஜூன் 25

கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலைய பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு சனசமூக நிலைய கீழ் மண்டபத்தில் நடைபெறும் என சனசமூக நிலைய செயலாளர் கு.மதுசூதன் அறிவித்துள்ளார். (இ)




# 'செல்பி' உயிரிழப்புகள் தொடர்கின்றன: அரநாயக்காவில் நேற்று இளைஞர் பலி!

**நீர்வீழ்ச்சிக்கு முன் நின்று செல்பி எடுத்தபோது விபரீதம்**

அரநாயக்க தோதல்ஓய பெரவில பிரதேசத்தில் நீர் வீழ்ச்சி ஒன்றில் 'செல்பி' எடுக்க முற்பட்ட இளைஞர் ஒருவர் கீழே வீழ்ந்து உயிரிழந்தார். அம்பாறையைச் சேர்ந்த எம்.கே.சேனக்க மதுரங்க (வயது 34) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

அம்பாறையில் இருந்து உஸ்ஸபிட்டிய அலுபாத பிரதேசத்தில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தபோதே நேற்று மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

உயிரிழந்தவர் உட்பட ஏழு இளைஞர்கள் சேர்ந்து தோதல்ஓய பிரதேசத்தில் நீர்வீழ்ச்சி ஒன்றைப் பார்க்கச் சென்றுள்ளனர்.

இவர்கள் மொரட்டிய பாலத்திற்கு அருகில் 'செல்பி' எடுக்கும் நேரத்தில் இந்த இளைஞர் தவறிக் கீழே விழுந்து படுகாயமடைந்து உயிரிழந்தார் எனக் கூறப்படுகின்றது. சம்பவம் குறித்து அரநாயக்க பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

**உடன் வாடகைக்கு**

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் கட்டடத் தொகுதி வாடகைக்கு உண்டு. 2ஆம் மற்றும் 3ஆம் மாடிகளில் 3000 சதுர அடி (750 சதுர அடி x 4)

தொடர்புகளுக்கு:
0777344074, 0777396176

**வேலை வாய்ப்பு**

எமது பத்திரிகை நிறுவனத்தில்
கீழ்வரும் பதவிகளுக்கான வேலைவாய்ப்பு உள்ளது.
ஆர்வமுடையவர்கள் விண்ணப்பிக்கவும்

1. சந்தைப்படுத்தல் அலுவலர்
2. பண வசூலிப்பாளர்கள்
3. பத்திரிகை விநியோகம் செய்பவர்கள்

தகைமை:-
★ செல்லுபடியான மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள்
★ 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்

ஆர்வமுடையவர்கள் நேரில் வரவும் அல்லது தொடர்பு கொள்ளவும்

காலைக் கதிர்
பத்திரிகை நிறுவனம்
இல.30, இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக் கல்லூரி முன்பாக)
அழையுங்கள்:- 075 712 8371 / 021 222 2600

## இதயம் நெகிழ்ந்த அஞ்சலி



எமது நிறுவனத்தின் கணினிப் பிரிவு அலுவலர் செ.இராஜேந்திராவின் அன்புத் தாயார்
திருமதி
**செல்வராசா புவனேஸ்வரி**
அவர்களின் பிரிவால் துவண்டு போயுள்ள அவரது குடும்பத்தினரின் துயரில் 'காலைக்கதிர்' குழுமமும் இணைந்து கொள்கிறது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்:
'காலைக்கதிர்' பணியாளர்கள்.







# ஜேர்மன் டுஸில்டோர்வ் கற்பக விநாயகர் மகா கும்பாபிஷேகம்



ஜேர்மனியின் டுஸில்டோர்வ் மாநிலத்தின் மேபுஷ் நகரத்தில் உள்ள இலங்கையர் இராஜலிங்கம் குகதாசனின் இல்லத்தை ஒட்டி புதிதாக அமைக்கப்பட்டுள்ள கற்பக விநாயகர் ஆலயத்தின் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நேற்று கிரியைகளுடன் தொடங்கி சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

ஏவிளம்பி வருடம் ஆனித்திங்கள் 11ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (இன்று) காலை 9.35 மணி முதல் 10.40 மணி வரையுள்ள சுபநேரத்தில் விநாயகப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹெயர்லாண்ட் (ஹொலண்ட்), லிம்பேர்க் முருகன் கோயிலைச் சேர்ந்த சிவாகமபூஷணம், சிவாகமஞான சூரியன் அகோர சிவாச்சாரியார் சிவஸ்ரீ உருத்திரானந்தக் குருக்கள் பிரதிஷ்டா குருவாக அமர்ந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.

பிரான்ஸைச் சேர்ந்த சர்வசாதகம் சிவஸ்ரீ சிவ. பாலேந்திரக்குருக்கள், முன்னேஸ்வரம் சிவஸ்ரீ தியாக மதிமன்ன சிவாச்சாரியார் ஆகியோரும் உதவிக் குரு பிரம்மஸ்ரீ ராகவசர்மாவும் இந்தக் கும்பாபிஷேகக்கிரியைப் பணியில் பங்குகொள்வர்.

இலங்கையின் அளவையூர் தவில் வித்துவான் ந.குமரகுருவின் புதல்வன் நாதஸ்வர இசை ஞான வேந்தன் குமரகுரு சசீதரன் மற்றும் அவரது குழுவினர் இணைந்து இந்தக் கும்பாபிஷேகத்தின் போது இசை விருந்தளிப்பர்.

இந்தக் கோயிலை ஸ்தாபித்துள்ள இ.குகதாசன் யாழ். இந்துக் கல்லூரியின் பழையமாணவர். உரும்பிராய் வடக்கு ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோவிலடியைப் பூர்வீகமாகக் கொண்டவர். ஜேர்மன் நீதி அமைச்சுடன் இணைந்து பணியாற்றும் உரிமம் பெற்ற மொழிபெயர்ப்பு நிறுவனம் ஒன்றை நீண்டகாலம் நடத்திவருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை





எமது சேவை 365 நாட்களும்

விரைவாகவும் பாதுகாப்பாகவும்
72 மணி நேரத்தில்
உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும்
(EXPRESS SERVICE)

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும்
(Door to Door Service)

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 3536

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர்வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 6113